# இந்து தமிழ் திசை

தமிழால் இணைவோம்


சென்னை / காஞ்சிபுரம் பதிப்பு ● வியாழன், ஜூலை 29, 2021

RNI No.TNTAM/2018/76449 Vol.4 No.209

https://www.hindutamil.in

● அச்சகம்: சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி ●

● 12 பக்கங்கள் ₹ 7


(C) KSL Media Ltd.

NETFLIX PRESENTS

NAVA RASA

9 FILMS 9 EMOTIONS

DIRECTED BY PRIYADARSHAN

PRODUCED & PRESENTED BY

MANI RATNAM & JAYENDRA PANCHAPAKESAN

6 AUGUST | NETFLIX

TAMILTH ALL 1 Sub_Front_Page M. RAJESH Time

இந்து தமிழ் திசை

# ஆனந்த ஜோதி

உள்ளத்தில் உண்மை ஒளி

வியாழன், ஜூலை 29, 2021

anandajothi@hindutamil.co.in

# உண்மையான தகப்பனார்!

▪ தஞ்சாவூர்க்கவிராயர் ▪

அகத்தைத் தேடி 60

**துருவன், நம்மாழ்வார், வள்ளலார் போன்று மிக பால்ய வயதிலேயே ஆன்மிக விழிப்பைப் பெற்றவர் பாலயோகி. ஆந்திர மாநிலத்தில் கிழக்கு கோதாவரி பகுதியில் மும்முடிவரம் கிராமத்தில் 1930ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23ஆம் தேதி பிறந்தார். தந்தை கடிகிதல கங்கையா. தாயார் வெங்கம்மா. பாலயோகி பிறக்கும்போது, அவரது பெற்றோர் வசித்த சேரியில் குடிசையைத் தவிர வேறு சொத்து இல்லை.**

பாலயோகியின் இயற்பெயர் சுப்பராயடு என்பதாகும். பாலயோகி தமது மூன்றாவது வயதில் தாயை இழந்தார். பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்படவில்லை. தகப்பனாருடன் சேர்ந்து மாடு மேய்ப்பதில் காலம் கழிந்தது. வயல் பக்கம் தனி இடமொன்றில் தியானத்தில் மூழ்குவார். வாயில்லாப் பிராணிகள் மீது வாஞ்சை அதிகம்.

### உடம்பெல்லாம் எறும்புகள்

நாட்கள் செல்லச் செல்ல உட்புற எண்ணங்களின் அலைகள் இவரைத் தற்கொலைக்குத் தூண்டின. ஆனால் அதே எண்ணங்களில் மோதுண்டு, தெய்விக நிலையில் திவலைகளாகச் சிதறியது அவரது மனம். பல மணிநேரம் வயல்களின் நடுவே மௌனத்தின் ஆழங்களில் மூழ்கி வீற்றிருப்பார். ஒரு முறை வயலுக்குப் போனார். மூன்று நாட்கள் மௌனமாக உட்கார்ந்துவிட்டார். தகப்பனார் பல இடங்களில் தேடி பிறகு சணல் பயிர் இடையே தனது குழந்தை உட்கார்ந்திருப்பதைக் கண்டார். அவர் உடல் முழுவதும் எறும்புகளால் சூழப்பட்டிருந்தது.

தகப்பனார் இவரை வற்புறுத்தி வீட்டுக்கு அழைத்துப் போனார். தாகமில்லை, பசியில்லை, களைப்புமில்லை. சுப்பராயடு உடம்பெங்கும் களிப்பே தாண்டவமாடியது. கற்றார்க்கும் கல்லார்க்கும் களிப்பருளும் களிப்பு அது.

இவருக்கு 16 வயது ஆனபோது ஊரில் அம்மன் திருவிழா நடந்தது. பக்தர்கள் கையில் கோயில் பூசாரி ஒரு படத்தைக் கொடுத்தார். அந்தப் படத்துக்கு பூபோட்டு பூஜை செய்யவேண்டும். அதுவரை தெய்விகப் புருஷர்களின் படம் எதையுமே பார்த்தறியாத சுப்பராயடு கையில் நாரதர் படம் கொடுக்கப்பட்டது. படத்துடன் தென்னந்தோப்பு ஒன்றில் தவத்தில் ஈடுபட்டார் சுப்பராயடு. திருவிழா முடிந்தும் தென்னந்தோப்பிலிருந்து அவரை அகற்ற முடியவில்லை. திரிலோக சஞ்சாரியான நாரதருடன் அவர் அண்ட பகிரண்டமெல்லாம் சுற்றுவதுபோல சுகாசனத்தில் வீற்றிருந்தார். பேய் பிடித்து விட்டதோ என்று தகப்பனார் மாந்திரீகர்களை அழைத்து வந்தார். மாந்திரீகர்கள் அவரை நெருங்கவும் அஞ்சிப் பின்வாங்கினர்.



### உருவானது தியான நிலையம்

வெயில் அடித்தது; மழை கொட்டியது. தியானம் கலையாது வீற்றிருந்த பாலயோகியைக் கண்டு கிராமத்தார் பயபக்தியுடன் அவரைச் சுற்றி கூரை வேய்ந்தனர். பக்தர்கள் வரலாயினர். சுப்பராயடு என்று அவரைக் கூப்பிடவும் கூசினர். பாலயோகி என்று உதடுகள் உச்சரிக்க அவர் முன்பு விழுந்து வணங்கினர். பக்தர்கள் காணிக்கை குவிந்தது. அவரைச் சுற்றி ஒரு பெரிய தியான நிலையமே உருவானது. இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தியானம் தொடர்ந்தது. கறுப்பு நிறமான அவர் உடல் பொன்னிறமாகச் சுடர்விட்டது. உணவு உண்பதில்லை, குளிப்பதில்லை. ஆனால் தோற்றப் பொலிவோ கூடிக்கொண்டே போயிற்று.

### வள்ளலார் வழியில்

இரண்டாண்டுகள் எட்டு மாதங்கள் இவ்விதம் சென்றபின் காக்கிநாடாவில் சுங்கவரி அதிகாரியாகப் பணிபுரிந்த சத்தியராஜு என்பவர் யோகியைக் காண வந்தார். அவரிடம் யோகி வாய்திறந்து பேசினார். மக்களால் தன்னுடைய தவத்துக்கு இடையூறு ஏற்படுவதாகவும் தமக்குத் தொந்தரவு இல்லாமல் இருக்க தாம் தவமியற்றும் அறைக்குப் பூட்டுப்போட வேண்டும் என்றும் தெரிவித்தார். அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க சத்தியராஜு பாலயோகியின் அறைக்கு ஒரு பூட்டைப் போட்டார். இதனை ஊர் மக்கள் எதிர்த்தனர். காவல் துறைக்கும் ரெவின்யூ அதிகாரிகளுக்கும் புகார் அளித்தனர். அவர் தியான அறைக்குப் பூட்டுப் போடுவதற்கு தடைவிதித்து 144 சிஆர்பி சட்டம் நிறைவேற்றப்பட்டது.



26.10.1949-ல் மாவட்ட கலெக்டரும் உதவி கலெக்டரும் உண்மை அறிய மும்முடிவரம் வந்தனர். அவர்களிடம் பாலயோகி தன் விருப்பப்படியே கதவு பூட்டப்பட்டதாகவும் சைகைகளால் தெரிவித்தார்.

இனி யாரும் அவரைத் தொந்தரவு செய்யாதபடி கதவைத் தாமே பூட்டிக்கொள்வதாகவும் தானே கதவு திறக்காதவரை அதை வலிந்து கஷ்டப்பட்டோ கடினமாகவோ யாரும் திறக்கக் கூடாது என எச்சரித்தார். சிவராத்திரி தினத்தில் மட்டும் வெளியே வருவதாகவும் கூறினார்.

பாலயோகி தரிசனம் தருவதற்காக புதிய மண்டபம் கட்டப்பட்டது. சிவராத்திரி அன்று 15.02.1950இல் லட்சக்கணக்கில் பக்தர்கள் அவர் தரிசனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் கூடினர். அவரது தியான நிலையத்தின் கதவுகள் படீலென்று திறந்தன. பாலயோகி பாதம் தரையில் பாவாமல் மின்னல் வேகத்தில் மண்டபம் வந்து சேர்ந்தார். காலை 5 மணி முதல் 6 மணி வரையும் மாலை 6 மணி முதல் நள்ளிரவு வரையும் தரிசனம் தந்தார். மற்ற நாள்களில் பூட்டிய அறைக்குள்ளிருந்து ஊதுபத்தி வாசனையும், கற்பூர வாசனையும், புதிய பூக்களின் சுகந்தமும் வீசும்.

அவர் மக்களுக்குச் சொன்ன உபதேசங்கள் அப்பாராவ் என்பவரால் குறித்துக் கொள்ளப்பட்டன.

இலங்கையில் பிறந்து தமிழகத்துக்கு வந்து உயிர்நீத்த கவிஞர் பிரமிள் எழுதிய ‘பிக்ஷாடனன்’ சிறுகதையில் மும்முடிவரம் பாலயோகியின் நிஷ்டை பற்றி எழுதப்பட்டுள்ள குறிப்பு விசேஷமானது. “இளைஞர்கள் இருவரும் மும்முடிவரம் என்ற கிராமத்தை நோக்கி ஒரு நீண்ட நாளைய சர்ச்சைக்கு முடிவு தேடிச் சென்றார்கள். முடிவு. எந்த சமூக அமைப்பையும் அனுமதிக்காமல் எவனையும் எதற்காகவும் சுரண்டாமல் பிச்சைகூட ஏந்தாமல் ஏன் சமூகம் தரும் உணவைக்கூட உட்கொள்ளாமல் உட்கார்ந்திருந்தது.

அதாவது தமது பதினாறாவது வயதில் தியானம் கைகூடிய ஒருவர் இன்றுவரை நாற்பது வருஷங்களுக்கு மேலாக அன்ன ஆகாரம் எதுவுமின்றி ஆனால் உடலின் செழிப்போ, ஸ்தூலத் தூய்மையோ கலையாமல் நிரந்தர நிஷ்டையில் உட்கார்ந்திருந்தார்.”

ஆந்திர மாநிலம் கோதாவரி நதியின் கிளை நதியான விருத்தா கௌதமி நதிக்கரையோரம் உள்ள மும்முடிவரம் பாலயோகி ஆசிரமத்தில் இயற்கை அழகும் அமைதியும் நிலவுகின்றன. பிரமிளைப் போன்று நமது மனத்திலும் அதுபோன்ற எண்ணங்கள் ஆசிரமத்தின் கோபுரத்திலிருந்து நம்மை வந்தடைகின்றன.

(தேடல் தொடரும்)

கட்டுரையாளர், தொடர்புக்கு,
thanjavurkavirayar@gmail.com

### பாலயோகியின் அருள்மொழிகளில் சில

- ★ எந்தப் பொருளுக்கும் உரிமை பாராட்டக் கூடாது.
- ★ உடல் நிலையானதல்ல. பணமும் நிலமும் நிலையானவையல்ல. எவையும் நிலையானதல்ல எல்லாம் கடவுளுக்குச் சொந்தம்.
- ★ கடவுள் நமக்குத் தந்த அறிவுக்கூர்மைக்கு அவருக்கு நன்றி செலுத்துங்கள்.
- ★ உங்கள் தகப்பனார் செயற்கையாகச் சேர்க்கப்பட்டார். உண்மையான தகப்பனார் கடவுளே ஆவார்.
- ★ கடவுளுக்கும் பக்தர்களுக்கும் யாதொரு வித்தியாசமும் இல்லை.
- ★ ஐம்புலன்கள் மாயையில் கொண்டு தள்ளுகின்றன.
- ★ குறைந்த அளவே உண்ணுக.
- ★ ஐம்புலன்களை வெற்றிகொண்டால் உணவும் தேவையில்லை. தண்ணீரும் வேண்டாம்.
- ★ உலக விவகாரங்களில் மகிழ்ச்சி கொண்டு இந்த மனிதப் பிறவியை வீணே கழித்து விடாதீர்கள்.
- ★ நல்ல எண்ணங்களை மனத்தில் கொள்க.

(C) KSL Media Ltd

# அன்பு கமழும் அனுபவங்கள்

▪ எம்.ஏ. ஜோ ▪

இயேசுவின் உருவகக் கதைகள் 47

**இயேசு இறப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர், அவரது நண்பர்களின் வீட்டில் நடந்த அன்பு கமழும் நிகழ்வு முக்கியமானது. இயேசு உயிர்ப்பித்த லாசரும் அவனது சகோதரிகள் மார்த்தாவும் மரியாவும்தான் இயேசுவை அழைத்து விருந்தளித்தனர்.**



இறந்தோருக்குக்கூட உயிர் தரும் இவர் நிச்சயமாக மீட்பராகத்தான் இருக்க வேண்டும் என்று மக்கள் நம்பத் தொடங்கியிருந்தனர். இதைப் பார்த்து கடும் சினம்கொண்ட யூதத் தலைவர்கள் இயேசுவைக் கொல்லத் திட்டம் தீட்டினர். இயேசுவை மட்டுமல்ல, அவரால் மீண்டும் உயிர் பெற்ற லாசரையும் கொல்லத் தீர்மானித்தனர்.

இந்தச் சூழலில்தான் லாசர் வீட்டுக்கு இயேசு வந்தார். தன் சகோதரனுக்கு மீண்டும் உயிர் தந்த தன் அன்புப் போதகர் இயேசுவுக்கு மார்த்தா மகிழ்ச்சியோடு விருந்து தயாரித்துப் பரிமாறினார்.

நமக்கு எதனில் திறமை உண்டோ, அதனால் எதனை நாம் எளிதாய், இனிதாய்ச் செய்ய முடியுமோ, அதன் மூலம்தான் நாம் அன்பு செய்வோருக்கு நமது அன்பை வெளிப்படுத்துவோம். ஓவியர் அழகான ஓவியம் ஒன்று தீட்டி தான் நேசிப்பவருக்குப் பரிசளிக்கலாம். கவிஞர் நேர்த்தியான கவிதை ஒன்றை எழுதி தன் காதல் மனைவிக்கு வழங்கலாம். மார்த்தாவும் இயேசுவுக்கான உணவைத் தயாரிக்க இப்படித்தான் திட்டமிட்டிருந்தாள்.

மார்த்தாவின் இளைய சகோதரி மரியா இயேசுவின் மீது தனக்கிருந்த அன்பை வெளிப்படுத்த பல நாட்களாய்த் தான் பத்திரமாய் வைத்திருந்த நறுமணத் தைலம் ஒன்றை நிறைய எடுத்து வந்து, இயேசுவின் காலடிகளில் பூசி, தன் கூந்தலால் துடைத்தார். அதன் நறுமணம் அந்த இல்லம் முழுவதையும் நிறைத்தது. அந்த நறுமணத் தைலத்தின் விலை உழைப்பாளி ஒருவர் ஓர் ஆண்டு முழுவதும் உழைத்துச் சம்பாதிக்கும் ஊதியத்திற்குச் சமம். ஆனால் அதன் விலையைப் பார்க்காமல், அதன் அளவைப் பார்க்காமல் தன் அன்பிற்குரிய இயேசுவின் காலடிகளில் அதனைப் பூசினார் மரியா.

இயேசுவின் பன்னிரெண்டு சீடர்களில் ஒருவனாகிய யூதாசுக்கு இதை காணப் பொறுக்கவில்லை. “இந்த தைலத்தை விற்று அந்தப் பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்திருக்கக் கூடாதா?” என்று கேட்டான்.

### மரியாவைத் தடுக்காதீர்

தன் மீதிருந்த அன்பை வெளிப்படுத்த இப்படியொரு அரிதான, அழகான ஒன்றைச் செய்த மரியாவை தன் சீடர்களில் ஒருவரே குறை சொல்வதைப் பார்த்த இயேசு, “மரியாவைத் தடுக்காதீர்கள்” என்று சொன்னார். அவருக்கு ஆதரவாக இன்னும் இரண்டு காரியங்களையும் சொன்னார். இறந்தவரின் உடலைக் கல்லறையில் அடக்கம் செய்யும் முன் நறுமணத் தைலம் பூசுவது வழக்கம். யூதத் தலைவர்கள் இயேசுவைக் கொல்ல வழி தேடிக் கொண்டிருப்பதால் அவரது இறப்பு விரைவில் நிகழக்கூடும் என்பதை உணர்ந்த மரியா, அதனை நினைவில் கொண்டு இதனைச் செய்திருக்க வேண்டும் என்றார் இயேசு.

காலடிகளில் பூசிய தைலத்தை விற்று அந்தப் பணத்தை ஏழைகளுக்கு கொடுத்திருக்கலாமே என்று சொன்ன யூதாசு, ஏழைகளின் மீது அக்கறை கொண்டவன் அல்ல. பணத்தின் மீது பேராசை கொண்டவன். இயேசுவின் சீடர்கள் குழுவில் பொருளாளராக இருந்த அவனிடமே பணப்பை இருந்தது. சீடர்கள் யாவருக்கும் உரிய அந்த பொதுப் பணத்தில் இருந்து அவ்வப்போது தனக்கென்று பணத்தைத் திருடிய திருடன் அவன் என்பதும் இந்த நிகழ்ச்சியில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

எப்படியெல்லாம் திருடி பணம் சேர்க்கலாம் என்று சிந்திக்கும் ஒருவனுக்கு ஏழைகள் மீது அக்கறை எப்படி வரும்? சேர்த்து வைப்பதிலே குறியாய் இருக்கும் ஒருவனுக்கு கொடுக்க எப்படி மனம் வரும்? ஏழைகளைப் பற்றி அவன் சொன்னது தன் பணத்தாசையை மறைக்க அவன் பயன்படுத்திய தந்திரம்தான்.

### வலிமிகுந்த வெற்றிடம்

எப்போது ஒரு மனிதனுக்கு பணம் இவ்வளவு முக்கியமான ஒன்றாக மாறிவிடுகிறது? மனித மனத்திற்குக் கிடைக்க வேண்டிய அன்பு கிடைக்காத போது. அன்பு கிடைக்காததால் ஏற்படும் வலி மிகுந்த வெற்றிடத்தை பணத்தைக்கொண்டு நிரப்பிவிடலாம் என்று இவர்கள் தப்புக் கணக்கு போடுகின்றனர்.

அன்பைத் தரவும் பெறவும் முடிந்தவர்களுக்கு அன்புக்கு இணையானது எதுவுமில்லை என்பது புரிந்துவிடுகிறது. இவர்கள் தங்கள் அன்பை வெளிப்படுத்த நினைக்கும்போது, ஒன்றின் விலையை ஒருபோதும் பார்ப்பதில்லை. அன்பில்லாதவர்களின் கண்களுக்குத்தான் விலையும் செலவும் பணமும் முக்கியமானதாகத் தோன்றுகின்றன.

ஈஸ்வர சந்தான மூர்த்தி எழுதிய கவிதை ஒன்று இருக்கிறது. ‘உடைந்துபோன நிலைக்கண்ணாடிக்காய் / வீடே அலறும்படிக் கத்துகிறோம் / நானும் அவளும் / ஆனால் / ஒவ்வொரு துண்டாய் எடுத்து / ஒட்ட வைக்கிறாள் மகள் / முகம் நிறையப் புன்னகை சுமந்து / துண்டுகளை அவள் நேர்த்தியாக்குகிறாள் / அவள் எப்போதும் எல்லாவற்றையும் / நட்போடு தான் பார்க்கிறாள் / நாங்கள்தான் காசாகப் பார்க்கிறோம்.’

ஏழை, எளியோர், நோயுற்றோர், பாவிகள் என்று அனைவரையும் அன்பு செய்த இயேசுவுக்கு அன்பின் அருமை புரியாதா என்ன? எனவேதான் மரியாவின் அன்புச் செயலுக்கு ஆதரவாக அவர் இருந்தார். இறப்பு அருகில் நின்று அச்சுறுத்தும் இறுக்கமான ஒரு சூழலில் தனக்குக் கிடைக்க வேண்டிய அன்பை அதன் மதிப்பை அறியாத சீடன் தடுத்தபோது அவர் அனுமதிக்கவில்லை.

### அன்பின் நறுமணம்

யூதாசைப் போன்று பணமே முக்கியம் என்று நம்பி ஏமாந்து போகாமல், ஏழைகள் என்று வெறும் பேச்சுக்காக எதையோ சொல்லி ஏமாற்றாமல், மரியாவைப் போன்று அன்பின் மகத்துவத்தை உணர்ந்த ஞானிகளாய் நாமிருக்க வேண்டும். அன்பின் அருமை புரியாமல் பேசுவோர் சொல்வதைப் புறந்தள்ளி, அன்பின் நறுமணம் அகிலம் எங்கும் பரவும் அன்புச் செயல்களை நாம் செய்துகொண்டே இருக்க வேண்டும். “அன்பு கமழும் மென்மையான அனுபவம் எல்லாம் / அழகு வாய்ந்த இனிமையான நினைவுகள் எல்லாம்” என்ற வரிகள் வரும் ஆலயப் பாடல் ஒன்று யூடியூபில் உள்ளது. “மன்னவா உன் வாசல் தேடி” என்று அது தொடங்குகிறது. இத்தகைய அனுபவங்களைத் தரவும் பெறவும் நமக்கு இறையருள் வாய்க்க வேண்டும்.

(தொடரும்)


கட்டுரையாளர்,
தொடர்புக்கு : majoe2703@gmail.com

# திருமாலின் கூர்ம அவதாரம்

▪ ஓவியர் வேதா ▪

சித்திரப் பேச்சு

தேவர்களும் அசுரர்களும் இணைந்து பாற்கடலை கடைந்து அமுதம் எடுக்க முற்பட்டபோது மந்தர மலை தள்ளாடியது. அப்போது திருமால் கூர்ம அவதாரம் எடுத்து மலையைத் தூக்கித் தாங்கினார். முதலில் ஆலகால விஷம் வெளிப்பட்டதால் அனைவரும் பயந்து ஓடியபோது, திருமால் கூர்ம அவதார வடிவில் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து பூஜித்தார். அந்த சிவலிங்கத்துக்கு ‘கச்சபேஸ்வரர்’, ‘கச்சாலீஸ்வரர்’ என்ற பெயர்கள் ஏற்பட்டன.



கச்சபம், கூர்மம் என்றால் ஆமை என்று பெயர். ஆமை உடலோடு திருமால் சிவலிங்கத்தைப் பூஜை செய்யும் கோலத்தில் காணப்படும் இந்தச் சிற்பம் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலுக்குச் செல்லும் வழியில் ராஜகோபுரத்துக்கு முன்புள்ள பதினாறு கால் மண்டபத் தூண் ஒன்றில் உள்ளது. தலையில் அழகிய கிரீடம், காதுகளில் குண்டலங்கள், மேல் கரங்களில் சங்கு சக்கரம் தாங்கிய வண்ணம், கீழ் கரங்களில் குடத்தின்மூலம் அபிஷேகம் செய்வதுபோல் உள்ளார். இடையில் அழகிய அணிமணிகளும் திகழ்கின்றன. ராஜகோபுரமும் அதற்கு முன்புறம் எட்டு கால் மண்டபம் மற்றும் பதினாறு கால் மண்டபம் விஜயநகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயரால் கட்டப்பட்டவை. ஆனால் இத்திருக்கோயில் பல்லவர்கள் காலத்துக்கு முன்பே சிறப்புற்றிருந்ததாக இங்குள்ள கல்வெட்டுகளில் காணப்படுகிறது. காஞ்சிபுரம் நகரில் கச்சபேஸ்வரர் என்ற பெயரில் தனிக்கோயிலும் உள்ளது. மேலும் சென்னை நகரில் பிராட்வே பகுதியில் கச்சாலீஸ்வரர் என்ற பெயரில் ஒரு திருக்கோயிலும், சிங்கப்பெருமாள் கோயில் அருகில் திருக்கச்சூர் என்ற ஊரில் ஸ்ரீ கச்சபேஸ்வரர் என்ற பெயரில் ஒரு திருக்கோயிலும் உள்ளன. ஸ்ரீகூர்மம், கூர்ம அவதாரத்தின் பெயரிலேயே, கருவறையில் ஆமை வடிவிலேயே இறைவன் அருள் பாலிக்கும் அற்புத திருத்தலம் ஆகும். ஆந்திர மாநிலத்தில் ஸ்ரீ காகுளம் மாவட்டத்தில் அமைந்துள்ளது ஸ்ரீ கூர்மம்.

TAMILTH Chennai 1 Front_Pg 22_00_16





# இந்து தமிழ் திசை

தமிழால் இணைவோம்


சென்னை / காஞ்சிபுரம் பதிப்பு • வியாழன், ஜூலை 29, 2021

RNI No.TNTAM/2018/76449 Vol.4 No.209

● அச்சகம்: சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி ●

https://www.hindutamil.in

● 12 பக்கங்கள் ₹ 7




▲ உத்தரபிரதேச மாநிலம் பாரபங்கி மாவட்டத்தில் 18 தொழிலாளர்கள் உயிரிழந்த விபத்தில் சேதம் அடைந்த தனியார் பேருந்து. - பிடிஐ

### உ.பி-யில் பேருந்து மீது லாரி மோதிய விபத்து

## சாலையோரத்தில் தூங்கிய 18 தொழிலாளர்கள் உயிரிழப்பு

■ லக்னோ

உத்தரபிரதேசத்தில் பழுதாகி நின்று கொண்டிருந்த பேருந்து மீது லாரி மோதிய விபத்தில், பேருந்துக்கு முன்பாக சாலையோரம் தூங்கிக் கொண்டிருந்த 18 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

பஞ்சாப் மற்றும் ஹரியாணாவில் நெல் விதைப்பு பணிக்காக பிஹாரில் இருந்து தொழிலாளர்கள் சென்றிருந்தனர். இப்பணிகள் தற்போது முடிவடைந்ததால், தனியார் பேருந்தை வாடகைக்கு அமர்த்தி லூதியானாவில் இருந்து பிஹார் நோக்கிப் புறப்பட்டனர். சுமார் 130 பேர் பயணித்தனர்.

இந்நிலையில் உ.பி. தலைநகர் லக்னோவை அடுத்த ராம்சனேகி என்ற இடத்தில் சென்றபோது பேருந்து பழுதடைந்தது. இதையடுத்து பேருந்தை சாலையோரம் நிறுத்திய ஓட்டுநர் பழுதுநீக்கும் பணியில் ஈடுபட்டார். இதனால் பயணிகளில் பலர், பேருந்துக்கு முன்பாக சாலையோரம் படுத்து தூங்கினர். சிலர் பேருந்துக்குள்ளேயே ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் நெடுஞ்சாலையில் அதே மார்க்கத்தில் வேகமாக வந்த லாரி ஒன்று, கட்டுப்பாட்டை இழந்து நின்றுகொண்டிருந்த பேருந்தின் பின்புறம் மோதியது. இதில் பேருந்து முன்னோக்கி ஓடியதில் சாலையோரம் தூங்கிக் கொண்டிருந்த தொழிலாளர்கள் சக்கரத்தில் சிக்கி படுகாயமடைந்தனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த ராம் சனேகி காட் போலீஸார் வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் 18 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். மேலும் 25 பேர் காயம் அடைந்தனர். இவர்களில் 8 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் லக்னோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்தில் ஏற்பட்ட உயிரிழப்புக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், பிரதமர் நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர். இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சமும் காயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரமும் பிரதமர் நிவாரண நிதியிலிருந்து வழங்க பிரதமர் உத்தரவிட்டுள்ளார். இதேபோல் உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத்தும் இரங்கல் தெரிவித்துள்ளதுடன், உரிய மருத்துவ சிகிச்சைக்கு உத்தரவிட்டுள்ளார்.

### நூற்றாண்டு கண்ட முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவர்

# சங்கரய்யாவுக்கு 'தகைசால் தமிழர்' விருது

● ஆகஸ்ட் 15-ம் தேதி சுதந்திர தின விழாவில் முதல்வர் ஸ்டாலின் வழங்குகிறார்

■ சென்னை

முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவர் சங்கரய்யாவுக்கு இந்த ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 'தகைசால் தமிழர்' விருது வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

தமிழகத்துக்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்களை பெருமைப்படுத்தும் வகையில் 'தகைசால் தமிழர்' என்ற பெயரில் புதிய விருதை உருவாக்க முதல்வர் ஸ்டாலின் நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தார். இந்த விருதுக்கான விருதாளரை தேர்வு செய்ய முதல்வர் தலைமையில் தொழில் துறை, ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர்கள், தலைமைச் செயலரை உள்ளடக்கிய குழுவை அமைக்கவும் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், தமிழக அரசு உருவாக்கியுள்ள 'தகைசால் தமிழர்' விருது, முதல் நபராக மூத்த கம்யூனிஸ்ட் தலைவர் என்.சங்கரய்யாவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:





தமிழகத்துக்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்களை பெருமைப்படுத்தும் வகையில், 'தகைசால் தமிழர்' விருதை உருவாக்கவும், இதற்கான விருதாளரைத் தேர்வு செய்ய குழுவை அமைக்கவும் முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார். அதன்படி, விருதாளரைத் தேர்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவின் கலந்தாலோசனை கூட்டம், சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் நடந்தது.

இளம் வயதிலேயே பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, மாணவத் தலைவராகவும், சுதந்திரப் போராளியாகவும், சட்டப் பேரவை உறுப்பினராகவும் அரும்பணியாற்றியதுடன், தமிழகத்துக்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றி, சமீபத்தில் 100 வயதை அடைந்த தமிழர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் என்.சங்கரய்யாவுக்கு இந்த ஆண்டுக்கான 'தகைசால் தமிழர்' விருது வழங்க முடிவு செய்யப்பட்டது.

இந்த விருதுடன் ரூ.10 லட்சத்துக்கான காசோலையும், பாராட்டுச் சான்றிதழும் வரும் ஆகஸ்ட் 15 -ம் தேதி நடைபெறும் சுதந்திர தின விழாவில் முதல்வர் ஸ்டாலினால் வழங்கப்படும்.

இவ்வாறு அரசு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் 1922-ம் ஆண்டு ஜூலை 15-ம் தேதி பிறந்த சங்கரய்யா, மாணவர் பருவத்திலேயே கம்யூனிஸ்ட் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டார். மதுரை அமெரிக்கன் கல்லூரியில் படிக்கும்போது மாணவர் சங்கம் மூலம் நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டார். ஆங்கிலேயே அரசை எதிர்த்ததால் 4 ஆண்டுகள் சிறையில் இருந்தார். விடுதலைக்குப் பிறகு மக்கள் நலனுக்காக போராடி 4 ஆண்டுகள் சிறை தண்டனை அனுபவித்தவர். 3 ஆண்டுகள் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தவர்.

மதுரை மேற்கு, மதுரை கிழக்கு தொகுதிகளில் இருந்து தமிழக சட்டப் பேரவைக்கு 3 முறை தேர்ந்தெடுக்கப் பட்டவர். 80 ஆண்டுகளாக பொதுவாழ்க்கையில் இருக்கும் சங்கரய்யா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராக பல ஆண்டுகள் பணியாற்றியவர். கடந்த சில ஆண்டுகளாக வயது முதிர்வு காரணமாக வீட்டிலேயே ஓய்வெடுத்து வருகிறார்.

கடந்த 15-ம் தேதி சங்கரய்யாவின் 100-வது பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் நேரில் சென்று அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர். நூற்றாண்டு கண்டுள்ள அவருக்கு தமிழக அரசு புதிதாக உருவாக்கியுள்ள 'தகைசால் தமிழர்' விருது வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**தலைவர்கள் வாழ்த்து**

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் வெளியிட்ட அறிக்கையில், 'முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவர் என்.சங்கரய்யாவுக்கு 'தகைசால் தமிழர்' விருது அறிவித்துள்ள முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றி. சங்கரய்யாவுக்கு இந்த விருதை தமிழக அரசு வழங்கியிருப்பதன் மூலம் அவரைப் போன்று மக்கள் சேவையில் தங்களை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்ற சிந்தனைகளை இளைய தலைமுறையினருக்கு ஏற்படுத்துவதாக அமையும்' என்று தெரிவித்துள்ளார்.

'தகைசால் தமிழர்' விருது பெற்றுள்ள சங்கரய்யாவுக்கு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி, இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். விருதை வழங்கிய தமிழக அரசுக்கும், முதல்வர் ஸ்டாலினுக்கும் நன்றி தெரிவித்துள்ளனர்.

### கரோனா நிவாரண நிதிக்கு...

விருது தொடர்பாக சங்கரய்யா நேற்று வெளியிட்ட அறிக்கை:

தமிழக அரசு புதிதாக அறிவித்துள்ள 'தகைசால் தமிழர்' விருதை இந்த ஆண்டு எனக்கு வழங்குவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். எனது சேவையை பாராட்டும் வகையில் அறிவிக்கப்பட்டுள்ள இந்த விருதினை ஏற்றுக் கொள்வதோடு, எனக்கு இந்த விருதை அளித்த முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றி. இந்த விருதுக்காக அளிக்கப்படும் ரூ.10 லட்சத்தை முதல்வரின் கரோனா பேரிடர் நிவாரண நிதிக்கு மகிழ்ச்சியோடு வழங்குகிறேன்.

மாணவனாக இருந்த காலந்தொட்டு இன்று வரை தமிழக மக்களின் நலனுக்கும், இந்திய நாட்டின் விடுதலைக்கும், உழைக்கும் மக்களின் நலன் காத்திடவும் என்னால் முடிந்த அளவு பணியாற்றியுள்ளேன். சுரண்டலற்ற பொதுவுடமை சமுதாயத்தை உருவாக்க நான் ஏற்றுக்கொண்ட மார்க்சிய கொள்கையின் அடிப்படையில் பயணம் செய்துள்ளேன். எனது இறுதி மூச்சு வரை இப்பணியை தொடர்ந்து நிறைவேற்றுவேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கர்நாடக முதல்வராக பசவராஜ் பொம்மை பதவியேற்பு

● பிரதமர் நரேந்திர மோடி, எடியூரப்பா உள்ளிட்டோர் வாழ்த்து

இரா.வினோத்

■ பெங்களூரு

கர்நாடக மாநிலத்தின் 23-வது முதல்வராக பசவராஜ் பொம்மை (61) நேற்று பதவியேற்றுக் கொண்டார். பெங்களூருவில் உள்ள ஆளுநர் மாளிகையில் எளிமையாக நடந்த விழாவில் அவருக்கு ஆளுநர் தாவர்சந்த் கெலாட் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

கர்நாடக முதல்வராக இருந்த பி.எஸ். எடியூரப்பாவுக்கு 78 வயது நிறைவடைந்ததால் பாஜக மேலிட உத்தரவின்பேரில் கடந்த 26-ம் தேதி தனது பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து புதிய எம்எல்ஏவை தேர்வு செய்வதற்காக நேற்று முன்தினம் மாலை பாஜக எம்எல்ஏக்கள் கூட்டம் நடந்தது. இதில் முன்னாள் முதல்வர் எஸ்.ஆர்.பொம்மையின் மகனும் எடியூரப்பாவின் ஆதரவாளருமான பசவராஜ் பொம்மை புதிய முதல்வராக ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார். பின்னர், ஆளுநர் தாவர்சந்த் கெலாட்டை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.

அதை ஆளுநர் ஏற்றுக் கொண்டதையடுத்து, புதன்கிழமை காலை 11 மணிக்கு பதவியேற்பு விழா நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. இதையடுத்து பசவராஜ் பொம்மை நேற்று காலை தனது குடும்பத்தினருடன் பெங்களூரு ஆஞ்சநேயர் கோயிலுக்கு சென்று சிறப்பு பூஜை செய்து வழிபட்டார். பின்னர் மத்திய அமைச்சர்கள் தர்மேந்திர பிரதான், கிஷன் ரெட்டி, பாஜக மேலிட பொறுப்பாளர் அருண் சிங், முன்னாள் முதல்வர் எடியூரப்பா ஆகியோருடன் ஆளுநர் மாளிகைக்கு வந்தார்.



▲ கர்நாடக ஆளுநர் மாளிகையில் நேற்று நடந்த எளிய விழாவில், முதல்வராக பசவராஜ் பொம்மை பதவியேற்றார். அவருக்கு ஆளுநர் தாவர்சந்த் கெலாட், பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். - பிடிஐ

ஆளுநர் மாளிகை வளாகத்தில் உள்ள கண்ணாடி மாளிகையில் எளிமையான முறையில் நடைபெற்ற விழாவில், முதல்வராக பசவராஜ் பொம்மை பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு ஆளுநர் தாவர்சந்த் கெலாட், பதவி பிரமாணமும் ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். பசவராஜ் பொம்மை, கடவுளின் பெயரால் பதவியேற்றுக் கொண்டார்.

பதவியேற்பு விழாவில் முன்னாள் முதல்வர் ஜெகதீஷ் ஷெட்டர், பாஜக மாநில தலைவர் நளின்குமார் கட்டீல், பாஜக தேசிய செயலாளர் சி.டி.ரவி உட்பட 200-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

புதிய முதல்வருக்கு தர்மேந்திர பிரதான், எடியூரப்பா உள்ளிட்டோரும், அவரது குடும்பத்தினரும் பூங்கொத்துகளை வழங்கி வாழ்த்துகளை தெரிவித்தனர். பிரதமர் நரேந்திர மோடி, பாஜக தேசிய தலைவர் ஜே.பி.நட்டா, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்ளிட்டோரும் அவருக்கு தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்தனர்.

இதுகுறித்து பிரதமர் நரேந்திர மோடி தனது ட்விட்டர் பக்கத்தில், 'முதல்வராக பதவியேற்றுள்ள பசவராஜ் பொம்மைக்கு வாழ்த்துகள். சட்டப்பேரவையிலும் நிர்வாகத்திலும் நீண்ட அனுபவம் வாய்ந்த இவர் மிகவும் சிறப்பான முறையில் கடமையை செய்வார். கர்நாடகாவில் வியக்கத்தக்க பணிகளை மேற்கொள்வார் என நம்புகிறேன்' என குறிப்பிட்டுள்ளார்.

**எடியூரப்பாவுக்கு பாராட்டு**

பிரதமர் மோடி முன்னாள் முதல்வர் எடியூரப்பாவையும் பாராட்டி தனது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார். அதில், 'பாஜகவின் நலனுக்காகவும் கர்நாடகாவின் வளர்ச்சிக்காகவும் பி.எஸ்.எடியூரப்பா செய்துள்ள இந்த மகத்தான தியாகத்தை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. பல தலைமுறைகளாக கர்நாடகாவின் பல பகுதிகளுக்கும் சென்று கடுமையாக உழைத்து கட்சியை வளர்த்துள்ளார். எடியூரப்பா ஆற்றிய சமூக பணிகளுக்காக எப்போதும் போற்றப்படுவார்' என குறிப்பிட்டுள்ளார்.

### தந்தை வழியில் முதல்வரான மகன்

கர்நாடக முன்னாள் முதல்வர் எஸ்.ஆர்.பொம்மையின் (1988– 89) மகனான பசவராஜ் பொம்மை, 1960 ஜனவரி 28–ம் தேதி வடகர்நாடகாவில் உள்ள ஹாவேரியில் பிறந்தார். பி.இ. மெக்கானிக்கல் இன்ஜினீயரிங் படித்த இவர், புனேவில் உள்ள டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தில் 3 ஆண்டுகள் பணியாற்றினார். ஜனதா கட்சியின் தலைவராக இருந்த தனது தந்தையை பார்த்து அரசியலில் ஆர்வம் காட்டினார். இதையடுத்து ஜனதா தளம் கட்சியில் இணைந்து இளைஞர் அணியை வலுப்படுத்தினார். பின்னர் ஜனதா தளம் கட்சி சார்பில் முதல்வர்களாக பதவி வகித்த ராமகிருஷ்ண ஹெக்டே, ஜே.ஹெச்.படேல், தேவகவுடா ஆகியோருக்கு அரசியல் ஆலோசகராகவும் பணியாற்றினார்.

கடந்த 2008–ல் ஜனதா கட்சியில் இருந்து விலகி எடியூரப்பா முன்னிலையில் பாஜகவில் இணைந்தார். லிங்காயத்து வகுப்பைச் சேர்ந்த இவர், எடியூரப்பாவுக்கு நெருக்கமானவராக மாறினார். 2 முறை சட்டமேலவை உறுப்பினராகவும், 3 முறை ஷிகான் சட்டப்பேரவை தொகுதி உறுப்பினராகவும் தேர்வு செய்யப்பட்டார். 2008–13 காலகட்டத்தில் நீர்வளத்துறை அமைச்சராகயும், 2019–21 காலகட்டத்தில் சட்டம் மற்றும் உள்துறை அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார்.

கர்நாடகாவில் ஏற்கெனவே முன்னாள் முதல்வர் தேவகவுடாவின் மகன் குமாரசாமி இருமுறை முதல்வராக இருந்துள்ளார். அந்த வரிசையில் இரண்டாவதாக முன்னாள் முதல்வர் எஸ்.ஆர்.பொம்மையின் மகன் பசவராஜ் பொம்மை முதல்வராகியுள்ளார். அதிலும் பாஜகவுக்கு வெளியே இருந்து வந்து, முதல்வராகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

பசவராஜ் பொம்மை முதல்வராக பொறுப்பேற்றுள்ளதால் லிங்காயத்து வகுப்பினரும் வடகர்நாடகாவை சேர்ந்தவர்களும் உற்சாகம் அடைந்துள்ளனர்.



TAMILTH ALL 1 Calendar_Pg C KARNAN Time



# பளிச் பத்து 29

தொகுப்பு: பி.எம்.சுதிர்

## உருளைக்கிழங்கு



- பெரு நாட்டில் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இன்கா இனத்தவர், முதன்முதலில் உருளைக்கிழங்கை பயிரிட்டதாகக் கூறப்படுகிறது.
- 1536–ம் ஆண்டில் ஸ்பெயின் நாடு பெரு மீது படையெடுத்தது. பின்னர் அந்நாட்டில் இருந்து திரும்பிச் சென்ற ஸ்பானிஷ் வீரர்கள் உருளைக்கிழங்கை ஐரோப்பாவுக்கு எடுத்துச் சென்றனர்.
- ஸ்பெயின் நாட்டில் இருந்து மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு உருளைக்கிழங்கு பரவியுள்ளது.
- 17–ம் நூற்றாண்டில் வர்த்தகத்துக்காக வந்த போர்ச்சுகீசியர்கள் மூலம் இந்தியாவுக்கு உருளைக்கிழங்கு அறிமுகமானது.
- 1675–ம் ஆண்டில் சூரத் மற்றும் கர்நாடகாவின் சில பகுதிகளில் முதல் முறையாக உருளைக்கிழங்கு பயிரிடப்பட்டது.
- சோளம், கோதுமை, அரிசி ஆகியவற்றுக்கு அடுத்ததாக உருளைக்கிழங்கு உலகில் அதிக அளவில் பயிரிடப்படுகிறது.
- உருளைக்கிழங்கு உற்பத்தியில் சீனா முதல் இடத்தில் இருக்கிறது. அதற்கு அடுத்த இடங்களில் ரஷ்யாவும், இந்தியாவும் உள்ளன.
- உருளைக்கிழங்கில் வைட்டமின் சி சத்துகள் அதிகம் உள்ளன.
- மஞ்சள், சிவப்பு மற்றும் ஊதா நிறங்களிலும் உருளைக்கிழங்குகள் உள்ளன.
- உருளைக்கிழங்கில் இருந்து ஓட்கா உள்ளிட்ட மதுபானங்களும் தயாரிக்கப்படுகின்றன.



## நல்லதே நடக்கும்

• ஜோதிஷபூஷண் வேங்கடசுப்பிரமணியன் •

**29-07-2021** பிலவ 13 ஆடி

**வியாழக்கிழமை**

| | |
|---|---|
| திதி | : பஞ்சமி காலை 6.07 மணி வரை. அதன் பிறகு சஷ்டி. |
| நட்சத்திரம் | : உத்திரட்டாதி பிற்பகல் 3.44 மணி வரை. பிறகு ரேவதி. |
| நாமயோகம் | : சுகர்மம் நள்ளிரவு 12 மணி வரை. அதன் பிறகு திருதி. |
| நாமகரணம் | : தைதுலம் காலை 6.07 மணி வரை. அதன் பிறகு கரசை. |
| நல்ல நேரம் | : காலை 9.00-12.00, மாலை 4.00-7.00, இரவு 8.00-9.00 மணி வரை. |
| யோகம் | : சித்தயோகம். |
| சூலம் | : தெற்கு, தென்கிழக்கு பிற்பகல் 2.00 மணி வரை. |
| பரிகாரம் | : நல்லெண்ணெய். |
| சூரிய உதயம் | : சென்னையில் காலை 5.54 |
| அஸ்தமனம் | : மாலை 6.35 |

| | | | |
|---|---|---|---|
| ராகு காலம் | மதியம் 1.30-1.30 | நாள் | தேய்பிறை |
| எமகண்டம் | காலை 6.00-7.30 | அதிர்ஷ்ட எண் | 2, 5, 9 |
| குளிகை | காலை 9.00-10.30 | சந்திராஷ்டமம் | மகம், பூரம். |

நான்கு தலைமுறையாக பாரம்பரியமிக்க தங்க நகை நிறுவனம்
T.NAGAR LKS GOLD HOUSE (P) LTD SINCE 1925
T.NAGAR | ANNA NAGAR | TAMBARAM
"LKS - GOLD" IS CASH IN HAND

**மேஷம்:** கணவன் - மனைவிக்குள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்லுங்கள். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். சகோதரர் வகையில் கருத்துவேறுபாடு வரும்.

**ரிஷபம்:** ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். கடனை தீர்ப்பதற்கான வழி பிறக்கும். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். திடீர் பயணம் ஏற்படக் கூடும்.

**மிதுனம்:** பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். குலதெய்வப் பிரார்த்தனையை குடும்பத்தினருடன் சென்று நிறைவேற்றுவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு கூடும். பணவரவு உண்டு.

**கடகம்:** கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் உண்டாகும். கடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சியில் ஈடுபடுவீர்கள். விஐபியுடன் எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

**சிம்மம்:** எவ்வளவு பணம் வந்தாலும் சேமிக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். சில விஷயங்களுக்கு அனுபவ அறிவைப் பயன்படுத்துவது நல்லது. எதிலும் நிதானம் தேவை.

**கன்னி:** மூத்த சகோதரர் வகையில் உதவிகள் கிடைக்கும். தாயார் ஆதரித்து பேசுவார். சொத்து தொடர்பான சிக்கல்களில் ஒன்று முடிவுக்கு வரும். கலைப்பொருட்கள் வாங்குவீர்கள்.

**துலாம்:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும்.

**விருச்சிகம்:** உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்து கொள்வீர்கள். நண்பர்களால் சில காரியங்கள் நிறைவேறும். அக்கம்பக்கத்தினரின் அன்புத் தொல்லை குறையும்.

**தனுசு:** பிள்ளைகள் பொறுப்புடன் நடந்து கொள்வார்கள். தாய்வழி உறவினர்களுடன் எதிர்பாராது மனஸ்தாபம் வந்து நீங்கும். அநாவசிய செலவுகளைக் கட்டுப்படுத்துவீர்கள்.

**மகரம்:** நெளிவு, சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். பழைய பிரச்சினைகளுக்கு சுமுகத் தீர்வு காண்பீர்கள். பால்ய நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு.

**கும்பம்:** புதியவர்கள் நண்பர்களாவார்கள். விலை உயர்ந்தப் பொருட்கள் வாங்குவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு உயரும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த தொகை கைக்கு வரும்.

**மீனம்:** முக்கிய கோப்புகளைக் கையாளும்போது மிகவும் கவனம் தேவை. முன்கோபத்தால் இழப்புகள் ஏற்படக் கூடும். மற்றவர்கள் விஷயத்தில் அநாவசியமாகத் தலையிட வேண்டாம்.

# தனியார் மருத்துவமனைகளில் இலவச கரோனா தடுப்பூசி

● சென்னை காவேரி மருத்துவமனையில் முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

■ சென்னை

தனியார் மருத்துவமனைகளில் இலவச கரோனா தடுப்பூசி போடும் திட்டத்தை, சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள காவேரி மருத்துவமனையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கிவைத்தார்.

இந்திய தொழிற் கூட்டமைப்பு, தனியார் மருத்துவமனைகள் இணைந்து தனியார் நிறுவனங்கள் மற்றும் தனியார் மருத்துவமனைகளின் கூட்டாண்மை சமூகப் பங்களிப்பு நிதியின் (சிஎஸ்ஆர்) மூலம் இலவச கரோனா தடுப்பூசி போடும் திட்டத்தின் தொடக்க விழா சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள காவேரி மருத்துவமனையில் நேற்று நடைபெற்றது.

இத் திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார். பின்னர், தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். அப்போது, இலவச கரோனா தடுப்பூசி போடும் பணிக்கு இந்திய தொழிற் கூட்டமைப்பு தலைவர் சந்திரகுமார், சிஎஸ்ஆர் நிதியிலிருந்து ரூ.2.20 கோடிக்கான காசோலையும், அடையாறு ஆனந்த பவன் சார்பில் அதன் நிர்வாக இயக்குநர் கே.டி.சீனிவாச ராஜா, ரூ.7 லட்சத்துக்கான காசோலையையும் முதல்வரிடம் வழங்கினர்.



▲ தனியார் மருத்துவமனைகளில் இலவச கரோனா தடுப்பூசி போடும் திட்டத்தை சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள காவேரி மருத்துவமனையில் முதல்வர் ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார். உடன், சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சுகாதாரத் துறை செயலர் ஜெ.ராதாகிருஷ்ணன், சென்னை மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி, எம்எல்ஏக்கள் என்.எழிலன், த.வேலு மற்றும் மருத்துவமனை நிர்வாகிகள். படம்: க.ஸ்ரீபரத்

இந்நிகழ்ச்சியில் சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், செயலர் ஜெ.ராதாகிருஷ்ணன், சென்னை மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி, துணை ஆணையர் (சுகாதாரம்) எஸ். மனீஷ், தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர் உமா, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் செல்வவிநாயகம், சட்டப்பேரவை உறுப்பினர்கள் என். எழிலன், த.வேலு மற்றும் காவேரி மருத்துவமனை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**இந்தியாவில் முதல்முறையாக**

இதுதொடர்பாக சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறியதாவது:

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மொத்த தடுப்பூசிகளில் 75 சதவீதத்தை மத்திய அரசு கொள்முதல் செய்து மாநிலங்களுக்கு பிரித்து வழங்கி வருகிறது. தனியார் மருத்துவமனைகளுக்கு 25 சதவீத தடுப்பூசிகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. அரசு சார்பில் இலவசமாகவும், தனியாரில் கட்டணத்திலும் தடுப்பூசி போடப்படுகிறது. தனியாரில் கட்டணம் வசூலிப்பதால் தடுப்பூசி போட்டுக் கொள்பவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. அதனால், தனியார் மருத்துவமனைகள் 25 சதவீத தடுப்பூசிகளை முழுமையாக கொள்முதல் செய்வதில்லை.

எனவே, இந்தியாவில் முதல் முறையாக தனியார் நிறுவனங்கள் மற்றும் தனியார் மருத்துவமனைகளின் சிஎஸ்ஆர் நிதி மூலம், 25 சதவீத தடுப்பூசிகளை முழுவதுமாக கொள்முதல் செய்து பொதுமக்களுக்கு இலவசமாகப் போட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முதல்கட்டமாக சென்னை காவேரி மருத்துவமனையில் இலவச கரோனா தடுப்பூசி போடும் பணி தொடங்கப்பட்டுள்ளது. ஓரிரு நாட்களில் தமிழகம் முழுவதும் தனியார் மருத்துவமனைகளில் இலவசமாகத் தடுப்பூசி போடும் பணி தொடங்கும். தமிழகத்தில் இதுவரை அரசு மற்றும் தனியார் மையங்கள் மூலம் 2 கோடியே 15 லட்சத்து 17,446 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

தமிழகத்தில் 36 மாவட்டங்களில்

# நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்தது

● நீர்வள ஆதாரத் துறை தகவல்

■ சென்னை

தென்மேற்குப் பருவமழையால் தமிழகத்தில் 36 மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது. அதிகபட்சமாக வேலூர் மாவட்டத்தில் 3.07 மீட்டர் உயர்ந்துள்ளதாக நீர்வள ஆதாரத் துறை தெரிவித்துள்ளது.

தமிழக நீர்வள ஆதாரத் துறை, மாநிலத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கண்காணிப்புக் கிணறுகள் மூலம் மாதந்தோறும் நிலத்தடி நீர் மட்டத்தைக் கணக்கிட்டு வருகிறது. அதன்படி, கடந்த ஆண்டு ஜூலை மாதத்துடன் இந்த ஆண்டு ஜூலை மாதத்தை ஒப்பிட்டால் 36 மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

**வேலூரில் 3.07 மீட்டர் உயர்வு**

தென்மேற்குப் பருவமழை காரணமாக அதிகபட்சமாக வேலூரில் நிலத்தடி நீர் மட்டம் 3.07 மீட்டர் உயர்ந்து இந்த ஆண்டு 8.21 மீட்டராக உள்ளது. மிகக்குறைவாக ஈரோடு மாவட்டத்தில் 0.09 மீட்டர் மட்டுமே நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருச்சி, பெரம்பலூர், அரியலூர், சேலம், திருப்பூர், திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, விருதுநகர், கள்ளக்குறிச்சி, தென்காசி, திருப்பத்தூர் ஆகிய 14 மாவட்டங்களில் 2 மீட்டருக்கு மேல் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

திருவள்ளூர், தருமபுரி, கடலூர், விழுப்புரம், கரூர், நாமக்கல், தேனி, தூத்துக்குடி, செங்கல்பட்டு, ராணிப்பேட்டை ஆகிய 10 மாவட்டங்களில் 1 மீட்டருக்கும் அதிகமாக நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

கிருஷ்ணகிரி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ஈரோடு, கோவை, நீலகிரி, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 11 மாவட்டங்களில் 0.09 மீட்டர் முதல் 0.73 மீட்டர் வரை நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளதாக நீர்வள ஆதாரத் துறை தெரிவித்துள்ளது.

டோக்கியோ ஒலிம்பிக் திருவிழா

# குத்துச்சண்டை கால் இறுதி சுற்றில் பூஜா ராணி

● வில்வித்தையில் தீபிகா குமாரி 3-வது சுற்றுக்கு முன்னேற்றம்

■ டோக்கியோ

டோக்கியோ ஒலிம்பிக்கில் மகளிருக்கான குத்துச்சண்டையில் இந்தியாவின் பூஜா ராணி, கால் இறுதி சுற்றுக்கு முன்னேறினார். மகளிருக்கான வில்வித்தையில் தீபிகா குமாரி 3-வது சுற்றில் நுழைந்தார்.

ஜப்பானின் டோக்கியோ நகரில் நடைபெற்றுவரும் 32-வது ஒலிம்பிக் திருவிழாவின் 6-வது நாளான நேற்று, மகளிருக்கான மிடில் வெயிட் குத்துச்சண்டையில் இந்தியாவின் பூஜாரா ராணி 5-0 என்ற கணக்கில் அல்ஜீரியாவின் இக்ராக் சைபை வீழ்த்தி கால் இறுதி சுற்றுக்கு முன்னேறினார். இந்த சுற்றில் வெற்றி பெறும்பட்சத்தில் குறைந்த பட்சம் வெண்கலப் பதக்கத்தை உறுதிப்படுத்துவார் பூஜா ராணி.

ஆடவருக்கான வில்வித்தை ரீகர்வ் தனிநபர் பிரிவில் இந்தியாவின் தருண்தீப் ராய் தனது முதல் ஆட்டத்தில் 6-4 என்ற கணக்கில் உக்ரைனின் ஒலெக்ஸி ஹன்பினை வீழ்த்தினார். ஆனால் 2-வது ஆட்டத்தில் ஸ்ரேலின் இட்டே ஷானியிடம் 5-6 என்ற கணக்கில் தோல்வியடைந்தார் தருண்தீப் ராய். இதேபோன்று மற்றொரு இந்திய வீரரான பிரவீண் ஜாதவும் முதல் ஆட்டத்தில் வெற்றி கண்ட நிலையில் 2-வது ஆட்டத்தில் 0-6 என்ற கணக்கில் முதல் நிலை வீரரான அமெரிக்காவின் பிராடி எலிசனிடம் தோல்வி கண்டார்.

மகளிர் பிரிவில் இந்தியாவின் தீபிகா குமாரி முதல் சுற்றில் 6-0 என்ற கணக்கில் பூட்டானின் கர்மாவை வீழ்த்தினார். தொடர்ந்து அடுத்த ஆட்டத்தில் 6-4 என்ற கணக்கில் அமெரிக்காவின் ஜெனிபர் முசினோ-பெர்னாண்டஸை தோற்கடித்து 3-வது சுற்றுக்கு முன்னேறினார்.

பாட்மிண்டனில் மகளிருக்கான ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பி.வி.சிந்து 21-9, 21-16 என்ற நேர் செட்டில் ஹாங்ஹாங்கின் சியுங்கை வீழ்த்தி நாக் அவுட் சுற்றுக்கு முன்னேறினார். நாக் அவுட் சுற்றில் சிந்து டென்மார்க்கின் மியா பிளிச்ஃபெல்ட்டை சந்திக்கிறார். ஆடவர் ஒற்றையர் பிரிவில் சாய் பிரணீத் தனது 2-வது சுற்றில் 14-21, 14-21 என்ற நேர் செட்டில் நெதர்லாந்தின் மார்க் கால்ஜோவிடம் வீழ்ந்தார். முதல் ஆட்டத்திலும் சாய் பிரணீத் தோல்வி அடைந்திருந்ததால் அவரது ஒலிம்பிக் பயணம் முடிவுக்கு வந்தது.

மகளிர் ஹாக்கியில் இந்திய அணி 1-4 என்ற கோல் கணக்கில் நடப்பு சாம்பியனான இங்கிலாந்திடம் தோல்வியடைந்தது. இந்திய அணிக்கு இது ஹாட்ரிக் தோல்வியாக அமைந்தது. இதனால் அடுத்த சுற்றுக்கு முன்னேறுவதில் சிக்கல் எழுந்துள்ளது.

ஆடவருக்கான படகு வலித்தலில் டபுள்ஸ் ஸ்கல்ஸ் பிரிவில் இந்தியாவின் அர்ஜுன் லால் ஜாட், அர்விந்த் சிங் ஜோடி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. அரை இறுதியில் இந்திய ஜோடி 6-வது இடம் பிடித்தது.

# தமிழகத்தில் புதிதாக 1,756 பேருக்கு கரோனா

● முதியவர்கள் உட்பட 29 பேர் உயிரிழப்பு

■ சென்னை

தமிழகத்தில் புதிதாக 1,756 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. முதியவர்கள் உட்பட 29 பேர் உயிரிழந்தனர்.

தமிழகத்தில் நேற்று ஆண்கள் 1,005, பெண்கள் 751 என மொத்தம் 1,756 பேர் கரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டனர். இதன் மூலம் தமிழகத்தில் பாதிப்பு எண்ணிக்கை 25 லட்சத்து 53,805 ஆக அதிகரித்துள்ளது. இதுவரை 24 லட்சத்து 98,289 பேர் குணமடைந்துள்ளனர். நேற்று மட்டும் 2,394 பேர் குணமடைந்து வீடுகளுக்குச் சென்றனர். தமிழகம் முழுவதும் 21,521 பேர் சிகிச்சையில் உள்ளனர்.

அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் நேற்று நடுத்தர வயதினர், முதியவர்கள் உட்பட 29 பேர் உயிரிழந்தனர். இதன்மூலம் தமிழகத்தில் கரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 33,995 ஆக உயர்ந்துள்ளது. சென்னையில் மட்டும் 8,315 பேர் இறந்துள்ளனர் என்று தமிழக சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

## சில மாவட்டங்களில் 4 நாட்கள் மழைக்கு வாய்ப்பு

■ சென்னை

தமிழகத்தில் அடுத்த 4 நாட்களுக்கு ஒருசில மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் நா.புவியரசன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தென்மேற்கு பருவக்காற்று மற்றும் வெப்பச் சலனம் காரணமாக தமிழகத்தில் 29, 30-ம் தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய கோவை, நீலகிரி, தேனி, திண்டுக்கல், தென்காசி ஆகிய மாவட்டங்கள் மற்றும் தென் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், 31, ஆக.1 ஆகிய தேதிகளில் கடலோர மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். சென்னையில் பொதுவாக வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

'இந்து தமிழ் திசை', எஸ்எஸ்விஎம் இன்ஸ்டிடியூசன்ஸ், என்டிஆர்எஃப் இணைந்து வழங்கிய 'கலாமை கொண்டாடுவோம்' இணையவழி கலந்துரையாடல்

# நம் சிந்தனை மக்களுக்கு பயனளிப்பதாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் உடையவர் அப்துல் கலாம்

■ சென்னை

நம் சிந்தனை எப்போதும் மக்களுக்கு பயனளிப்பதாக இருக்க வேண்டுமென்ற உயர்ந்த எண்ணத்தைக் கொண்டவராக அப்துல் கலாம் விளங்கினார் என்று 'கலாமை கொண்டாடுவோம்' இணையவழி கலந்துரையாடல் நிகழ்வில் விண்வெளி விஞ்ஞானி டாக்டர் ஆ.சிவதாணுபிள்ளை புகழாரம் சூட்டினார்.

முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் 6-ம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு, 'இந்து தமிழ் திசை', எஸ்எஸ்விஎம் இன்ஸ்டிடியூசன்ஸ், என்டிஆர்எஃப் இணைந்து 'கலாமை கொண்டாடுவோம்' எனும் இணையவழி சிறப்பு கலந்துரையாடல் நிகழ்ச்சி கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில், 'பிரம்மோஸ் பிதாமகன்' என்றழைக்கப்படும் பிரம்மோஸ் விண்வெளி நிறுவனத்தின் நிறுவனரும், விஞ்ஞானியுமான பத்மபூஷண் டாக்டர் ஆ.சிவதாணுபிள்ளை, தேசிய வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி மன்ற இயக்குநரும், ராணுவ விஞ்ஞானியுமான டாக்டர் வி.டில்லிபாபு ஆகியோர் பங்கேற்று கலந்துரையாடினர்.

அப்போது அவர்கள் பேசியதாவது:

**விண்வெளி விஞ்ஞானி பத்மபூஷன் டாக்டர் ஆ.சிவதாணுபிள்ளை:** பொறியியல் கல்லூரில் நான் படித்தபோது எங்கள் வீட்டில் மின்விளக்கு வசதியில்லை. அதனாலேயே எலெக்ட்ரிகல் இன்ஜினீயரிங்படித்தேன். கல்லூரியில் நடைபெற்ற கண்காட்சிக்கு வந்த அறிவியல் அறிஞர் சி.வி.ராமன் என்னைப் பாராட்டினார்.

1969-ல் இஸ்ரோவில் சேர்ந்தேன். அங்குதான் முதன்முதலில் அப்துல் கலாமை சந்தித்தேன். என் செயல்களை கூர்ந்து கவனித்த கலாம், என்னை அவரது குழுவில் இணைத்துக் கொண்டார். ஸ்ரீஹரிகோட்டாவில் எஸ்எல்வி-3 செயற்கைக்கோள் செலுத்தும் பணியில் 2 மாதம் தூக்கமின்றி வேலை செய்தோம். முதல் கட்டத்தில் சீராக இருந்த செயற்கைக் கோள், 2-ம் கட்டத்தில் சிக்கலாகி வங்கக் கடலில் விழுந்தது. 'வெற்றியை விடவும் தோல்வியிலிருந்துதான் படிப்பினை பெற முடியும். கற்றுக் கொள்வதற்கும், அறிவு வளர்ச்சிக்கும் தோல்வி உதவும்' என்று அடிக்கடி சொல்வார் கலாம். அந்த அறிவுரை எங்களுக்கு பாடமானது.

இஸ்ரோவிலிருந்து அவர் டிஆர்டிஓ செல்லும்போது நானும் அவருடன் சென்...

## விண்வெளி விஞ்ஞானி டாக்டர் ஆ.சிவதாணுபிள்ளை புகழாரம்



▲ ஆ.சிவதாணுபிள்ளை



▲ வி.டில்லிபாபு



...றேன். அங்கேதான் அக்னி ஏவுகணை சோதனை செய்ய திட்டமிடப்பட்டு வெற்றியடைந்தது. எஸ்எல்வி-3 சோதனையில் இந்தியா 7-வது நாடு. அக்னி ஏவுகணை சோதனையில் இந்தியா 6-வது நாடு. எப்போது இந்தியா முதல் நாடாக வரும் எனும் கேள்வி கலாம் மனதில் தொடர்ந்து எழுந்துகொண்டேயிருந்தது. அதற்கான பதிலாக அமைந்ததுதான் 1998-ம் ஆண்டில் நடத்தப்பட்ட பொக்ரான் அணுகுண்டு சோதனை.

முன்னாள் பிரதமர்கள் வாஜ்பாய், மன்மோகன் சிங் இருவரிடம் நல்ல நட்புறவுடன் இருந்தவர் கலாம். வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது கேபினட் அமைச்சராக கலாமை நியமிக்க விரும்பினார். பதவி மேல் ஆசையில்லாத கலாம் அதை மறுத்துவிட்டார். பிரம்மோஸ் விண்வெளி நிறுவனத்தை நிறுவியதில் எனக்கு பெரும் உந்துசக்தியாக விளங்கியவர் கலாம். இந்தியா அனைத்து துறைகளிலும் வளமான நாடாகத் திகழ வேண்டுமென்று விரும்பினார். தன்னைப் பற்றி எதுவும் எண்ணாமல் நாட்டைப் பற்றியே சிந்தித்தார். நம் சிந்தனை எப்போதும் மக்களுக்கு பயனளிப்பதாக இருக்க வேண்டுமென்ற உயர்ந்த எண்ணத்தை கொண்டவராக அப்துல் கலாம் விளங்கினார்.

**ராணுவ விஞ்ஞானியும், அறிவியல் எழுத்தாளருமான டாக்டர் வி.டில்லிபாபு:** நம் தேசத்தின் அறிவியல் தொழில்நுட்ப ஆளுமையாகத் திகழ்ந்தவர் அப்துல் கலாம். சென்னை வியாசர்பாடியில் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்த என்னையும் இந்த உயரத்துக்கு அழைத்து வந்தது கலாம் விதைத்த அறிவியல் சிந்தனைகளே. ஏவுகணை தொழில்நுட்ப வளர்ச்சியில் இன்று இந்தியா குறிப்பிடத்தக்க இடத்தில் இருப்பதற்கு வழிவகுத்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் கலாம்.

ஏவுகணையோடு அணுசக்தியும் சேர்ந்தால் இந்தியா வல்லரசாக முடியும் என்ற எண்ணத்தில் பொக்ரான்-2 சோதனையை செயல்படுத்தி வெற்றி கண்டார். இந்திய நாடு பொருளாதாரம், மனித வளம், அறிவியல் வளர்ச்சி ஆகியவற்றில் முதன்மையான நாடாக வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டவர் கலாம்.

ஏவுகணை தொழில்நுட்பத்தை, உயிரைக் காக்கும் தொழில்நுட்பமாக மாற்றிக் காட்டிய வல்லமையாளராக இருந்தார் கலாம். போலியோவால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மிகவும் எடை குறைந்த செயற்கைக் கால்களைப் பொருத்தும் தொழில்நுட்பத்தை கண்டறிந்தார். 'மூளையின் மூலமாக மனித வலியைக் குறைக்க முடியும்' என்று குறிப்பிட்டதோடு அதை, தனது கண்டுபிடிப்பின் மூலம் நிரூபித்தார்.

அவரது நினைவு நாளில் அவரின் பெருமைகளைப் போற்றி நாம் கொண்டாடுவதோடு, அவர் கனவு கண்ட இந்தியாவை உருவாக்க இளைய தலைமுறையினர், அவரது நற்சிந்தனைகளை தங்கள் இதயத்தில் பதிந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில், எஸ்எஸ்விஎம் இன்ஸ்டிடியூசன்ஸ் அறங்காவலர் மற்றும் செயல் இயக்குநர் எஸ்.மோகன்தாஸ் வரவேற்புரையாற்றினார். 'இந்து தமிழ் திசை' முதுநிலை உதவி ஆசிரியர் மு.முருகேசன் நெறிப்படுத்தினார். இந்த நிகழ்வை காணத் தவறியவர்கள் https://bit.ly/3x9dSM1 என்ற லிங்க்கில் காணலாம்.

வன்னியர்களுக்கு 10.5% இடஒதுக்கீடு

# பாமக நிறுவனர் ராமதாஸுக்கு ஜூலை 31-ம் தேதி பாராட்டு விழா

● இணைய வழியில் நடக்கும் என அறிவிப்பு

■ சென்னை

பாமக தலைவர் ஜி.கே.மணி நேற்று வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தில் கல்வி மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் வன்னியர்களுக்கு 10.5 சதவீத உள்இட ஒதுக்கீடு வழங்குவதற்காக கடந்த பிப்ரவரி 26-ம் தேதி நிறைவேற்றப்பட்ட சிறப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்திருக்கிறது. இதற்கு காரணமான ராமதாஸுக்கு பாமக, வன்னியர் சங்கம், சமூக முன்னேற்ற சங்கம் உள்ளிட்ட அனைத்து அமைப்புகளின் சார்பில் உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இட ஒதுக்கீட்டுக்கான எல்லா புகழும் ராமதாஸையே சாரும். அவருக்கு பிரம்மாண்டமான பாராட்டு விழா நடத்த வேண்டும் என்று பாட்டாளி மக்கள் விரும்புகின்றனர்.

ஆனாலும், கரோனா ஊரடங்கு சூழலில் அத்தகைய விழா தவிர்க்கப்பட வேண்டும் என்பதால் பாமக, வன்னியர் சங்கம், சமூக முன்னேற்ற சங்கம் ஆகிய 3 அமைப்புகளும் இணைந்து ராமதாஸுக்கு இணையவழியில் பாராட்டு விழா நடத்த தீர்மானித்துள்ளன. வரும் 31-ம் தேதி மாலை 5 மணிக்கு இந்த பாராட்டு விழா நடக்கும். விழாவின் நிறைவாக ராமதாஸ் ஏற்புரையாற்றுகிறார். இதில் ஆயிரக்கணக்கானோர் இணைய வழியில் பங்கேற்பர். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



▲ வாகன உதிரிபாக கழிவுகளில் இருந்து உருவாக்கப்பட்ட சிற்பத்தை சென்னை தலைமைச் செயலகம் எதிரே உள்ள பூங்காவில் சென்னை மாநகராட்சி சார்பில் நிறுவும் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள். படம்: க.ஸ்ரீபரத்

அனுமதிக்கப்பட்ட அளவைவிட 4 மடங்கு காற்று மாசு

# சென்னையில் உள்ளூர் காற்றின் தர கண்காணிப்பை பலப்படுத்த வேண்டும்

● ஆரோக்கிய திறனுக்கான முன்முயற்சி அமைப்பு யோசனை

■ சென்னை

சென்னையில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட 4 மடங்கு வரை காற்று மாசு உயர்ந்துள்ளதாகவும், அதைக் கட்டுப்படுத்த உள்ளூர் காற்றின் தர கண்காணிப்பை அரசு பலப்படுத்த வேண்டும் என்றும் ஆரோக்கிய திறனுக்கான முன்முயற்சி அமைப்பு யோசனை தெரிவித்துள்ளது.

'ஆரோக்கிய திறனுக்கான முன்முயற்சி' என்ற அமைப்பு சென்னையில் திரிசூலம், பாரிமுனை, காசிமேடு, திருவொற்றியூர், எண்ணூர் அனல் மின் நிலையம் அருகில் உள்ள செப்பாக்கம், வேளச்சேரி, தியாகராயநகர் உள்ளிட்ட 20 இடங்களில் கடந்த பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் 24 மணி நேர தொடர் காற்றுத் தர பரிசோதனையை நடத்தியது.

ஒரு கனமீட்டர் காற்றில் 2.5 மைக்ரான் அளவுகொண்ட காற்றில் மிதக்கும் நுண் துகள்களின் அளவு (PM2.5) 60 மைக்ரோகிராம் வரை இருப்பது அனுமதிக்கப்பட்ட அளவாகும். ஆனால் இந்த ஆய்வில் அனுமதிக்கப்பட்ட மாசு அளவை விட 4 மடங்கு அதிகமாக மாசு பதிவாகி இருப்பதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

திரிசூலம், பாரிமுனை, வியாசர்பாடி ஆகிய பகுதிகளில் மேற்கொண்ட ஆய்வில் 176 மைக்ரோ கிராம் முதல் 228 மைக்ரோ கிராம் வரை காற்று மாசு இருந்தது.

> ▼ **இந்த ஆய்வு முடிவுகளை பார்க்கும்போது, இது அமெரிக்க காற்றுத் தர நிர்ணய விதிகளின்படி ஆரோக்கியமற்ற நிலையாகும். இப்பகுதியில் வாழும், இதய அல்லது நுரையீரல் பிரச்சினை உள்ளவர்கள், வயதானவர்கள், சிறார்கள் உடல் ரீதியான செயல்பாடுகளை அதிகம் மேற்கொள்ளக் கூடாது**

### 128 மைக்ரோகிராம்

திருவொற்றியூர், காசிமேடு (துறைமுகம் அருகே), துரைப்பாக்கம் (குப்பை கொட்டும் வளாகம் அருகில்), குருவிமேடு (அனல்மின் நிலைய நிலக்கரி சாம்பல் குளம் அருகே), சோழிங்கநல்லூர் (பழைய மகாபலிபுரம் நெடுஞ்சாலை அருகில்), வேளச்சேரி, நொச்சிக்குப்பம், கொடுங்கையூர் (குப்பை கொட்டும் வளாகம் அருகில்), மீஞ்சூர், உர்ணாம்பேடு, செப்பாக்கம் (நிலக்கரி சாம்பல் குளம் அருகே) ஸ்ரீபெரும்புதூர், தியாகரயநகர், அத்திப்பேடு, காட்டுக்குப்பம், அம்பத்தூர் ஆகிய இடங்களில் பிஎம் 2.5 மாசு 59 முதல் 128 மைக்ரோகிராமாக இருந்தது ஆய்வில் தெரியவந்துள்ளது. காட்டுப்பள்ளி குப்பத்தில் 53 மைக்ரோ கிராமாக இது இருந்தது.

இந்த ஆய்வு முடிவுகளை பார்க்கும்போது, இது அமெரிக்க காற்று தர நிர்ணய விதிகளின்படி ஆரோக்கியமற்ற நிலையாகும். இப்பகுதியில் வாழும், இதய அல்லது நுரையீரல் பிரச்சினை உள்ளவர்கள், வயதானவர்கள், சிறார்கள் உடல் ரீதியான செயல்பாடுகளை அதிகம் மேற்கொள்ளக் கூடாது என அந்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக காற்றுத் தர கண்காணிப்பில் ஈடுபட்ட ஆய்வாளர் விஸ்வஜா சம்பத் கூறும்போது, "நிலக்கரியை எரிப்பதால் பெறப்படும் மின் பயன்பாட்டைக் குறைப்பது, போக்குவரத்து போன்றவற்றில் மாற்றம் ஏற்படுத்துவதன் மூலம் காற்று மாசுவையும், அதனால் ஏற்படும் ஆரோக்கிய பிரச்சினைகளையும் குறைக்க முடியும். சென்னை மாநகராட்சி உள்ளிட்ட பிற நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் வலுவான உள்ளூர் காற்றுத் தர கண்காணிப்பு அமைப்பை ஏற்படுத்த வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.



▲ சென்னை பெசன்ட் நகரில் புதிதாக கட்டப்பட்டு வரும் அன்னை வேளாங்கண்ணி ஆலய பணிகள் தற்போது முடிவடையும் தருவாயில் உள்ளது. படம்: பு.க.பிரவீன்

கடலோர காவல்படை சார்பில்

# இந்தியா - பாகிஸ்தான் போர் வெற்றி சுடருக்கு வரவேற்பு

■ சென்னை

இந்தியா - பாகிஸ்தான் போர் வெற்றியின் 50-ம் ஆண்டு பொன்விழா வெற்றி சுடருக்கு, கிழக்குப் பிராந்திய கடலோர காவல்படை அலுவலகம் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

கடந்த 1971-ம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் இடையே நடைபெற்ற போரில், இந்தியா வெற்றி பெற்றது. இவ்வெற்றியின் 50-ம் ஆண்டு பொன்விழாவை முன்னிட்டு, நாட்டின் நான்கு மூலைகளுக்கு வெற்றிச் சுடர் கொண்டு செல்லப்படுகிறது.

கன்னியாகுமரி வழியாக தமிழகத்துக்கு வந்த இச்சுடர் கடந்த 20-ம் தேதியன்று சென்னை வந்தடைந்தது. இந்நிலையில், இந்த வெற்றிச் சுடருக்கு சென்னையில் உள்ள கிழக்குப் பிராந்திய கடலோர காவல்படை சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. வெற்றி சுடரை கிழக்குப்பிராந்திய கடலோர காவல்படை ஐஜி ஆனந்த் பிரகாஷ் பதோலா பெற்றுக் கொண்டார்.

நிகழ்ச்சியில், 1971-ம் ஆண்டு போரில் பங்கேற்ற கடலோர காவல் படை வீரர்கள் 5 பேர் கவுரவிக்கப்பட்டனர்.

# பெண்கள் விடாமுயற்சியுடன் போராடினால் வெற்றி பெறலாம் நாசா பொறியாளர் நம்பிக்கை

■ சென்னை



▲ ஸ்வாதி மோகன்

பெண்கள் விடாமுயற்சியுடன் போராடினால் வெற்றி பெறலாம் என்று நாசாவின் பொறியாளர் ஸ்வாதி மோகன் தெரிவித்துள்ளார்.

சென்னை அமெரிக்க துணைத் தூதரகம் சார்பில் 'புலம்பெயர்ந்த சாதனையாளர்கள்' என்ற தலைப்பில் இணையவழியிலான கலந்துரையாடல் நிகழ்ச்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சிகளில் அமெரிக்காவில் கல்வி, அறிவியல் உட்பட பல்வேறு துறைகளிலும் சாதனை புரிந்த புலம்பெயர்ந்த இந்தியர்கள் தங்கள் வாழ்க்கை அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவுள்ளனர்.

இந்த தொடரின் முதல் நிகழ்வு இணையவழியில் நேற்று நடைபெற்றது. இதில் இந்திய வம்சாவளியை சேர்ந்த நாசா பொறியாளர் ஸ்வாதி மோகன் கலந்து கொண்டு பேசியதாவது:

நம் வாழ்வில் சாதனை புரிய நம் திறமைகளை அறிந்து வைத்திருப்பது அவசியம். அதன்மூலம் நமக்கு பிடித்த துறைகளைத் தேர்வு செய்து கடுமையாக உழைக்க வேண்டும். ஆரம்ப காலத்தில் எனக்கு மருத்துவராக விருப்பம் இருந்தது. ஆனால், பள்ளிப் படிப்பின்போது உயிரியல் பாடத்தைவிட இயற்பியல் மீது அதிக ஈர்ப்பு ஏற்பட்டது. இதனால் பொறியியல் துறையை தேர்வுசெய்து படித்தேன்.

அதன்பின் விண்வெளி அறிவியல் மீது ஆர்வம் கொண்டு நாசாவில் பல்வேறு பயிற்சித் திட்டங்களில் பங்காற்றினேன். தொடர்ந்து நாசாவில் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. நீண்டகால பணிக்குபின் நாசா பொறியியல் குழுவில் மேற்பார்வையாளராக உயர்ந்து, செவ்வாய் கிரகத்துக்கு ரோவர் அனுப்பும் திட்டத்தில் இடம்பெற்று முக்கிய பங்காற்றினேன்.

விண்வெளி ஆராய்ச்சித் துறையில் ஆண்களின் ஆதிக்கம் சற்று அதிகமாக காணப்படுகிறது. பெண்கள் இந்த துறைக்கு வரும்போது பெரும் சவால்களை சந்திக்க வேண்டியுள்ளது. தற்போது மாறி வரும் நாகரிக வளர்ச்சியால் இனிவரும் காலங்களில் இந்நிலை மாறும். விண்வெளித் துறை சார்ந்து ஆர்வம் வளர அதுகுறித்த புத்தகங்களை அதிகம் படிக்க வேண்டும். சமூக கட்டமைப்பு அழுத்தங்கள் உட்பட எத்தகைய சூழலிலும் பெண்கள் விடாமுயற்சியுடன் போராடினால் வெற்றி பெறலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட பலரின் கேள்விகளுக்கும் பதில் அளித்தார். இந்த நிகழ்வில் சென்னை அமெரிக்க துணைத்தூதர் ஜூடித் ரேவின் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# 7.97 லட்சம் கரோனா தடுப்பூசிகள் புனே, ஹைதராபாத்தில் இருந்து தமிழகத்துக்கு கொண்டு வரப்பட்டது

■ சென்னை

தமிழகத்துக்கு 7.97 லட்சம் கரோனா தடுப்பூசிகளை மத்திய அரசு நேற்று அனுப்பியது.

தமிழகத்தில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மையங்களில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. தினமும் சராசரியாக 2 லட்சம் தடுப்பூசிகள் போடப்படுவதால், மத்திய அரசு வழங்கும் தடுப்பூசிகள் சில தினங்களிலேயே தீர்ந்து விடுகின்றன. இதனால், தமிழகம் முழுவதும் தடுப்பூசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது.

இந்நிலையில், புனேவில் இருந்து 5 லட்சத்து 81,270 கோவிஷீல்டு, ஹைதராபாத்தில் இருந்து 2 லட்சத்து 15,810 கோவாக்சின் என மொத்தம் 7 லட்சத்து 97,080 லட்சம் தடுப்பூசிகள் விமானம் மூலம் சென்னைக்கு நேற்று வந்தன.

அவற்றை தேனாம்பேட்டை டிஎம்எஸ் வளாகத்தில் உள்ள மாநில மருந்து சேமிப்பு கிடங்குக்கு கொண்டு சென்ற சுகாதாரத் துறை அதிகாரிகள், தடுப்பூசிகளை மாவட்டங்களுக்கு பிரித்து அனுப்பும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.




விபரமறிய இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

அப்போலோ மருத்துவமனை தி இந்து நாளிதழ் இணைந்து வழங்கும் வலையொலி கருத்தரங்கில் பங்கேற்பீர்

**தேதி : 29 ஏப்ரல், 2021 (வியாழக்கிழமை)**
**நேரம் : காலை 11:30 - மதியம் 12:30**

Dr. M M யூசுஃப், சென்னை அப்போலோ மருத்துவமனையின் முதன்மை நெஞ்சக அறுவைசிகிச்சை நிபுணர். ரோபோடிக் இருதய அறுவைசிகிச்சை துறையில் உலகப்பிரசித்தி பெற்றவர். Total Arterial Robotic CABG எனப்படும் உயரிய அறுவைசிகிச்சை வழங்கும், உலகின் மிக சில மருத்துவர்களில் ஒருவராவார். Hybrid Coronary Revascularisation, Minimally Invasive Valve Repair Surgery மற்றும் Complex Aortic Aneurysm Repair Surgery போன்ற சிகிச்சைகளில் மிகுந்த அனுபவம் பெற்ற நிபுணர். சிறுதுளை ரோபோடிக் அறுவைசிகிச்சை பயிற்சியினை பெல்ஜியத்தில் மேற்கொண்டபின், ஐரோப்பாவில் உள்ள செயின்ட் பர்த்தலமேயு மருத்துவமனை, உலக புகழ்பெற்ற கிங்ஸ் கல்லூரி மருத்துவமனை, மற்றும் OLV மருத்துவமனைகளில் 20 வருடங்கள் பணியாற்றியவர்.

**சிறுதுளை இருதய அறுவைசிகிச்சை**

நெஞ்சுக்கூட்டினை அறுவைசிகிச்சை மூலம் திறக்காமல், விலாவில் சிறிய துளையிட்டு அதன் மூலம் இருதய அறுவைசிகிச்சையை மேற்கொள்ளும் முறையை Minimally Invasive Cardiac Surgery – MICS என வழங்குகிறோம். குறைந்த உதிரப்போக்கு, மிக குறைந்த வலி, மிகச்சிறிய தழும்பு, குறைந்தகால மருத்துவமனை வாசம், விரைவில் முழுகுணம் என நோயுற்றவருக்கு இதனால் விளையும் நன்மைகளை கருதி இந்த சிறுதுளை அறுவைசிகிச்சையை மருத்துவர்கள் பரிந்துரைக்கிறார்கள். அறுவை சிகிச்சை முடிந்ததும் வெறும் 2-3 நாட்கள் மருத்துவமனை வாசத்திற்கு பின் வீடு திரும்பும் நோயாளிகள், இரண்டு அல்லது மூன்று வாரங்களில் முழு குணமடைகிறார்கள். இந்த மருத்துவ தொழில்நுட்பம் மூலம் சிறுதுளை பைபாஸ், இதய அறை அடைப்பிதழ் சீரமைப்பு (Mitral Valve Repair), பெருந்தமனி சீரமைப்பு (TEVAR Thoracic Endovascular Aortic Repair) போன்ற பல்வேறு அறுவைசிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அப்போலோவின் வாக்குறுதி**

அப்போலோவில், நெஞ்சக அறுவைசிகிச்சை நிபுணர்கள், கதிரியக்க மருத்துவர்கள், மயக்கவியல் நிபுணர்கள், கைதேர்ந்த செவிலியர்கள், உள்ளுறுப்பு மேற்பரவல் பராமரிப்பாளர்கள் (Perfusionists) உள்ளிட்டோர், ஒரு குழுவாக உலகத்தரம் வாய்ந்த மருத்துவ கருவிகள் மூலம், மிகச்சிறந்த அறுவைசிகிச்சை அரங்குகளில், சிகிச்சை வழங்குகிறார்கள். அதிநவீன ரோபோக்கள், தரநிர்ணயம் செய்யப்பட சிகிச்சை, புனரமைப்பு, மற்றும் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகளால் சிறந்த சிகிச்சை பலனை நோயாளிகள் பெறுகிறார்கள்.

குறைந்தகால மருத்துவமனை வாசம் மட்டும் இந்த சிறுதுளை அறுவைசிகிச்சை முறை, நிகழ்ந்து வரும் பெருந்தொற்று காலத்தில், அலைமோதிய நோயாளிகளால் ஏற்பட்ட படுக்கைவசதி குறைபாட்டினை தீர்க்க பெரிதும் கைகொடுக்கிறது. Dr MM யூசுஃப் இந்த பொதுமுடக்கத்தில் 100க்கும் மேற்பட்ட ரோபோடிக் சிறுதுளை பைபாஸ் அறுவைசிகிச்சைகளை வெற்றிகரமாக வழங்கியுள்ளார்.

**அப்போலோ மருத்துவமனை**

21, கிரீம்ஸ் லேன், கிரீம்ஸ் சாலை அருகே, சென்னை - 600 006. தொலைபேசி : **+91 82205 52288** | மின்னஞ்சல்: **drmm_yusuf@apollohospitals.com**

Apollochennai | @Apollo_Chennai | apollo_chennai | Apollo Hospitals Chennai | www.chennai.apollohospitals.com

## தமிழகத்தில் சட்டத்துக்கு புறம்பாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள

# சிறுபான்மையின மக்களின் நிலங்களை மீட்க நடவடிக்கை

● மாநில சிறுபான்மையினர் ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ் தகவல்

■ திருவள்ளூர்

திருவள்ளூர் மாவட்டத்தில் சிறுபான்மையினர் நலனுக்காக தமிழக அரசு செயல்படுத்தும் நலத்திட்டங்கள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், மாநில சிறுபான்மையின ஆணைய உறுப்பினர் - செயலர் துரை. ரவிச்சந்திரன், ஆணைய துணைத் தலைவர் மஸ்தான், மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து சிறுபான்மையினருக்கான கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சிறுபான்மையின மக்களின் பிரதிநிதிகள் பங்கேற்று, அரசின் நலத் திட்டங்கள் முழுமையாக தங்களுக்கு கிடைப்பதில் உள்ள சிக்கல்கள், ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அடக்கஸ்தலங்கள், கல்லறைகள் உள்ளிட்டவை குறித்து எடுத்துரைத்தனர்.



▲ திருவள்ளூர் மாவட்டத்தில் சிறுபான்மையினர் நலனுக்காக தமிழக அரசு செயல்படுத்தும் நலத்திட்டங்கள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் நேற்று மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கத்தில், மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் தலைமையில் நடைபெற்றது. அப்போது சிறுபான்மையினத்தைச் சேர்ந்த 32 பேருக்கு ரூ.3,79,442 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இதைக் கேட்டறிந்த ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், "இவை அனைத்தும், அரசின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, உரிய தீர்வு காணப்படும்" என்றார். தொடர்ந்து, சிறுபான்மையினத்தைச் சேர்ந்த 32 பேருக்கு ரூ.3.79 லட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். பிறகு, அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழகத்தில் அரசால் சிறுபான்மையினருக்காக செயல்படுத்தப்படும் எவ்விதத் திட்டங்களும் கடந்த 10 ஆண்டுகளாக முறையாக அமல்படுத்தப்படவில்லை என்பது இந்த ஆய்வின் மூலம் தெரிகிறது. இந்த ஆண்டு முதல் அனைத்து திட்டங்களும் முழுமையாக சிறுபான்மையின மக்களை சென்றடையும் வண்ணம், தமிழகத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் முதல் ஆய்வுக் கூட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் வரலாற்றிலேயே முதன் முறையாக சிறுபான்மையினர் நலத்துறை என்ற புதிய அமைச்சகத்தை உருவாக்கி, அத்துறை அமைச்சருடன் தமிழக முதல்வர் பல புதிய திட்டங்களை ஏற்பாடு செய்துள்ளார். அத்திட்டங்கள் நிதிநிலை அறிக்கையில் இடம்பெறும்.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சிறுபான்மையினரின் அடக்கஸ்தலங்கள், கல்லறைகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால், ஈமச்சடங்குகளை நிறைவேற்றுவதில் பல இன்னல்கள் உள்ளதை அறிய முடிகிறது.

ஆகவே, தமிழகத்தில் சட்டத்துக்கு புறம்பாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள சிறுபான்மையின மக்களின் நிலங்களை மீட்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்றார்.

# சோழவரம் அருகே ரவுடி கொலை இருவர் போலீஸில் சரண்

■ பொன்னேரி

சோழவரம் அருகே ரவுடி ஒருவர் நேற்று கொலை செய்யப்பட்டார். இச்சம்பவம் தொடர்பாக இருவர் காவல் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டம், நல்லூரில் சென்னை- கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சுங்கச்சாவடி பின்புறம் உள்ள முட்புதரில் இளைஞர் ஒருவரின் உடல் கிடப்பதாக நேற்று காலை சோழவரம் போலீஸாருக்கு தகவல் கிடைத்தது.

போலீஸார் சம்பவ இடம் சென்று பார்த்தபோது, அங்கு இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டு கிடந்தது தெரிய வந்தது. தொடர்ந்து, திருவள்ளூர் எஸ்பி வருண்குமார், பொன்னேரி டிஎஸ்பி கல்பனா தத், சோழவரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் ரஜினி காந்த் ஆகியோர் சம்பவ இடத்தில் விசாரணை செய்தனர்.

### பல்வேறு வழக்குகளில் தொடர்பு

அவ்விசாரணையில், அரிவாளால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுக் கிடந்த அந்த இளைஞர், சென்னை, புழல் காவாங்கரையை சேர்ந்த சண்முகப்பாண்டியன்(26) என்பதும், அவர் மீது சோழவரம், செங்குன்றம் காவல் நிலையங்களின் கஞ்சா கடத்தல், அடிதடி உள்ளிட்டவை தொடர்பாக பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளதும் தெரிய வந்துள்ளது.

சண்முகப்பாண்டியனின் உடலை கைப்பற்றிய போலீஸார், பிரேதப் பரிசோதனைக்காக பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

### சரணடைந்தோரிடம் விசாரணை

இது தொடர்பாக போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ள நிலையில், சண்முகப்பாண்டியன் கொலை தொடர்பாக செங்குன்றம் அருகே உள்ள மொண்டியம்மன் நகரைச் சேர்ந்த மணிகண்டன்(26), முருகன்(26) ஆகியோர் சோழவரம் காவல் நிலையத்தில் சரண் அடைந்துள்ளனர்.

அவர்களிடம் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் சிலரை தேடி வருகின்றனர்.

## சென்னை ஜெம் மருத்துவமனையில் முதல் முறையாக

# குழந்தைகள் இரைப்பை மற்றும் குடல் சிகிச்சை மையம் திறப்பு

■ சென்னை

தமிழ்நாட்டிலேயே முதல் முறையாக சென்னை ஜெம் மருத்துவமனையில் குழந்தைகளுக்கான இரைப்பை மற்றும் குடல் சம்பந்தமான நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் மையம் தொடங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஜெம் மருத்துவமனை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

குழந்தைகளுக்கான இரைப்பை மற்றும் குடல் நோய் சிகிச்சை மையத்தை பேராசிரியர் பி.கிருஷ்ணராவ், ஆயிரம் விளக்கு சட்டப்பேரவை உறுப்பினர் டாக்டர் என்.எழிலன் ஆகியோர் திறந்து வைத்தனர். மேலும் 'பவர்டு ஸ்பைரல் என்ட ரோஸ்கோபி' என்ற புதிய தொழில்நுட்பமும் ஜெம் மருத்துவமனையில் அறிமுகப்படுத்தப்பட்டது. நாட்டில் சில மையங்களில் மட்டும் இந்த வசதி உள்ளது.

நிகழ்ச்சியில் ஜெம் மருத்துவமனை நிறுவனர் மற்றும் தலைவர் டாக்டர் சி.பழனிவேலு கூறும்போது, "செரிமானக் கோளாறு குழந்தையின் வளர்ச்சி, மனவளர்ச்சி, ஒட்டுமொத்த நோய் எதிர்ப்பு சக்தியை பாதிக்கும். உலகில் 10 சதவீத குழந்தைகளுக்கு குடல் மற்றும் இரைப்பை சம்பந்தமான பிரச்சினைகள் உள்ளன. எனவே, காஸ்ட்ரோஎன்டராலஜி மருத்துவம் முக்கியமானது" என்றார்.

சென்னை ஜெம் மருத்துவமனை தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் எஸ்.அசோகன் கூறும்போது, "குழந்தைகளுக்கான இரைப்பை மற்றும் குடல் துறையில் அதிநவீன உள்கட்டமைப்பு, உபகரணங்கள் உள்ளன." என்றார்.

பவர்ட் ஸ்பைரல் என்ட ரோஸ்கோபி நுட்பம் பற்றி ஜெம் மருத்துவமனை இயக்குநர் டாக்டர் பி.செந்தில்நாதன் கூறும்போது, "இந்த புதிய தொழில் நுட்பம் மூலம் முழு சிறு குடலையும் ஒரு மணி நேரத்தில் பரிசோதித்து சிகிச்சை அளிக்க முடியும்" என்றார்.

இம்மருத்துவமனையின் காஸ்ட்ரோஎன்டராலஜி துறை தலைவர் டாக்டர் வினோத் குமார் கூறும்போது, "ஸ்பைரல் என்டரோஸ்கோபி மூலம் சிறுகுடல் எண்டோஸ்கோபியை குறைந்த நேரத்தில் எளிதாக செய்ய முடியும்" என்றார்.

உலக ஹெபடைடிஸ் தினத்தின் ஒரு பகுதியாக, சென்னை ஜெம் மருத்துவமனையில் வரும் ஆகஸ்ட் 7-ம் தேதி வரை பொதுமக்களுக்கு இலவச ஹெபடைடிஸ்-பி தடுப்பூசி, கல்லீரல் ஸ்கேன், ரத்தப் பரிசோதனை செய்யப்படுகிறது.

## கிரெசன்ட் கல்லூரியில்

# பி.ஏ. புதிய படிப்பு அறிமுகம்

■ சென்னை

பி.எஸ்.அப்துர் ரஹ்மான் கிரெசன்ட் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் பி.ஏ. பொது கொள்கை திட்டம் என்ற புதிய படிப்பு நேற்று அறிமுகம் செய்யப்பட்டது.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பு: பி.ஏ. பொது கொள்கை திட்டம் படிப்பு மூலம் மாணவர்கள் பட்டம் பெறுவதோடு, சிவில் சர்வீசஸ் சேவைகளுக்குத் தயாராக முடியும். இது பட்டப்படிப்பு மற்றும் சிவில் சர்வீசஸ் தேர்வுக்குத் தயாராகும் கூடுதல் நேர இடைவெளியைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

புதிய படிப்பு அறிமுக விழாவில், பி.எஸ்.அப்துர் ரஹ்மான் கிரெசன்ட் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவன துணைவேந்தர் பீர் முகமது, பதிவாளர் ஏ.ஆசாத், கூடுதல் பதிவாளர் ராஜா உசேன், சிஆர்பிஎஃப் முன்னாள் உதவி கமாண்டன்ட் மற்றும் பொது கொள்கை திட்ட இயக்குநர் இளஞ்செழியன் ஆகியோர் பங்கேற்றனர்.

மேலும் ஓய்வு பெற்ற ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகள் சந்தேஷ் பாபு, வி.காமராஜா, சஷிகாந்த் செந்தில் ஆகியோர் கவுரவ விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

விழாவில் முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி சந்தோஷ்பாபு கூறும்போது, "ஐஏஎஸ் அதிகாரியாக இருப்பது பல இளைஞர்களின் கனவாகும். எவ்வளவு விரைவாக செய்கிறீர்களோ, அவ்வளவு அதிக ஆண்டுகள் நீங்கள் நாட்டின் சேவையில் இருப்பீர்கள். புதிய பி.ஏ. பொதுக் கொள்கை பட்டப் படிப்பு திட்டமானது யுபிஎஸ்சியின் கோரிக்கைகளுக்கு இணங்கும் வகையில் மிகவும் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. 22 வயதில் ஐஏஎஸ் அதிகாரியாக வேண்டும் என்ற கனவு இருந்தால், 12-ம் வகுப்பு முடித்தவுடன் இப்படிப்பை படிக்க ஆயத்தமாக வேண்டும்" என்றார்.

### சேர்க்கை தொடக்கம்

இப்படிப்புக்கான விண்ணப்ப செயல்முறை தற்போது நடைபெற்றுக் கொண்டுள்ளது. சேர்க்கை பற்றியோ வேறு சந்தேகங்களோ இருந்தால் www.crescent.education இணையதளத்தை பார்வையிடலாம் அல்லது +91-9543277888 என்ற எண்ணை அழைக்கலாம்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு ஆதரவாக பிரச்சாரம்

■ காஞ்சிபுரம்

புதுதில்லியில் போராடும் விசாயிகளுக்கு ஆதரவு தெரிவித்து ஈஞ்சம்பாக்கம், பெரியகரும்பூர், புதுப்பாக்கம், செம்பரம்பாக்கம், கோவிந்தவாடி அகரம், படுநெல்லி, கம்மாரப்பாளையம், மணியாச்சி, சம்பந்தபுரம், வரதபுரம், மூலப்பட்டு, பரந்தூர் உள்ளிட்ட 23 கிராமங்களில் பிரச்சார இயக்கம் நடைபெற்றது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டத் தலைவர் சாரங்கன், மாவட்டச் செயலர் கே.நேரு மற்றும் விவசாயிகள் சங்கம், சிஐடியு நிர்வாகிகள் பலர் இதில் பங்கேற்றனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

# மாமல்லபுரத்தில் தனியார் விடுதிகளில் விதிமீறல்கள்

● கண்காணிப்பு பணிகளை தீவிரப்படுத்த கோரிக்கை

■ மாமல்லபுரம்

செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்துக்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். இதனால், கடற்கரையையொட்டி அரசு மற்றும் தனியார் விடுதிகள், உணவகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கரோனா பேரிடரால் ஊரடங்கு அறிவிக்கப்பட்ட பிறகு, தற்போது அரசு வழங்கிய தளர்வுகள் காரணமாக மீண்டும் விடுதிகள் திறக்கப்பட்டுள்ளன. எனவே, சுற்றுலாப் பயணிகளும் வரத் தொடங்கியுள்ளனர்.

ஆனால், ஒத்தவாடை தெருவில் உள்ள சில விடுதிகளில் அரசு வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றாமல் நிகழ்ச்சிகள் நடைபெறுவதாக கூறப்படுகிறது.

தகவல் அறிந்த ஆட்சியர் ராகுல் நாத், விதிமீறல் விடுதிகள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார். இதையடுத்து, வருவாய், பேரூராட்சி அதிகாரிகள் ஒத்தவாடை தெருவில் ஒரு விடுதிக்கு சீல் வைத்து 2 விடுதிகளுக்கு அபராதம் விதித்தனர்.

இதையடுத்து, விடுதி நிர்வாகங்கள் ஓரிருநாட்கள் விதிமுறைகளை கடைபிடித்தன. தற்போது, மீண்டும் விதிகளை மீறி இரவு நேரங்களில் விடுதிகள் மற்றும் உணவகங்கள் செயல்பட்டு வருவதாக கூறப்படுகிறது. அதனால், அதிகாரிகள் கண்காணிப்பு பணிகளை தீவிரப்படுத்தி, விதிகளை மீறும் விடுதி நிர்வாகங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என உள்ளூர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து, மாமல்லபுரம் வருவாய் ஆய்வாளர் ஜேம்ஸ் கூறும்போது, "ஒத்தைவாடை தெருவில் அரசு விதிகளை மீறி செயல்படும் விடுதி மற்றும் உணவங்கள் மீது பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" என்றார்.

# கூடுவாஞ்சேரி அருகே கார் கடத்திய 3 பேர் கைது

■ வண்டலூர்

வண்டலூர் அருகே கிளாம்பாக்கம் ஜிஎஸ்டி சாலையில் கார் ஓட்டுநர் கோவிந்தராஜ் (41) என்பவரிடம் 3 இளைஞர்கள் நேற்று முன்தினம் இரவு, 'சிங்கபெருமாள்கோவில் வரை செல்ல வேண்டும்' எனக்கூறி காரில் ஏறி அமர்ந்துள்ளனர்.

கார் கூடுவாஞ்சேரி அருகே செல்லும்போது, 'சிறுநீர் கழிக்க வேண்டும் நெல்லிகுப்பம் சாலை மார்க்கமாக செல்லுங்கள்' என அவர்கள் கூறினர். கார் நெல்லிகுப்பம் வழியாக சென்றபோது திடீரென கத்தியை காட்டி மிரட்டி மறைமலை நகர் நோக்கி ஓட்டச் செய்தனர். பின்னர் தென்மேல்பாக்கம் பகுதியில் ஓட்டுநரை தாக்கி, காரை கடத்திச் சென்றனர்.

இதுகுறித்து கோவிந்தராஜ் போலீஸில் புகார் செய்தார். உடனடியாக செங்கல்பட்டு மாவட்டம் முழுவதும் போலீஸார் தீவிர வாகன தணிக்கையில் ஈடுபட்டனர். அப்போது, கேளம்பாக்கம் அருகே திருப்போரூரில் இருந்து வந்த காரை போலீஸார் விரட்டிச் சென்று மடிக்கிப் பிடித்தனர்.

விசாரணையில் காரில் இருந்தவர்கள் கூடுவாஞ்சேரி பகுதியை சேர்ந்த அசோக் (21), வசந்த் (18), விக்னேஷ் (19) என தெரிந்தது. அவர்களை போலீஸார் கைதுசெய்து காரையும் பறிமுதல் செய்தனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி
மின்சார துறை
மின் ஒப்பம்
மி.து.ந.க.எண்.சி.பி.மே2/பி1/2091/2021

பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறைக்கு மண்டலம் 3 மாதவரம், வார்டு-29 சின்னசேக்காடு பகுதியில் 14000 cum இயற்கை உயிர் வாயு கலன் (Bio CNG Plant - 2 Units) செயலாக்கம் செய்ய ஒரு எண்ணிக்கையில் 1250 KVA திறன் கொண்ட மின்மாற்றி வழங்கி, நிறுவி மற்றும் இயந்திரங்கள் அமைத்து உயர்மின் அழுத்த மின் இணைப்பு வசதி (3 phase HT line with separate feeder power supply) பெற்று, இயக்கி வைக்கும் பணி. பணிகளுக்கான மின் ஒப்பங்கள் மேற்பார்வை பொறியாளர் /மின்சாரம் அவர்களால் வரவேற்கப்படுகின்றன.
பணிகளுக்கான மதிப்பு ரூ. 77,72,912/- ஆகும்.
ஒப்பந்ததாரர்கள் https://tntenders.gov.in இணையதளத்தின் மூலம் விவரங்கள் தெரிந்துகொண்டு மின் ஒப்பத்தில் 12.08.2021 பிற்பகல் 3.00 மணிக்குள் பங்கேற்கலாம், 13.08.2021 பிற்பகல் 3.15 மணிக்கு ஒப்பங்கள் திறக்கப்படும்.
செ.ம.தொ.இ./2247 /ஒப்பந்தப்புள்ளி/2021 — கண்காணிப்பு பொறியாளர் / மின்துறை

பெருநகர சென்னை மாநகராட்சி
மழைநீர் வடிகால் துறை
ம.நீ.வ.து.ந.க.எண்.பி2/0134/2021

கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு மறு ஒப்பந்தபுள்ளி இரண்டு உறை முறையில் கோரும் அறிவிக்கை

| வ. எண். | பணியின் விவரம் | பணியின் மதிப்பு (with GST) கோடி | முன் வைப்பு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் வகுப்பு |
|---|---|---|---|---|
| 1. | மண்டலம்-9 மற்றும் 10, வார்டு 122 மற்றும் 141-ல் மாம்பலம் கால்வாயில் வெள்ளத் தடுப்புச் சுவர், நடைபாதை, மிதிவண்டி பாதை பூங்காக்கள் மற்றும் மின்விளக்குகள் அமைக்கும் பணி Reach - 4 chainage 2827 to 3958 mtr (டேங்க் பண்ட் சாலை முதல் சி.ஐ.டி. நகர் 1வது பிரதான சாலை வரை) | 13.96 | 13,97,000/- | முதல் வகுப்பு |

நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள் : 31.08.2021 மாலை 3.00 மணிக்கு https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் Digital Signature card/e.token பயன்படுத்தி ஒப்பம் சமர்பிக்க வேண்டும்.
பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் திறக்கப்படும் நாளும், நேரமும்: https://tntenders.gov.in என்ற வலைதளத்திலிருந்து பெறப்படும் ஒப்பந்தபுள்ளிகள் வருகை தரும் ஒப்பந்தாரரின் முன்னிலையில் 01.09.2021 அன்று 3.30 மணியளவில் கணினி மூலம் திறக்கப்படும்.
செ.ம.தொ.இ./ 2251/ஒப்பந்தப்புள்ளி/2021 — கண்காணிப்பு பொறியாளர்/மநீவது

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.
**மின்னஞ்சல் முகவரி: press.release@hindutamil.co.in**

GOVERNMENT OF TAMILNADU
DEPARTMENT OF HANDLOOMS AND TEXTILES
TENDER NOTICE FOR PURCHASE OF 60sC DYED COTTON CONE WARP YARN

Sealed tenders with two cover system in the prescribed format are invited only from the interested eligible parties for the Purchase of 60sC Dyed Cotton Cone Warp Yarn for Distribution of Sarees and Dhoties scheme Pongal 2022.

| Sl. No. | Variety of yarn | Required Quantity in MT | Required Earnest money deposit in (Rs.) | Sale period | Last date and time for receipt of tender | Date and time of opening of Tender | Supply Period |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 60sC Dyed Cotton Cone Warp Yarn | 1922.00 | 5,00,000/- | 29.07.2021 to 31.08.2021 upto 10.30 a.m | 31.08.2021 upto 11.00 a.m | 31.08.2021 at 12.00 noon | 75 days |

Eligibility of the Tenderer and Other conditions are stipulated in the Tender Schedule. 1. The tender Schedule can be downloaded at free of cost from Government tender website www.tenders.tn.gov.in and used for bidding. 2. If requested to send through Post: By Demand Draft – Rs.5,700/- in favour of "Yarn Committee for FDS 2014" payable at Chennai City (inclusive of 12% GST).
Interested tenderers are requested to submit the tender schedule duly filled, in separate covers and it should be sent in a sealed envelope superscribing "Tender for Purchase of 60sC Dyed Cotton Warp Yarn" addressed to "The Joint Director(Uniforms)/ Tender Inviting Authority, O/o Commissioner of Handlooms and Textiles, Kuralagam, II Floor, Chennai - 600 108".
Pre Bid Meeting: There will be a pre bid meeting on 17.08.2021 at 11.00 am to 12.00 noon in the Conference Hall of the Office of the Commissioner of Handlooms and Textiles, Chennai-108.
Contact: Joint Director (Uniforms)
Telephone: 044-25358715, Fax: 044-25351177, Mobile: 9360318278
Email ID: tenderwing2020@gmail.com
DIPR / 2240 / Tender / 2021 — Joint Director (Uniforms)/Tender Inviting Authority

கர்நாடகா வங்கி லிமிடெட்
சொத்து வசூல் நிர்வாக கிளை
எண்.324, தரைத்தளம், தம்பு செட்டி தெரு, சென்னை-600 001
Phone : 044-23463509 (Gen) /7595076384 (CM)
E-mail : chennai.arm@ktkbank.com
CIN : L85110KA1924PLC001128

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6)-ன்கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.

கர்நாடகா வங்கி லிமிடெட், சென்னை-மேற்கு மாம்பலம் கிளையில் (Phone: 044-23453258 Mobile: 9791043490 (BM) / 9500045745 (ABM)) அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சொத்தினை கர்நாடகா வங்கி லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் 05.10.2020 தேதியன்று ஆக்கப்பூர்வமான சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்களிடமிருந்து பெறவேண்டிய கடன் நிலுவைத்தொகை PSOD A/c No.1617000600002301-ன் கீழ் ரூ.1,12,29,303.64 [ரூபாய் ஒரு கோடியே பன்னிரண்டு லட்சத்து இருபத்தொன்பதாயிரத்து முன்னூற்று மூன்று மற்றும் பைசா அறுபத்து நான்கு மட்டும்] மற்றும் 01.07.2021 முதல் பற்று வைக்கப்படாத வட்டி, இதர செலவுகளுடன் வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்தினை "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில் 14.09.2021 அன்று விற்பனை செய்யப்படும் என இதன்மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

(1) M/s.நெல்லையா டிரேடிங் கம்பெனி, அதன் சார்பாக அதன் உரிமையாளர்: Mrs.S.அமுதா, W/o.N.சேர்மராஜ், எண்.71B, கண்ணகி நகர், 200 அடி ரோடு, கொளத்தூர், சென்னை-600099. (2) Mrs.S.அமுதா, S/o.N.சேர்மராஜ், (3) Mr.அர்விந்த் நெல்லையா, S/o.N.சேர்மராஜ், எண்.2&3 ஆகியோரின் வீட்டு முகவரி: எண்.76, அய்யாவு தெரு, ஷெனாய் நகர், சென்னை-600030.

ஏலத்தின் தேதி மற்றும் நேரம்
14.09.2021 அன்று காலை 11.00 மணி முதல் 11.30 மணி வரை

அசையா சொத்து விவரம்
சர்வே எண்.49 பகுதி, TNHB மனை எண்.5875, HIG டைப், அம்பத்தூர் பேஸ் I & II, சென்னை (தமிழ்நாடு) நகர்புற மேம்பாட்டு திட்டம், அயப்பாக்கம் கிராமம், அம்பத்தூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் என்னும் முகவரியில் 318.57 சதுர மீட்டர் நிலம், அதனுடன் பாதி கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் (தரைத்தளம் + முதல் தளம்) பரப்பு 3050 சதுர அடி (அங்குள்ளபடி தோராயமாக கட்டிடப்பரப்பு) மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். சொத்தானது Ms.அமுதா-க்கு சொந்தமானது. சொத்தின் எல்லைகள்: வடகிழக்கு: மனை எண்.5885 & 5886, தென்கிழக்கு: மனை எண்.5876, தென்மேற்கு: 15 மீட்டர் ரோடு, வடமேற்கு: மனை எண்.5874.

குறைந்தபட்ச கேட்பு விலை: ரூ.1,36,50,000/- இதற்கு குறைவாக சொத்து விற்கப்படமாட்டாது
டேவணித் தொகை: ரூ.13,65,000/-

இந்த அறிவிப்பினை 2002 ஆம் ஆண்டு கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமையை அமலாக்க விதிகள் 8-ன் பிணை விதி 6-ன் கீழ் கடன்தாரர் / ஜாமீன்தாரருக்கு அறிவிப்பாக கொள்ள வேண்டும்.
விற்பனையின் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கர்நாடகா வங்கியின் www.karnatakabank.com என்ற இணையதளத்தில் "Mortgaged Assets for Sale" என்ற தலைப்பின் கீழ் கிடைக்கும்
இ-ஏலமானது https://bankauctions.in/ என்ற இணையதளத்தின் மூலம் 14.09.2021 அன்று காலை 11.00 மணி முதல் 11.30 வரை ஒவ்வொரு 5 நிமிட இடைவெளிகளுடன் காலவரையின்றி நடத்தப்படும். உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் தங்கள் பெயரை https://bankauctions.in/ ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை மற்றும் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். (உத்தேசமாக 13.09.2021 அன்று) தொடர்புக்கு: M/s 4 Closure, Mr.U.சுப்பா ராவ் (தெற்கு மண்டல தலைவர்), எண்.605-A, 6வது தளம், மைத்ரிவனம், அமீர்பேட்டை, ஹைதராபாத் -500038 Contact No.040-23736405, Mobile: 8142000061, E-mail: subbarao@bankauctions.in/info@bankauctions.in மற்றும் Mr.ஸ்ரீகாந்த் B. (உதவி மேலாளர்), எண்.22, 5வது குறுக்கு, குருமகால் விரிவு, இந்தியன் ஹோட்டல் எதிரில், K.G.ஹல்லி, ஜலஹல்லி (மேற்கு) பெங்களூரு-560010 Mobile No: 9515160061, E-mail: sreekanth@bankauctions.in
இடம் : சென்னை
தேதி : 27.07.2021
முதன்மை மேலாளர் & அதிகாரப்பூர்வ அதிகாரி, கர்நாடகா வங்கி லிமிடெட்

வரி விளம்பரங்கள்

பொது

பொது அறிவிப்பு

IN THE COURT OF THE LXXXV ADDL. CITY CIVIL JUDGE, COMMERCIAL COURT, AT BENGALURU (CCH-86)
Com. O.S. No. 7189/2019
BETWEEN: Sri. M. Prabhakara Gupta, Malayaantham (HUF), Represented by its Kartha, aged about 73 years, S/o late M. Nanjundeswara Gupta, R/at No. 49/2, "Neeladri", Shankar Mutt Road, Shankarapuram, Bengaluru - 560 004. ... PLAINTIFF
AND: M/s. B.S.R. Enterprises and others ... DEFENDANTS
SUMMONS TO BE SERVED ON THE DEFENDANTS U/O V RULE 20 OF CPC AT THE FOLLOWING ADDRESSES
1. M/s B.S.R. Enterprises, A Partnership Business Concern, Registered under the provisions of Indian Partnership Act, 1932, and having its Principal place of business at No. 15, Curve Road, Tasker Town, near New Indian Express, Queens Road Circle, Bengaluru -560 051 Represented by its Partners
(a) Sri G. Praveen Kumar Reddy and (b) Sri B. Raghavendra Reddy
2. Sri G. Praveen Kumar Reddy, Managing Partner, M/s B.S.R. Enterprises, No. 15, Curve Road, Tasker Town, Near New Indian Express, Queens Road Circle, Bengaluru - 560 051.
ALSO AT: Sri G. Praveen Kumar Reddy, Managing Partner, M/s B.S.R. Enterprises, F-1, Kamalodaya Apartment, No. 15, Curve Road, Tasker Town, Near New Indian Express, Queens Road Circle, Bengaluru-51.
Sri G. Praveen Kumar Reddy, Director, M/s B.S.R. Developers Pvt Ltd., BSR Janus" No. 29, II Floor, Tank Bund Road, Nungambakkam, Chennai - 600 034.
WHEREAS; the Plaintiff has filed the above suit as against the defendants, for recovery of money directing the defendants to pay the plaintiffs outstanding amount of Rs. 34,31,848/- with interest of 24% per annum and other consequential reliefs.
You are hereby directed to appear before this Hon'ble Court (CCH-86), either in person or through a Pleader, on 17-08-2021 at 11 a.m., to answer the claim of the Plaintiff, failing which, the matter will be disposed off ex-parte.
Given under my hand, signature and seal of this Hon'ble Court, on 17-07-2021.
By order of the Court, Sheristedar, City Civil Court, Bangalore.
Advocate for Plaintiff:
Sri V.B. Shiva Kumar,
No. 230, I-Floor, 4th Main Road, Chamarajpet, Bangalore - 560 018.

திருமண சேவை மையம்

1000 DAYS Validity + Free Benefits One Time Regn. Fees Rs.1000. brahminkalyanam.com, bkmatrimony.com. 89397 02500

திருமண சேவை மையம்









Published by N. Ravi at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by D.Raikumar at Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist., Pin: 603209. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).

# உள்ளாட்சி தேர்தலுக்காக தயாராகிக் கொண்டிருக்கிறோம்

● மநீம தலைவர் கமல்ஹாசன் உறுதி

■ சென்னை

ஒளிப்பதிவு திருத்தச் சட்ட வரைவு 2021 கொண்டு வருவதற்கு திரையுலகினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், தனது கருத்தை நாடாளுமன்ற நிலைக்குழுவிடம் தெரிவிப்பதற்காக மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவரும், நடிகருமான கமல்ஹாசன் டெல்லி சென்றார்.

அங்கிருந்து நேற்று சென்னை திரும்பிய கமல்ஹாசன் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியிருப்பதாவது:

டெல்லி சென்று நான் தெரிவித்த கருத்துகளை வெளிப்படையாக தெரிவிக்கக் கூடாது. எனது கருத்து என்னவாக இருக்கும் என தெரிந்திருந்தும் அந்த கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரத்தை அளித்ததற்காக மத்திய அரசுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திமுக ஆட்சியை எதிர்த்து அதிமுக ஆர்ப்பாட்டம் நடத்தியிருப்பது தொடக்க காலம் முதல் செய்து கொண்டிருக்கும் வேலைதான். இப்போதும் அது தொடர்கிறது என நினைக்கிறேன். உள்ளாட்சித் தேர்தலுக்காக எங்கள் கட்சி தயாராகிக் கொண்டிருக்கிறது. அதற்கான எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மூத்த கம்யூனிஸ்ட் தலைவர் சங்கரய்யாவுக்கு "தகைசால் தமிழர்" விருது அறிவிக்கப்பட்டிருப்பது எனக்கும், தமிழர்களுக்கும், தோழர்களுக்கும் கிடைத்த பெருமையாகவே பார்க்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.



▲ பொறியியல் சேர்க்கைக்கான இணையவழி பதிவு கடந்த 26-ம் தேதி தொடங்கியது. சென்னை கிண்டி தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தில் அமைக்கப்பட்டுள்ள வழிகாட்டு மையத்தில், இணைய வசதி இல்லாத மாணவர்களின் சந்தேகங்களுக்கு அலுவலர்கள் விளக்கமளிக்கிறார்கள். படம்: பு.க.பிரவீன்



▲ திமுக தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாததை கண்டித்து அதிமுகவினர் ஆர்ப்பாட்டம் செய்தனர். சிட்லபாக்கம் பகுதியில் அதிமுக மாவட்ட செயலாளர் சிட்லபாக்கம் ராஜேந்திரன் வீட்டின் முன்பு அதிமுகவினர் கண்டன முழக்கமிட்டனர். படம்:எம்.முத்துகணேஷ்



▲ திமுக அரசின் மெத்தனப்போக்கை கண்டித்து, கோகுல இந்திரா தலைமையில் சென்னை அரும்பாக்கம் பாஞ்சாலி அம்மன் கோயில் அருகில் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் தொண்டர்கள், கவன ஈர்ப்பு முழக்கங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர். படம்: ம.பிரபு

### அதிமுக சார்பில், சென்னை, காஞ்சிபுரம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில்

# தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற கோரி ஆர்ப்பாட்டம்

■ சென்னை

தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவது உள்ளிட்டவற்றை வலியுறுத்தி திமுக அரசுக்கு எதிரான அதிமுகவின் முதல் கவன ஈர்ப்பு முழக்க போராட்டம் சென்னையில் பல்வேறு இடங்களில் நேற்று நடைபெற்றது.

சென்னையைப் பொறுத்தவரை, தென்சென்னை, வடசென்னை மாவட்டங்களில் உள்ள நிர்வாகரீதியாக பிரிக்கப்பட்ட மாவட்டங்களின் செயலாளர்கள் தங்கள் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் பிரதான சாலைகளில் நிர்வாகிகள், தொண்டர்களுடன் இணைந்து முழக்கங்களை எழுப்பினர். குறிப்பாக, முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் - ராயபுரம் எம்எல்ஏ அலுவலகம் அருகிலும், கோகுல இந்திரா - அரும்பாக்கம் பாஞ்சாலிஅம்மன் கோயில் அருகில் பூந்தமல்லி நெடுஞ்சாலையிலும் தொண்டர்களுடன் இணைந்து கவன ஈர்ப்பு முழக்கங்களை எழுப்பி தங்கள் எதிர்ப்பை பதிவு செய்தனர்.

மேலும், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர்களான வேளச்சேரி அசோக் - வேளச்சேரி 100 அடி சாலையிலும், தி.நகர் பி.சத்யா - தி.நகர் தொகுதிக்கு உட்பட்ட வடபழனி 100 அடி சாலை பகுதியிலும், விருகை வி.என்.ரவி - விருகம்பாக்கத்திலும், வடசென்னை வடக்கு கிழக்கு மாவட்ட செயலாளர் ஆர்.எஸ்.ராஜேஷ் தண்டையார்ப்பேட்டையிலும் தலைமையேற்று கவன ஈர்ப்பு முழக்க போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தி.நகர் தெற்கு உஸ்மான் சாலை, வடக்கு உஸ்மான் சாலை, கிண்டி, சைதாப்பேட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் நிர்வாகிகள் ஏற்பாட்டின் பேரில், ஆங்காங்கே சாலை ஓரங்களில் கையில் அதிமுக கொடியுடன் தொண்டர்கள் அரசுக்கு எதிரான முழக்கங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேபோல், செங்கல்பட்டு மேற்கு மாவட்ட செயலாளர் சிட்லபாக்கம் ராஜேந்திரன் தலைமையில் அவரது வீட்டுக்கு முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சென்னை புறநகர் கந்தன்சாவடியில் கே.பி.கந்தன், கோவிலம்பாக்கத்தில் மாவட்ட மாணவரணி துணை செயலாளர் மணிமாறன், ஆலந்தூரில் மாநில வர்த்தக பிரிவு செயலாளர் ஆலந்தூர் வெங்கட்ராமன், முன்னாள் எம்எல்ஏ தன்சிங், குன்றத்தூரில் முன்னாள் எம்எல்ஏ பழனி ஆகியோர் தலைமையில் அதிமுக கட்சி அலுவலகம் மற்றும் நிர்வாகிகளின் வீடுகளின் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருக்கழுக்குன்றத்தில் அதிமுக கட்சி அலுவலகம் முன்பு மாவட்ட செயலாளர் எஸ்.ஆறுமுகம், திருப்போரூரில் ஒன்றிய செயலாளர் குமரவேல், கோவளத்தில் இளம் பெண் பாசறை மாவட்ட செயலாளர் பாஸ்கரன் தலைமையில் அதிமுகவினர் பதாகைகளை கையில் ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்டச் செயலர் வி.சோமசுந்தரம் தலைமை தாங்கினார். மாநில அமைப்புச் செயலர்கள் வாலாஜாபாத் பா.கணேசன், மைதிலி திருநாவுக்கரசு, முன்னாள் மக்களவை உறுப்பினர் காஞ்சி பன்னீர்செல்வம், மாவட்ட பொருளர் வள்ளிநாயகம், மாவட்ட ஜெ.பேரவை செயலர் கே.யு.எஸ். சோமசுந்தரம் உட்பட பலர் பங்கேற்றனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் அதிமுக நிர்வாகிகளின் வீடுகள், கட்சி அலுவலகங்கள் மற்றும் எம்ஜிஆர் சிலைகளின் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

முன்னாள் அமைச்சர் பாண்டியராஜன், திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் பிவி.ரமணா, கிழக்கு மாவட்ட செயலாளர் பலராமன், முன்னாள் எம்பி கோ.ஹரி உள்ளிட்டோர் பங்கேற்று திமுக அரசைக் கண்டித்து கையில் பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதேநேரம், தலைநகர் சென்னையில் அதிமுக ஒருங்கிணைப்பாளர்கள் ஆர்பாட்டத்தில் பங்கேற்காத நிலையில், போராட்டம் நடைபெற்ற பகுதிகளில் ஒரு சில இடங்களைத் தவிர மற்ற பகுதிகளில் தொண்டர்கள் அதிக எண்ணிக்கையில் பங்கேற்கவில்லை. பல இடங்களில் கரோனா தடுப்பு விதிமுறையான சமூக இடைவெளி பின்பற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரி போராட்டம்

# மு.க.ஸ்டாலின் உட்பட 7 பேர் வழக்கில் இருந்து விடுதலை

● சென்னை சிறப்பு நீதிமன்றம் உத்தரவு

■ சென்னை

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரி போராட்டம் நடத்திய வழக்கில் திமுக தலைவரும், முதல்வருமான மு.க. ஸ்டாலின், தமிழக காங்கிரஸ் கட்சி முன்னாள் தலைவர் திருநாவுக்கரசர் உள்ளிட்ட 7 பேரை வழக்கில் இருந்து விடுவித்து சென்னை சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரி, கடந்த 2018-ம் ஆண்டு, ஏப். 4-ஆம் தேதி, முழு அடைப்பு மற்றும் ஆர்ப்பாட்டத்துக்கு திமுக அழைப்பு விடுத்தது. அக்கட்சியின் தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

இவர்கள் அண்ணா சாலையில் இருந்து மெரினா கடற்கரையை நோக்கி, பேரணியாகச் சென்றனர். இதையடுத்து, போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சாலை மறியலில் ஈடுபட்டதாகவும், அனுமதியின்றி பேரணியாகச் சென்றதாகவும் மு.க.ஸ்டாலின், அப்போதைய தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் சு.திருநாவுக்கரசர், மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா, விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் நடிகர் சரத்குமார், முன்னாள் துணை மேயர் கராத்தே தியாகராஜன், காதர் மொய்தீன் ஆகிய 7 பேர் மீதும், போராட்டத்தில் ஈடுபட்ட மற்றவர்கள் மீதும் திருவல்லிக்கேணி போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த வழக்கின் விசாரணை சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள எம்பி, எம்.எல்.ஏ-க்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதி அலிசியா முன்பு நடைபெற்று வந்தது.

இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது காவல்துறை சார்பில் ஆஜரான வழக்கறிஞர் தமிழக முதல்வர் உள்ளிட்ட அனைத்து தலைவர்கள் மீதான வழக்குகள் திரும்பப் பெறப்பட்டு உள்ளதாக, அரசு உத்தரவு பிறப்பித்து இருப்பதாக கூறி, அந்த உத்தரவு நகலை சமர்ப்பித்தார். இதை ஏற்ற நீதிபதி, முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்ட அனைவரையும் இந்த வழக்கிலிருந்து விடுவித்து உத்தரவிட்டார்.

### இந்து சமய அறநிலையத் துறையின்

# நில மீட்பு நடவடிக்கை சந்தேகத்துக்கு உரியது

● சங்கரமடம் நூல் வெளியீட்டு விழாவில் இல.கணேசன் கருத்து

■ காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் அருகே உள்ள ஓரிக்கை மணிமண்டபத்தில் வே.மகாதேவன் எழுதிய 'ஸ்ரீ காஞ்சி சங்கரமடம் வரலாறு' என்ற ஆய்வு நூல் வெளியீட்டு விழா நேற்று நடைபெற்றது. இந்த ஆய்வு நூலை காஞ்சிபுரம் சங்கர மடத்தின் மடாதிபதி ஸ்ரீவிஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் வெளியிட பாஜக மூத்த தலைவரும், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினருமான இல.கணேசன் பெற்றுக் கொண்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:



▲ காஞ்சிபுரம் அருகே உள்ள ஓரிக்கை மகா பெரியவர் மணி மண்டபத்தில் புலவர் வே.மாகதேவன் எழுதிய 'ஸ்ரீ காஞ்சி சங்கரமடம் வரலாறு' என்ற ஆய்வு நூலை வெளியிடுகிறார் காஞ்சிபுரம் சங்கர மடத்தின் மடாதிபதி ஸ்ரீவிஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள். நூலின் முதல் பிரதியை பாஜக மூத்த தலைவர் இல.கணேசன் பெற்றுக்கொண்டார்.

இந்து சமய அறநிலையத் துறையின் செயல்பாடுகள் வியப்பாக இருக்கின்றன. தினசரி ஒரு கோயிலுக்கு போகின்றனர். தினந்தோறும் இத்தனை கோடி மதிப்புள்ள நிலங்கள் மீட்பு என்று செய்திகள் வருகின்றன. நிலமீட்பு என்பது இவ்வளவு எளிதான காரியம் என்றால் ஏன் முந்தைய அரசுகள் இதைச் செய்யவில்லை என்பது புரியவில்லை. ஆனால், ஆக்கிரமிப்பு இடத்தை அகற்றி வேறு யாராவது ஒருவருக்கு தந்துவிடுவார்களோ என்ற அச்சம் பக்தர்கள் மத்தியில் உள்ளது. கோயில் நிலங்களை யாரும் ஒன்றும் செய்யமுடியாது. இதை நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது. அதுபோல் எதுவும் நடக்காது என்று நான் பக்தர்களிடம் கூறியுள்ளேன் என்றார்.

### சுயதொழில் தொடங்க ரூ.15 லட்சம் வரை கடனுதவி சென்னை ஆட்சியர் அறிவிப்பு

■ சென்னை

சென்னை மாவட்ட ஆட்சியர் ஜெ.விஜயா ராணி நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:

'படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்' மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. உற்பத்தி சார்ந்த தொழில்களுக்கு ரூ.15 லட்சம் வரையிலும், சேவை மற்றும் வியாபாரம் சார்ந்த தொழில்களுக்கு ரூ.5 லட்சம் வரையிலும் கடன் வழங்கப்படுகிறது. இதில் 25 சதவீதம் மானியமாகும்.

தகுதியுடைய நபர்கள் www.msmeonline.tn.gov.in/uyegp என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். கரோனா பாதிப்பு காரணமாக, நேர்முகத் தேர்வின்றி தகுதியான விண்ணப்பங்கள் வங்கிகளுக்கு பரிந்துரைக்கப்படும். கூடுதல் விவரங்களுக்கு சென்னை கிண்டியில் உள்ள தொழில் வணிகத்துறை மண்டல இணை இயக்குநரை நேரடியாகவோ அல்லது 044-22501621 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்புகொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# உலகில் 2.9 கோடி மக்கள் கல்லீரல் நோய்களால் பாதிப்பு

● அரசு ஸ்டான்லி மருத்துவமனை மருத்துவர் தகவல்

■ சென்னை

உலக கல்லீரல் அழற்சி தினத்தை (Hepatitis) முன்னிட்டு சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மஞ்சள் காமாலை உள்ளிட்ட கல்லீரல் நோய்கள் (Hepatitis-B and C) குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

இரைப்பை குடல் மற்றும் கல்லீரல் சிகிச்சைப் பிரிவுத் தலைவர் ரேவதி இந்நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். மருத்துவமனை கண்காணிப்பாளர் ஜமிலா, ஆர்எம்ஓ ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தார். மருத்துவமனை டீன் பாலாஜி, விழிப்புணர்வு நிகழ்ச்சியை தொடங்கிவைத்தார். இந்த நிகழ்ச்சியில் செவிலியர்கள் உள்ளிட்ட ஊழியர்களுக்கு கல்லீரல் நோய்கள் குறித்த பரிசோதனை செய்யப்பட்டது. மூளைச்சாவு அடைந்தவர்களின் கல்லீரலை தானம் செய்த குடும்பத்தினர் கவுரவிக்கப்பட்டனர்.


இந்நிகழ்ச்சியில் இரைப்பை குடல் மற்றும் கல்லீரல் சிகிச்சைப் பிரிவுத் தலைவர் ரேவதி கூறியதாவது:



▲ உலக கல்லீரல் அழற்சி தினத்தை முன்னிட்டு, சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மூளைச்சாவு அடைந்தவர்களின் கல்லீரலை தானம் செய்த நபர்களின் குடும்பத்தினரை மருத்துவமனை டீன் பாலாஜி நேற்று கவுரவித்தார். கண்காணிப்பாளர் ஜமிலா, ஆர்எம்ஓ ரமேஷ், இரைப்பை குடல் மற்றும் கல்லீரல் சிகிச்சைப் பிரிவுத் தலைவர் ரேவதி ஆகியோர் உடனிருந்தனர். படம்: ம.பிரபு

... கண்டுபிடித்த ஆராய்ச்சியாளர் மருத்துவர் ப்ளூம்பெர்க் என்பவரை கவுரவிக்கும் வகையில், அவரது பிறந்த நாளான ஜூலை 28-ம் தேதி 'உலக கல்லீரல் அழற்சி' தினமாக கடைபிடிக்கப்படுகிறது. உலகில் 2.9 கோடி மக்கள் கல்லீரல் நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆண்டுதோறும் சுமார் 10.1 லட்சம் பேர் நோயின் தீவிரத்தால் உயிரிழக்கின்றனர். இந்த நோயை ... அகற்றுவதே உலக சுகாதார நிறுவனத்தின் குறிக்கோளாகும். அதற்கான முயற்சியில் உலக நாடுகள் ஈடுபட்டுள்ளன.

அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கல்லீரல் பிரிவு வைரஸ் கிருமியை கண்டறியும் பரிசோதனை முகாம் நடத்துவது, நோய் வராமல் தடுக்க தடுப்பூசி போடுவது போன்றவற்றில் ஈடுபடுவதுடன் நோயால் பாதிக்... வசமாக அளித்து வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. நோயால் பாதிக்கப்பட்ட சுமார் 1,500 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. கரோனா தொற்று காலத்திலும் கர்ப்பிணிகள், செவிலியர்கள், சுகாதார களபணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு நோய் கண்டறியும் முகாம் நடத்தப்பட்டுள்ளது.



TAMILTH ALL 1 Edit_01 S SHUNMUGAM 20_15_58



இந்து தமிழ் திசை
உண்மை நின்றிட வேண்டும்
வியாழன், ஜூலை 29, 2021

# வருமான வரிச் சுமையை ஒரு சாரார் மீதே சுமத்துவது நியாயமா?

வருமான வரி தினத்தையொட்டி மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆற்றிய உரையொன்றில், நாட்டின் வளர்ச்சிக்காக நேர்மையாக வரி செலுத்தும் ஒவ்வொருவருடைய பங்களிப்பையும் பாராட்டியிருந்தார். மேலும், அவர்களை அங்கீகரிக்கும் நடவடிக்கைகளை வருமான வரித் துறையினர் மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தியிருந்தார். மத்திய நிதியமைச்சரின் இந்த அறிவுறுத்தல் உடனடியாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.

நேரடி வரிவிதிப்பு முறையின் பாதுகாப்புச் சுவராக மாதாந்திர ஊதியம் பெறுபவர்களே இருக்கிறார்கள். கடந்த நிதியாண்டில், கார்ப்பரேட் வரி வசூல் முற்றிலுமாகச் சீர்குலைந்து போனாலும், வருமான வரி வசூல் நிலையாகவே இருந்தது. தனிநபர் வருமான வரி மட்டும் ரூ.4.71 லட்சம் கோடி வசூலானது. இந்த நூற்றாண்டிலேயே கடந்த நிதியாண்டில்தான் முதன்முறையாக கார்ப்பரேட் வரிகளைக் காட்டிலும் தனிநபர் வருமான வரி அதிகமாக வசூலாகியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த நிதியாண்டில் 6.54 கோடிப் பேர் தங்களது வருமான வரிக் கணக்குகளைத் தாக்கல்செய்தனர். இந்தியாவில் வயதுவந்தோர் எண்ணிக்கையில் இவர்களது விகிதம் 10%-க்கும் குறைவானதாகும். கணக்கு தாக்கல் செய்பவர்கள் அனைவருமே வரி செலுத்துபவர்களும் இல்லை. தணிக்கை, சட்டம், மருத்துவம் ஆகிய துறைகளைச் சேர்ந்த சுதந்திரமாகத் தொழில்செய்யும் பிரிவினரின் வரிப் பங்களிப்பு மிகவும் குறைவாகவே உள்ளது. பெருவணிகர்கள் தங்களது வருமானத்தைக் குறைவாகக் காட்டவே விரும்புகின்றனர். எனவே, இந்தியாவில் தனிநபர் வருமான வரி என்பது பெரிதும் மாதாந்திர ஊதியம் பெறும் வர்க்கத்தினரையே குறிக்கிறது.

பெருந்தொற்றின் பொருளாதாரப் பாதிப்புகள் காரணமாக மாதாந்திர ஊதிய வர்க்கத்தினரில் பெரும் பகுதியினர் ஏற்கெனவே ஊதியவெட்டை அனுபவித்துக்கொண்டிருப்பதோடு, வேலையிழப்பு குறித்த அச்சத்திலும் இருந்துவருகின்றனர். வருமான வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கையும் அவர்களது மொத்தச் செலவுகளும் ஒரே விகிதத்தில் இல்லை என்பதும் தொடர்ந்து விவாதிக்கப்பட்டுவருகிறது. குறைவான வருமானம் உள்ளவர்களாகக் கணக்குக் காட்டுபவர்களே அதிக செலவுகளைச் செய்பவர்களாக இருக்கிறார்கள் என்றாலும் அவர்களை வருமான வரி வரம்புக்குள் கொண்டுவருவது வருமான வரித் துறையினருக்கு இன்னமும் சிரமமாகவே இருக்கிறது. இந்நிலையில், மாதாந்திர ஊதியம் பெறும் வர்க்கத்தினர் மட்டும் ஊதியத்துக்கான வருமான வரி, செலவுகளுக்கான விற்பனை வரி என்று நேர்முக, மறைமுக வரிகள் இரண்டையும் சேர்த்துச் சுமக்க நேரிடுகிறது. அவர்களிடமிருந்து உத்தேச வருமானத்துக்கான வரிகளை முன்கூட்டியே வசூலித்துக்கொள்வது ஒருவகையில் வரித் திணிப்பாகவும் அமைகிறது.

தனிநபர்களிடமிருந்து வசூலிக்கப்படும் நேரடி வரிவிதிப்பு முறையானது அனைத்துக் குடிமக்களையும் சமமாகக் கருத்தில் கொள்ள வேண்டும். வரிச் சுமையைப் பரவலாக்காமல் குறிப்பிட்ட சிலர் மீது மட்டும் சுமத்துவது சிறந்த வரிக் கொள்கையாகவும் இருக்க முடியாது. வருமான வரிச் சட்டங்களைச் சீர்திருத்தும் வகையில், உரிய திருத்தங்களைச் செய்ய வேண்டிய நேரமிது. அதற்கான தேவையைப் பெருந்தொற்றுக் கால அனுபவங்கள் விரைவுபடுத்தவே செய்கின்றன.

# காப்பீட்டுத் துறை தனியார்மயம்: சில கேள்விகள்

**இந்தப் பேரிடர் காலத்தில் சமூகப் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் காப்பீட்டு நிறுவனங்கள் அரசின் கைகளில் இருப்பதே மக்களுக்குப் பயனளிக்கும் ஒரே வழி என்பது உலக அளவில் நிரூபணமாகியுள்ளது!**



**ஜி.ஆனந்த்**

அரசின் தனியார்மயமாக்கல் செயல்திட்டம் கரோனா காலத்திலும் சுணங்கவில்லை. சென்னையைத் தலைமையகமாகக் கொண்ட ‘யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ்’ நிறுவனம், தனியார்வசம் ஒப்படைக்கப்படலாம் என்பதை நிதி ஆயோக் பரிந்துரைகளிலிருந்து புரிந்துகொள்ள முடிகிறது.

நிதித் துறை சார்ந்து எடுக்கப்படுகிற நடவடிக்கைகளின் வளர்ச்சியை இந்த இடத்தில் பார்க்க வேண்டியுள்ளது. 1971–ல் தேசியமயம், 1999–ல் மீண்டும் தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி, 2017–ல் நியூ இந்தியா என்கிற அரசுக் காப்பீட்டு நிறுவனத்தின் பங்கு விற்பனை என்று நகர்ந்த கடிகார முள், 2021–ல் அரசு நிறுவனமொன்று தனியார் கைகளில் ஒப்படைக்கப்படும் இடத்துக்கு வந்து நிற்கிறது. இதன் விளைவுகள் என்ன என்பதை வரலாற்றுப் பின்புலத்தோடு பேச வேண்டியிருக்கிறது.

### வரலாற்றுச் சக்கரம்

அரசுக் காப்பீட்டு நிறுவனங்கள் பொன் விழாவைக் கொண்டாடுகிற நேரமிது. 1950–களில் ஆயுள் காப்பீட்டு தேசியமய விவாதங்கள் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற போதே, அன்றைய நிதியமைச்சர் சி.டி.தேஷ்முக், தனியார் காப்பீட்டு நிறுவனங்களின் முறையற்ற செயல்பாடுகள் குறித்து எச்சரிக்கை விடுத்திருந்தார். 1971–ல் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி, காப்பீட்டு நிறுவனங்களை தேசியமயமாக்கும் முடிவை எடுத்தார். 107 தனியார் காப்பீட்டு நிறுவனங்கள் தேசியமயமாக்கப்பட்டு நேஷனல் இன்சூரன்ஸ், நியூ இந்தியா அஷூரன்ஸ், ஓரியண்டல் இன்சூரன்ஸ், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் ஆகிய நான்கு அரசு நிறுவனங்கள் பிறந்தன.

பொதுத் துறைக் காப்பீட்டு நிறுவனங்கள் நெடிய வரலாற்றைக் கொண்டவை. 1972–ல் காப்பீட்டு நிறுவனங்கள் வணிக தேசியமயச் சட்டத்தின் அடிப்படையில் நான்கு நிறுவனங்கள் உருவானபோது, அரசு இட்ட முதலீடு ரூ.19.5 கோடி மட்டுமே. இன்று அந்த நிறுவனங்களின் மொத்த சொத்து மதிப்பு இரண்டு லட்சம் கோடி ரூபாயாக வளர்ந்துள்ளது. 1971–ல் காப்பீட்டு நிறுவனங்களின் மொத்த அலுவலகங்களின் எண்ணிக்கை 784, இன்று 8,000 அலுவலகங்கள் என்ற எண்ணிக்கையைக் கடந்துள்ளது. அரசின் வளர்ச்சித் திட்டங்களுக்கு இந்த நிறுவனங்களின் பங்களிப்பு ரூ. 1,78,977 கோடி.

### மீண்டும் தனியார்மயம்

1991–ல் பொருளாதாரத் தாராளமயமாக்கலை நரசிம்ம ராவ் தலைமையிலான காங்கிரஸ் அரசு அனுமதித்தது. தொடர்ச்சியாக 1999–ல் வாஜ்பாய் அரசு தனியார், அந்நியக் காப்பீட்டு நிறுவனங்களுக்கு அனுமதியளித்தது. இன்று 21 தனியார் பொது இன்சூரன்ஸ் நிறுவனங்களும், ஆறு தனியார் சிறப்பு மருத்துவக் காப்பீட்டு நிறுவனங்களும் வணிகப் போட்டியில் உள்ளன. இந்த நிறுவனங்கள் சாதாரண மக்களுக்கான காப்பீட்டைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. முதல் நிலை, இரண்டாம் நிலை நகரங்களில் மட்டுமே இந்த நிறுவனங்களின் அலுவலகங்கள் செயல்படுகின்றன.

மூன்றாம், நான்காம், ஐந்தாம் நிலை நகரங்கள், சிற்றூர்கள், கிராமங்களில் அரசுக் காப்பீட்டு நிறுவனங்கள் சிறப்பாகச் செயல்பட்டுவருகின்றன. அத்துடன் பயிர்க் காப்பீடு உள்ளிட்டவற்றிலும் அரசுக் காப்பீட்டு நிறுவனங்கள் கூடுதல் கவனம் செலுத்திவருகின்றன. காப்பீட்டுத் துறை பரவலாக்கல், அரசின் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் போன்ற சமூகநலச் சுமைகளை அரசுக் காப்பீட்டு நிறுவனங்களே செயல்படுத்திவருகின்றன.

தலைமையகம் சென்னையில் இருப்பதால் தென்னிந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் காப்பீட்டுப் பரவலுக்கு வழிவகுத்துவரும் நிறுவனம் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம். தமிழக முதல்வர் காப்பீட்டுத் திட்டத்தை யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனமே நிர்வகித்துவருகிறது. அகில இந்திய அளவில் அரசுக் காப்பீட்டு நிறுவனங்களே ‘பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா’ - தனிநபர் விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தை எடுத்து நடத்திவருகின்றன. அதுபோன்ற திட்டங்களில் லாபம் இருப்பதால்தான் தனியார் நிறுவனங்கள் அரசு நிறுவனப் பங்குகளை வாங்க ஆர்வம் காட்டிவருகின்றன.

### விடையில்லாக் கேள்விகள்

நான்கு பொதுத் துறைக் காப்பீட்டு நிறுவனங்களும் இணைந்து 40 கோடி இந்தியர்களுக்குப் பல்வேறு நலத்திட்டங்கள் மூலம் காப்பீட்டை வழங்கிவருகின்றன. உலகிலேயே இந்த அளவுக்குக் காப்பீடு வசதி பெறுபவர்களின் எண்ணிக்கை வேறு எந்த நாட்டிலும் கிடையாது. தமிழக அரசு உள்ளிட்ட பல்வேறு மாநில அரசுகள் வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள நபர்களுக்கு அளிக்கும் மருத்துவக் காப்பீடு, தனிநபர் விபத்துக் காப்பீடு உள்ளிட்ட திட்டங்களால் பயனடைந்தோர் ஏராளம்.

இந்நிலையில் ஒரு காப்பீட்டு நிறுவனம், அதுவும் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டுவரும் காப்பீட்டு நிறுவனம் தனியார்மயமானால், மேலே கூறப்பட்ட சாமானிய மக்களுக்கான காப்பீட்டுத் திட்டங்கள் தொடருமா என்பது கேள்விக்குறியே!.

யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தை எடுத்துக்கொண்டால், கடந்த நிதியாண்டில் ரூ.17,000 கோடிக்குத் தவணைத் தொகையைத் திரட்டியுள்ளது. பெருந்தொற்றுக் காலத்திலும் இவ்வளவு தவணைத் தொகையைத் திரட்டியுள்ளதோடு, அரசின் கட்டமைப்புத் திட்டங்களுக்காக ரூ.27,930 கோடி வரை முதலீடு செய்துள்ளது. ஒன்றிய அரசுக்குத் தொடர்ந்து வருடா வருடம் கணிசமான அளவு ஈவுத்தொகையையும் அளித்துவருகிறது. இந்நிறுவனம் தனியார்மயமானால், இவையெல்லாம் நீடிப்பதற்கான சாத்தியம் இல்லாமல் போகும். நிறுவனங்களின் பங்குகள் விற்கப்படுவதால் ‘அரசு நிறுவனம்’ என்ற அந்தஸ்து பறிபோகாது. ஆகவே, இடஒதுக்கீடு தொடரும் என்று இவ்வளவு காலம் கூறப்பட்டுவந்தது. இப்போது ஒரு காப்பீட்டு நிறுவனமே தனியார்மயமானால் அரசு அந்தஸ்து பறிபோய்விடும்! ஓ.பி.சி/ எஸ்.சி/ எஸ்.டி. இடஒதுக்கீடு என்னவாகும் என்ற சமூகநீதி சார்ந்த கேள்வியும் எழுகிறது.

இந்தப் பேரிடர் காலத்தில் சமூகப் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் காப்பீட்டு நிறுவனங்கள், அரசின் கைகளில் இருப்பதே மக்களுக்குப் பயனளிக்கும் ஒரே வழி என்பது உலக அளவில் நிரூபணமாகியுள்ளது. அதைப் பாடமாக எடுத்துக்கொண்டு, காப்பீட்டு நிறுவனங்கள் அரசின் கைகளில் இருப்பதை ஒன்றிய அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

- ஜி.ஆனந்த், தென் மண்டலப் பொது இன்சூரன்ஸ் ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர்.
தொடர்புக்கு: anand1704@yahoo.co.in



# புவிவெப்பமாதலைக் கண்டறிந்த பெண் அறிவியலர்

**“50 கோடி ஆண்டுகளில் நிதானமாக சேகரமான கரிம எரிபொருளை மனிதர்கள் சில தலைமுறைகள் காலத்திலேயே எரித்துக்கொண்டிருக்கிறார்கள்!”**



**ஷங்கர்**

கரிம எரிபொருட்களை எரிப்பதன் வாயிலாக வரும் புகையால் புவிவெப்பமாதல் அபாயகரமாக அதிகரித்துப் பருவநிலையில் அபாயகரமான மாறுதல்களை ஏற்படுத்திவருவது அறிவியல் ஆய்வுகள் மூலம் வலுப்பட்டுவரும் காலம் இது. மேற்கு அமெரிக்காவில் நிலவும் வறட்சி, வெப்ப அலைகள், ஆஸ்திரேலியாவில் ஏற்படும் காட்டுத்தீ, ஐரோப்பாவை அச்சுறுத்தும் கனமழை, சூறாவளிகள், இந்தியாவில் பருவம் தவறிப் பெய்யும் மழைகள் ஆகியவை பருவநிலையில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டதை உறுதிசெய்கின்றன. வளிமண்டலத்தில் அதிகமாகக் கலக்கும் கரியமில வாயுவால் (கார்பன் டையாக்ஸைடு) புவி வெப்பமடையும் அபாயம் இருக்கிறதென்று, எளிய அடிப்படைப் பரிசோதனை மூலம் 165 ஆண்டுகளுக்கு முன்னர் நமக்குத் தெரிவித்தவர் அமெரிக்காவைச் சேர்ந்த யூனிஸ் ஃபுட் (1819–1888) என்ற பெண் அறிவியலர். கார்கள் கண்டுபிடிக்கப்படுவதற்கும் நிலக்கரியிலிருந்து மின்சாரம் எடுக்கும் மின்நிலையங்கள் உருவாவதற்கும் முன்னர் புவிவெப்பமாதலின் அபாயத்தை உரைத்தவர் அவர். புவியை வெப்பமடையச் செய்யும் நிகழ்வுக்குக் காரணமான, கரியமில வாயுவின் வெப்பம் உறிஞ்சும் தன்மையை 1856–ல் தனது சுருக்கமான ஆய்வுக்கட்டுரை மூலம் யூனிஸ் ஃபுட் நிரூபித்தார்.

கரியமில வாயு வாசனை இல்லாதது, சுவையில்லாதது, நிறமில்லாதது. கரி, எண்ணெய், எரிவாயு, விறகுகளை எரிக்கும்போது இந்தக் கரியமில வாயு வெளிப்படுகிறது. புவியின் மேற்பரப்பு வெப்பமடையும்போது, அந்த வெப்பம் வானவெளிக்குள் உடனடியாகப் பரவிவிடும் என்று கருதப்படுகிறது. ஆனால், அது அத்தனை எளிதாக நடக்கும் காரியம் அல்ல. ஒரு கண்ணாடிக் கூரையிட்ட குடில் ஒன்றை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். பகலில் சூரியக் கதிரால் அந்தக் கண்ணாடிக் கூரைக்குக் கீழே தரையில் இருக்கும் வெப்பத்தை அந்தக் கூரை உறிஞ்சிவைத்துக்கொண்டு, இரவில் அதை மீண்டும் தரைக்குப் பரப்பும். இப்படித்தான் வானவெளிக்குச் செல்லும் வெப்பத்தைக் கரியமில வாயு, மீத்தேன், வளிமண்டலத்தில் உள்ள நீராவி போன்றவை உறிஞ்சிவைத்துக்கொள்ளும். உறிஞ்சிய வெப்பத்தை மீண்டும் பூமியின் மேற்பரப்புக்கு இவை திருப்பி அனுப்புவதாலேயே பசுங்குடில் வாயுக்கள் என்று அழைக்கப்படுகின்றன. வெப்பத்தை வளிமண்டலம் பிடித்து வைத்துக்கொள்ளும் நிகழ்ச்சி எல்லோருக்கும் தெரிந்ததாகவே இருந்தது. அதற்கான காரணத்தைத் தனது பரிசோதனையின் வழியாக யூனிஸ் ஃபுட் சொன்னார்.

யூனிஸ் இரண்டு கண்ணாடி உருளைகளை எடுத்துக்கொண்டு இரண்டிலும் வெப்பமானிகளைப் பொருத்தினார். ஒரு உருளையில் கரியமில வாயுவையும் இன்னொரு உருளையில் காற்றையும் அடைத்து இரண்டையும் சூரிய ஒளியில் வைத்தார். கரியமில வாயுவைக் கொண்டிருந்த உருளை சீக்கிரத்திலேயே உஷ்ணமானதைப் பார்த்தார். வளிமண்டலத்தில் உள்ள வெப்பத்தைக் கரியமில வாயு சீக்கிரம் உறிஞ்சுகிறது என்பதைத் தெரிந்துகொண்டார். தற்போதுள்ளதைவிடக் கூடுதலாகக் காற்றில் கரியமில வாயு கலக்குமானால், கூடுதல் வெப்பம் ஏற்படும் என்ற முடிவுக்கு யூனிஸ் வந்தார். சில ஆண்டுகள் கழித்து 1861–ல் ஐரிஷ் அறிவியலர் ஜான் டின்டால், கரியமில வாயு மிக வலுவாக வெப்பத்தை உறிஞ்சிக்கொள்வதை வைத்து நூற்றுக்கணக்கான சோதனைகளை நடத்திப் பார்த்து அளவிட்டார். அத்துடன் வளிமண்டலத்தில் கரியமில வாயுவின் அளவு சிறுதுளி மாறினாலும் அது பருவநிலையில் ஏற்படுத்தும் சாத்தியமான மாற்றங்களையும் கண்டறிந்தார். கரியமில வாயுவைப் போலவே மீத்தேன் போன்ற இன்ன பிற ஹைட்ரோ கார்பன் வாயுக்களும் பருவநிலையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் என்று குறிப்பிட்டார்.

1800–களிலேயே மனிதர்களின் செயல்பாடுகளால் வளிமண்டலத்தில் கரியமில வாயுவின் விகிதம் கூடத் தொடங்கிவிட்டது. கரி, எண்ணெய் எரிபொருள், வாயு எரிபொருள்களின் பயன்பாடு அதிகரிக்கத் தொடங்கிவிட்டது.

கரியமில வாயுவின் தாக்கத்தால் ஏற்படும் பருவநிலை மாறுதலை அளவுரீதியாக முதலில் மதிப்பிட்டவர் ஸ்வீடிஷ் அறிவியலரும் நோபல் பரிசாளருமான ஸ்வான்தே அரேனியஸ். கரியமில வாயுவின் தாக்கம் மூன்று மடங்கு அதிகரித்தால் ஆர்க்டிக் துருவப் பிரதேசப் பகுதிகளில் வெப்பநிலை 8 அல்லது 9 டிகிரி செல்சியஸுக்கு உயரும் என்று மதிப்பிட்டார். ஆர்க்டிக்கில் ஏற்கெனவே 3.8 செல்சியஸுக்கு வெப்பநிலை உயர்ந்திருக்கிறது. ஆரம்பத்தில் புவி சற்று வெப்பமடைவது நல்லது என்றே அறிவியலர்கள் கருதினார்கள். ஆனால், கரிம எரிபொருள்களின் பயன்பாடு இத்தனைப் பிரம்மாண்டமாக அதிகரிக்கும் என்று கற்பனை செய்யவேயில்லை. 1937–ல் பொறியாளர் கய் காலந்தர், அதிகரிக்கும் வெப்பநிலைகளை அதிகரிக்கும் கரியமில வாயுவின் நிலையோடு ஒப்பிட்டுப் பதிவுசெய்துள்ளார். கரிம எரிபொருட்களை எரிப்பதன் வாயிலாக மனிதர்கள் ஒரு லட்சத்து 50 ஆயிரம் மில்லியன் டன்கள் அளவுக்குக் கரியமில வாயுவை 50 ஆண்டுகளில் ஏற்றியுள்ளதாக எச்சரித்திருக்கிறார்.

1965–ல் அமெரிக்க அதிபர் லிண்டன் ஜான்சனிடம் பருவநிலை மாறுதல் குறித்து இப்படி எச்சரிக்கப்பட்டது. “50 கோடி ஆண்டுகளில் நிதானமாக சேகரமான கரிம எரிபொருளை மனிதர்கள் சில தலைமுறைகள் காலத்திலேயே எரித்துக்கொண்டிருக்கிறார்கள்” என்பதுதான் அந்த எச்சரிக்கை. அரை நூற்றாண்டுக்கும் முன்னரே பனிமலைகள் உருகுவது, கடல் மட்டம் அதிகரிப்பது, கடல் நீரில் அமிலங்கள் அதிகரிப்பது குறித்தெல்லாம் எச்சரிக்கப்பட்டுள்ளது.

அடுத்து வந்த ஆண்டுகளில் கணிக்கப்பட்டதைவிட அதிக அளவில் பனிமலைகள் காணாமல் போயுள்ளன. கடல் மட்டம் அதிகரித்துள்ளது. கடல் நீரில் கார்போனிக் அமிலம் அதிகரித்துக் கடல் வாழ் உயிரினங்களின் வாழ்வாதாரம் அச்சுறுத்தப்பட்டுள்ளது.

அறிவியலர்கள் கணித்ததையும் தாண்டிப் புவிவெப்பமாதலின் தாக்கங்களை நாம் ஏற்கெனவே மோசமாக அனுபவிக்கத் தொடங்கிவிட்டோம். ஆனால், ஆட்சியாளர்கள் மிக மெதுவாகவே புவிவெப்பமாதலுக்கு எதிர்வினையாற்றத் தொடங்கியுள்ளனர். சிலரோ புவிவெப்பமாதல் என்ற கருத்தையே மறுக்கின்றனர். பிறரோ காத்திருந்து பார்க்கலாம் என்ற மனநிலையில் இருக்கின்றனர். ஆனால், மேற்கு அமெரிக்காவில் காணப்படும் வரலாறு காணாத வறட்சியும், வெப்ப அலைகளின் தாக்கமும், ஆஸ்திரேலியாவைத் தாக்கும் காட்டுத்தீயும், வளைகுடா பகுதிகளிலும் ஐரோப்பாவிலும் காணப்படும் மழை அளவும் சூறாவளிகளும் சீனப் பெருமழையும் வெள்ளமும் புவிவெப்பமாதலை இனியும் மனித குலம் புறக்கணிக்க முடியாது என்றே எச்சரிக்கை விடுக்கின்றன.

**ஒலிம்பிக் திருவிழா**

## கரோனாவை வீழ்த்திய தங்கம்

இரண்டு முறை கரோனா தொற்றுக்கு உள்ளான பிரிட்டன் நீச்சல் வீரர் டாம் டீன் (21), பிரிட்டன் ஒலிம்பிக் அணிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதே சந்தேகமாக இருந்தது. ஆனால், ஆறே மாதங்களில் ஒலிம்பிக் தங்கம் வென்று ஆச்சரியப்படுத்தியுள்ளார்.

முதல் முறை கரோனா தொற்றுக்கு ஆளாகி, நான்கு மாத இடைவெளியில் ஜனவரியில் இரண்டாவது முறை கரோனா தொற்றுக்கு உள்ளானார் டாம் டீன். அப்போது அவருடைய ரத்த ஓட்ட அமைப்பு, நுரையீரல் போன்றவை பாதிக்கப்பட்டன. நீச்சல் பயிற்சிக்கு இவை ஆரோக்கியமாக இருக்க வேண்டியது அவசியம். இடைவிடாத இருமல் வேறு. அப்போது ஒலிம்பிக் தங்கம் என்பது டாம் டீனுக்குக் கனவாக மாறிவிட்டிருந்தது.



பல விளையாட்டு வீரர்/ வீராங்கனைகளுக்குப் பல்வேறு விதமான இடைஞ்சல்களையும் தடைகளையும் பெருந்தொற்றுக் காலம் ஏற்படுத்தியிருக்கிறது. அதே நேரம் டாம் டீனைப் போன்று மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் குறைவு. இரண்டாவது முறை நோய்த்தொற்றுக்கு ஆளான பிறகு ஒன்றரை மாதங்களுக்கு மேல் அவரால் பயிற்சியைத் தொடங்க முடியவில்லை.

அந்த நேரத்தில் பயிற்சியாளர் டேவிட் மெக்நல்டி, டாம் டீனின் பதற்றத்தைத் தணித்தார். சிறிது சிறிதாக அவருடைய திறன்களையும் மன உறுதியையும் மீட்டெடுத்தார். ஒலிம்பிக் 200 மீட்டர் பிரீஸ்டைல் பிரிவில் டாம் டீனும் சக நாட்டைச் சேர்ந்த டங்கன் ஸ்காட்டும் போட்டியிட்டார்கள். டங்கன் ஸ்காட் தங்கம் வெல்வார் என்றே அனைவரும் எதிர்பார்த்திருந்த நிலையில், டாம் டீன் தங்கம் வென்றுள்ளார். டங்கன் ஸ்காட்டுக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது.

இந்த வெற்றி மூலம் ஸ்காட்டிடமிருந்து தங்கத்தைப் பறித்துக்கொண்டது மட்டுமல்லாமல், 200 மீட்டர் ஃபிரீஸ்டைல் பிரிவில் ஸ்காட் புரிந்திருந்த சாதனையையும் டீன் (1 நிமிடம் 44.22 விநாடிகள்) முறியடித்துள்ளார். முன்னதாக 1908 ஒலிம்பிக்கிலும் இரண்டு பிரித்தானியர்கள் 200 மீட்டர் நீச்சல் போட்டியில் முதலிரண்டு இடங்களைப் பிடித்திருந்தார்கள்.

- ஆதி

இணையத்திலும் இந்து தமிழுடன் இணைந்திருக்க...
www.hindutamil.in

சமூக வலைதளங்களில் எங்களைத் தொடர...
facebook.com/TamilTheHindu/
twitter.com/tamilthehindu
Youtube.com/tamilthehindu

கட்டுரைகளை editpage@hindutamil.co.in; வாசகர்கள் விமர்சனங்களை feedback@hindutamil.co.in ஆகிய மின்னஞ்சல்களுக்கு அனுப்பிடுங்கள். பத்திரிகையில் வெளியாகும் கட்டுரையாளர்கள் / பேட்டியாளர்களின் கருத்துகள் அவர்களுடைய சொந்தக் கருத்துகளே. அவை எந்த வகையிலும் இப்பத்திரிகையின் கருத்துகள் ஆகா. அஞ்சல் முகவரி:
ஆசிரியர் இலாகா, இந்து தமிழ், கஸ்தூரி மையம், 124, வாலாஜா சாலை, சென்னை - 2.

**பொன்மொழி** எறும்புகள் எதுவும் பேசுவதில்லை. ஆனால், அவற்றைப் போன்று நமக்கு யாரும் அறிவுரைகூற முடியாது.
- பிராங்க்ளின்

**இணையம்:** இயற்கைக்கான உலகளாவிய நிதியம் அமைப்பு இயற்கையைப் பாதுகாப்பது, உயிர்களின் பன்முகத் தன்மைக்கான அச்சுறுத்தல்களைக் குறைப்பது போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளது. இதன் https://www.worldwildlife.org/ இணையதளத்தில் உணவு, காலநிலை, வனம், கடல் சார்ந்த பணிகள் குறித்து விளக்கப்பட்டுள்ளது.

**பொதுஅறிவு:** வளரிளம் பெண்களின் சிக்கல்களுக்கு தீர்வுகாணும் வகையில் 'ராஜீவ்காந்தி வளரிளம் பெண்கள் தன்னுரிமை மேம்பாட்டுத்திட்டம்' 2011–12–ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் பெண்களுக்கு இணை உணவு, இரும்புச்சத்து, வாழ்க்கைத் திறன் கல்வி வழங்கப்படுகின்றன.

## 'பெட்ரோல், டீசலை ஜிஎஸ்டிக்குள் கொண்டுவர தயார்'

■ சென்னை

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது:

தேர்தல் பிரச்சாரத்தின்போது திமுக பல்வேறு வாக்குறுதிகளை அளித்தது. அதனை நம்பித்தான் தமிழக மக்கள் திமுகவுக்கு வாக்களித்தனர்.

ஆனால், ஆட்சிக்கு வந்த பிறகு கொடுத்த வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை. பெட்ரோல், டீசல் மீது அதிகமான வாட் வரியை விதிக்கும் திமுக அரசு, விலை உயர்வுக்கு மத்திய அரசை மட்டும் குறை கூறுகிறது. மாநில அரசுகள் ஒப்புக்கொண்டால் பெட்ரோல், டீசலை ஜிஎஸ்டி வரி வரம்புக்குள் கொண்டுவர மத்திய அரசு தயாராக உள்ளது. பெட்ரோல், டீசலை ஜிஎஸ்டிக்குள் கொண்டுவர தமிழக நிதியமைச்சர் ஜிஎஸ்டி கூட்டத்தில் கோரிக்கை வைப்பாரா என்று கேட்க விரும்புகிறேன்.

திமுகவின் உண்மைமுகத்தை மக்களுக்கு வெளிப்படுத்தவே அதிமுகவினர் தமிழகம் முழுவதும் போராட்டம் நடத்தியுள்ளனர். அதிமுகவின் இந்த போராட்டத்தை பாஜக வரவேற்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

### விடுபட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல்

# ஆயிரம் வாக்காளர்களுக்கு மிகாமல் வாக்குச்சாவடிகளை அமைக்க வேண்டும்

● மாநில தேர்தல் ஆணையம் அறிவுறுத்தல்

■ சென்னை

விடுபட்ட மாவட்டங்களில் நடைபெற உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் 1,000 வாக்காளர்களுக்கு மிகாமல் வாக்குச்சாவடிகளை அமைக்க வேண்டும் என்று மாநில தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

தமிழகத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்கள் உள்ளிட்ட 10 மாவட்டங்களில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் இன்னும் நடைபெறவில்லை. அப்பகுதிகளில் தேர்தல் நடத்தக் கோரிய வழக்கில் செப்டம்பர் 15-ம் தேதிக்குள் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும் என்று தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்துக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதையடுத்து, மீதமுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை நடத்துவது தொடர்பாக, முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். இதைத் தொடர்ந்து, ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் வாக்குச்சாவடி அமைத்தல் மற்றும் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் தொடர்பாக அறிவுரை வழங்குதல் குறித்த கையேடு மாநில தேர்தல் ஆணையம் சார்பில் வெளியிடப்பட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது:

- மத உணர்வுகளைப் பாதிக்கக் கூடிய அல்லது சமுதாயப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கக் கூடிய இடத்திலோ அல்லது அருகிலோ வாக்குச்சாவடி அமைக்கக் கூடாது.
- சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்குச்சாவடியாக பயன்படுத்தப்பட்ட கட்டிடத்துக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.



ஒரு வார்டில் 400 வாக்காளர்களுக்கு குறைவாக இருந்தால், அந்த வார்டுக்கென தனி வாக்குச்சாவடி அமைக்க வேண்டியதில்லை. அருகில் உள்ள மற்றொரு வார்டுடன் சேர்த்து வாக்குச்சாவடி அமைக்கலாம். அதே நேரத்தில் மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 1,000-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

மத உணர்வுகளைப் பாதிக்கக்கூடிய அல்லது சமுதாயப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கக்கூடிய இடத்திலோ அல்லது அருகிலோ வாக்குச்சாவடி அமைக்கக் கூடாது. வாக்குச்சாவடி மையங்களை அமைக்கும் இடங்களைத் தேர்வு செய்யும்போது, ஏற்கெனவே சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்குச்சாவடியாக பயன்படுத்தப்பட்ட கட்டிடத்துக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். தனியார் கட்டிடங்களில் வாக்குச்சாவடி அமைப்பதை தவிர்க்க வேண்டும்.

அச்சிடப்பட்ட வாக்காளர் பட்டியல்கள், பக்கம்வாரியாக சரியாக அச்சிடப்பட்டுள்ளனவா என்பதையும், அச்சிட்ட பிரதிகள் முறையாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளனவா என்பதையும் சரிபார்க்க உரிய அலுவலர்களை, ஊராட்சி வாக்காளர் பதிவு அலுவலர் ஏற்பாடு செய்ய வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் இப்பணிகளை அச்சகத்தினரிடம் விடக்கூடாது. இவ்வாறு அந்தக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள்மீது சிறப்பு கவனம்

● அதிகாரிகளுக்கு முதல்வர் அறிவுறுத்தல்

■ சென்னை

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, சமூக சீர்திருத்த துறைகளின் செயல்பாடுகள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று ஆய்வு மேற்கொண்டார். கூட்டத்தில் அவர் பேசியதாவது:

மகளிர், குழந்தைகள், மூன்றாம் பாலினத்தவர், மூத்த குடிமக்களின் பாதுகாப்பு உரிமை மற்றும் நலனை உறுதிசெய்ய வேண்டும். திருமண நிதியுதவித் திட்டங்களில் தகுதிவாய்ந்த பயனாளிகள் எவரும் விடுபடாமல் உரிய காலத்தில் பயன்களை வழங்க வேண்டும்.

குழந்தைத் திருமணம், பெண் சிசுக் கொலைகளை களைய விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன், அதற்கான சட்டங்களை கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். குழந்தை திருமணங்கள் அதிக அளவில் நடைபெறும் விழுப்புரம், திண்டுக்கல், ஈரோடு, கரூர், கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் தேனி மாவட்டங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி, சத்துணவுத் திட்டம் மூலம் வழங்கப்படும் உணவு, உலர் உணவுப் பொருட்கள், சத்துமாவு, முட்டைகள் ஆகியவற்றை சுத்தமாகவும், தரமானதாகவும் வழங்க வேண்டும்.

ஊட்டச்சத்து குறைந்த குழந்தைகள் அதிகம் உள்ள மாவட்டங்களைக் கண்டறிந்து, சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். திருநங்கையர் கல்வியறிவு பெற்று, சுயமாக வாழத் தேவையான உதவிகளை செய்ய வேண்டும். அனைத்து முதியோர் இல்லங்களும் அங்கீகாரத்துடன் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பணிபுரியும் மகளிர் விடுதி இல்லாத மாவட்டங்களில், விடுதிகள் அமைக்க வேண்டும். மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான இல்லங்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும். சமூக சீர்திருத்தத் துறை மூலம் சமூக நல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையை நிலைநாட்ட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு முதல்வர் பேசினார்.

இந்தக் கூட்டத்தில், அமைச்சர் பி.கீதாஜீவன், தலைமைச் செயலர் வெ.இறையன்பு, நிதித் துறை செயலர் ச.கிருஷ்ணன், சமூக நலத் துறை செயலர் ஷம்பு கல்லோலிகர், சமூக சீர்திருத்தத் துறை செயலர் மங்கத்ராம் சர்மா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### சட்டப்பேரவை நூற்றாண்டு விழாவில் பங்கேற்பதற்காக


# குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஆகஸ்ட் 2-ம் தேதி சென்னை வருகை

● உதகையில் 3 நாட்கள் ஓய்வெடுக்கிறார்

■ சென்னை

சட்டப்பேரவை நூற்றாண்டு விழாவில் பங்கேற்பதற்காக குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஆக. 2-ம் தேதி சென்னை வருகிறார்.

தமிழக முதல்வராக பொறுப்பேற்ற பிறகு 2-வது முறையாக கடந்த 18-ம் தேதி டெல்லி சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், அங்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தை சந்தித்துப் பேசினார். அப்போது, தமிழக சட்டப்பேரவையின் நூற்றாண்டு விழா மற்றும் பேரவை அரங்கில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் உருவப்படம் திறப்பு விழாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். முதல்வரின் அழைப்பை ஏற்ற குடியரசுத் தலைவர், விழாவுக்கு வருவதாக ஒப்புக்கொண்டார்.



அதன்படி, 5 நாள் பயணமாக குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், வரும் ஆக.2-ம் தேதி தமிழகம் வருகிறார். அவரது தமிழக பயணத் திட்டம் தற்போது வெளியாகியுள்ளது. ஆக.2-ம் தேதி காலை 9.50 மணிக்கு டெல்லியில் இருந்து விமானப்படை விமானம் மூலம் புறப்பட்டு 12.45 மணிக்கு சென்னை வந்து சேர்கிறார். சென்னை விமான நிலையத்தில் அவரை ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்டோர் வரவேற்கின்றனர்.

விமான நிலையத்தில் இருந்து கிண்டி ராஜ்பவனுக்கு செல்லும் குடியரசுத் தலைவர், அங்கு மதிய உணவை முடித்து சிறிது நேரம் ஓய்வெடுக்கிறார். அங்கிருந்து மாலை 4.35 மணிக்கு புறப்பட்டு, புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்டப்பேரவை வளாகத்துக்கு வருகிறார். மாலை 5 முதல் 6 மணிவரை நடக்கும் சட்டப்பேரவை நூற்றாண்டு விழாவில் பங்கேற்கிறார். அப்போது, பேரவை அரங்கில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் உருவப்படத்தை திறந்து வைக்கிறார்.

அன்றிரவு ராஜ்பவனில் தங்கும் குடியரசுத் தலைவர், மறுநாள் (ஆக.3) காலை உணவு முடித்த பின், சென்னை விமான நிலையம் சென்று, அங்கிருந்து விமானத்தில் கோவை செல்கிறார். சூலூர் விமானப்படை தளத்தில் இறங்கி, அங்கிருந்து ஹெலிகாப்டரில் உதகை செல்கிறார். உதகை ராஜ்பவனில் தங்கி 3 நாள் ஓய்வெடுக்கிறார். இதனிடையே, ஆக. 4-ம் தேதி காலை 10.20 மணிக்கு வெலிங்டனில் உள்ள பாதுகாப்பு சேவை கல்லூரியை பார்வையிடுகிறார். 6-ம் தேதி காலை உதகையில் இருந்து ஹெலிகாப்டரில் சூலூர் விமானப்படை தளம் வரும் குடியரசுத் தலைவர், அங்கிருந்து விமானப்படை விமானத்தில் டெல்லி திரும்புகிறார்.

குடியரசுத் தலைவரின் பயணத்திட்டம் வெளியாகியுள்ள நிலையில், அவருக்கான பாதுகாப்புப் படை அதிகாரிகள் விரைவில் சென்னை வந்து பாதுகாப்பு தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள உள்ளனர். தமிழகத்தில் புதிய அரசு பொறுப்பேற்றுள்ள நிலையில் முதல்முறையாக குடியரசுத் தலைவர் தமிழகம் வருவது குறிப்பிடத்தக்கது.

**பாதுகாப்பு ஆலோசனை**

குடியரசுத்தலைவர் வருகையை ஒட்டி சென்னை, கோவை மற்றும் உதகையில் செய்யப்பட வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தலைமைச் செயலர் வெ.இறையன்பு தலைமையில் நேற்று மாலை ஆலோசனைக் கூட்டம் நடந்தது. இதில் உள்துறை செயலர் எஸ்.கே.பிரபாகர், டிஜிபி சைலேந்திரபாபு, சென்னை காவல் ஆணையர் சங்கர்ஜிவால் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.



▲ சுதந்திர தின விழாவை முன்னிட்டு சென்னை தலைமைச் செயலகம் எதிரே பந்தல் அமைக்கும் பணியில் நேற்று ஈடுபட்ட தொழிலாளர்கள். படம்: க.ஸ்ரீபரத்

### ஓ.பன்னீர்செல்வம், உதயநிதி ஸ்டாலின்

# தேர்தல் வெற்றியை எதிர்த்து வழக்கு

● உயர் நீதிமன்றத்தில் விசாரணை தள்ளிவைப்பு

■ சென்னை

அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரது தேர்தல் வெற்றியை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு விசாரணையை உயர் நீதிமன்றம் தள்ளி வைத்துள்ளது.

போடி தொகுதி எம்எல்ஏவான அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வத்தின் தேர்தல் வெற்றியை எதிர்த்து வாக்காளரான மிலானி என்பவர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். அதேபோல சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் திமுக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்ற திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் வெற்றியை எதிர்த்து, தேசிய மக்கள் கட்சி வேட்பாளரான எம்.எல்.ரவி தேர்தல் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்குகள் நேற்று நீதிபதி பி.பாரதிதாசன் முன்பாக விசாரணைக்கு வந்தன. பன்னீர்செல்வத்துக்கு எதிரான வழக்கில் சொத்து மதிப்பு குறைத்து காண்பிக்கப்பட்டுள்ளதாகவும், உதயநிதி ஸ்டாலினுக்கு எதிரான வழக்கில், அவரது வேட்புமனுவில், தன்மீதான குற்ற வழக்குகள் குறித்து தவறான தகவல்களை தெரிவித்துள்ளார் என்றும், தேர்தல் நியாயமாக நடைபெறவில்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

வழக்கை விசாரித்த நீதிபதி, இந்த வழக்கு தொடர்பான ஆவணங்களை தாக்கல் செய்ய மனுதாரர்கள் தரப்புக்கு உத்தரவிட்டு விசாரணையை வரும் ஆக.9-ம் தேதிக்கு தள்ளிவைத்துள்ளார்.

## பிளஸ் 2 மாணவர் பெயர் பட்டியல் திருத்த காலஅவகாசம்

■ சென்னை

தேர்வுத் துறை இயக்குநர் சி.உஷாராணி, அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பிய சுற்றறிக்கை:

பிளஸ் 2 பொதுத் தேர்வுக்கான மாணவர்களின் பெயர் பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்ள அனைத்து தலைமை பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும், தேர்வுத்துறையால் பலமுறை வாய்ப்புகளும், காலஅவகாசமும் வழங்கப்பட்டன.

தற்போது பிளஸ் 2 தேர்வு முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், பெயர் பட்டியல்களில் திருத்தம் செய்ய அனுமதி கோரி ஏராளமான பள்ளிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

அதையேற்று திருத்தங்கள் மேற்கொள்ள பள்ளிகளுக்கு இறுதி வாய்ப்பு வழங்கப்படுகிறது. இந்தப் பணிகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் வழங்கி ஜூலை 31-ம் தேதிக்குள் முடித்துவிட வேண்டும்.

மேலும், மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னர், திருத்தம் கோரி கடிதங்கள் வருகின்றன. இவை பல்வேறு சிக்கல்களை உருவாக்குகின்றன. அடுத்த முறை இதுபோன்ற நிலை ஏற்படாத வண்ணம், பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகள் உரிய அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### வன்னியர்களுக்கான 10.5 சதவீத இடஒதுக்கீட்டை எதிர்த்து வழக்கு

# தீர்வுகாணும் வரை ஏன் தடை விதிக்கக் கூடாது?

● உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு கேள்வி

■ சென்னை

வன்னியர்களுக்கான 10.5 சதவீத இடஒதுக்கீட்டை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை அவசர வழக்காக விசாரிக்கக் கோரி முறையீடு செய்யப்பட்டதில், "தீர்வு காணும் வரை அந்த இடஒதுக்கீட்டுக்கு ஏன் தடை விதிக்கக் கூடாது?" என தலைமை நீதிபதி அமர்வு கேள்வி எழுப்பியுள்ளது.

தமிழகத்தில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் உள்ள வன்னியர் சமுதாயத்தினருக்கு 10.5 சதவீத உள்இடஒதுக்கீடு வழங்க, முந்தைய அதிமுக அரசு அவசர சட்டம் இயற்றி அரசிதழிலும் வெளியிட்டது.

இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்திலும், மதுரை உயர் நீதிமன்றக் கிளையிலும் பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டன. அதில் "சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிப்புக்கு சில மணிநேரத்துக்கு முன்பாக அப்போதைய அதிமுக அரசு அரசியல் கண்ணோட்டத்துடன் வன்னியர் சமுதாயத்துக்கு மட்டும் பிரத்யேகமாக 10.5 சதவீத உள்இடஒதுக்கீடு வழங்கி உத்தரவிட்டுள்ளது. இது சட்ட விரோதமானது. இதனால் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான பிரிவில் அங்கம் வகிக்கும் பிற சமுதாயத்தினர் கடுமையாகப் பாதிக்கப்படுவர். குறிப்பாக விளிம்பு நிலையில் உள்ளவர்கள் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் பின்தங்கும் சூழல் ஏற்படும். எனவே இந்த உள்ஒதுக்கீடு சட்டத்தை ரத்து செய்ய வேண்டும்" என கோரியிருந்தனர்.

இந்நிலையில், இந்த சட்டம் நடப்பு கல்வி ஆண்டு முதல் அமல்படுத்தப்படும் என தமிழக அரசு கடந்த சில தினங்களுக்கு முன்பு அரசாணை பிறப்பித்தது.

அதையடுத்து வன்னியர் சமுதாயத்துக்கு 10.5 சதவீத உள் இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை எதிர்த்து தொடரப்பட்ட வழக்குகளை அவசர வழக்காக விசாரிக்கக் கோரி உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜி மற்றும் நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர்கள் நேற்று காலை முறையிட்டனர்.

அதையடுத்து நீதிபதிகள், இந்த 10.5 சதவீத உள்ஒதுக்கீடு தொடர்பான சட்டம் இந்த கல்வி ஆண்டு முதல் அமல்படுத்தப்பட உள்ளதா? என்பது குறித்து தமிழக அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என உத்தரவிட்டு விசாரணையை பிற்பகல் 2.15-க்கு தள்ளிவைத்தனர்.

பிற்பகல் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, அரசு தலைமை வழக்கறிஞர் ஆர்.சண்முகசுந்தரம் ஆஜராகி, "வன்னியர் சமுதாயத்துக்கு 10.5 சதவீத உள் இடஒதுக்கீடு வழங்கும் சட்டம் கடந்த பிப்ரவரி மாதம் முந்தைய ஆட்சியில் கொண்டு வரப்பட்டது. இந்தச்சட்டத்தை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் 23 வழக்குகளும், மதுரை உயர் நீதிமன்ற கிளையில் 5 வழக்குகளும் என மொத்தம் 28 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

இதுதவிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட 4 வழக்குகளில் இந்த உள் இடஒதுக்கீட்டுக்கு தடை விதிக்க உச்ச நீதிமன்றம் மறுத்து விட்டது. இந்த இடஒதுக்கீட்டால் யாரும் பாதிக்கப்படப் போவதில்லை.

ந்த சட்டத்தை அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் கடந்த ஏப்ரல் மாதமே அமல்படுத்திவிட்டது. எனவே, இந்த உள்இடஒதுக்கீட்டுக்கு தடை விதிக்க வேண்டிய அவசியம் இல்லை" என்றார்.

அப்போது மனுதாரர்கள் தரப்பில் குறுக்கிட்ட வழக்கறிஞர்கள், "உச்ச நீதிமன்றம், 'இது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகளில் முதலில் தீர்வு கண்ட பிறகு, உச்ச நீதிமன்றத்தில் முடிவு செய்யலாம்', எனக் கூறியுள்ளது. இந்த சட்டத்துக்கு தமிழக அரசு அனுமதியளித்து அரசாணை பிறப்பித்துள்ளதால் பொறியியல், மருத்துவம் என உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான பிரிவில் உள்ள பிற சமுதாயத்தினர் கடுமையாகப் பாதிக்கப்படுவர்" என வாதிட்டனர்.

அதையடுத்து தலைமை நீதிபதி அமர்வு, "இந்த வழக்கில் தீர்வு காணும் வரை இந்த உள் ஒதுக்கீடு சட்டத்துக்கு ஏன் தடை விதிக்கக் கூடாது?" என கேள்வி எழுப்பினர். பின்னர் இந்த வழக்குகளை வரும் ஆகஸ்ட் 2-வது வாரத்தில் விசாரணைக்குப் பட்டியலிட பதிவுத் துறைக்கு உத்தரவிட்டு விசாரணையை நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.

### கல்லூரி மாணவர்களுக்கு

# ஆக. 9 முதல் இணையவழி வகுப்புகள்

● உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி தகவல்

■ சென்னை

தமிழகத்தில் கல்லூரி மாணவர்களுக்கு இணையவழியில் பருவத் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. தற்போது நோய் பரவல் தணிந்துள்ள நிலையில் கல்லூரிகளை திறப்பது தொடர்பாக உயர்கல்வித் துறை ஆலோசனை செய்துவருகிறது.

இந்நிலையில், சென்னை தலைமைச் செயலகத்தில் உயர்கல்வி அமைச்சர் க.பொன்முடி, துறை அதிகாரிகளுடன் நேற்று ஆலோசனை நடத்தினார். இதில் கல்லூரிகள் திறப்பு, மாணவர் சேர்க்கை உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக விவாதிக்கப்பட்டன.

அதன்பின், செய்தியாளர்களிடம் அமைச்சர் பொன்முடி கூறியதாவது: அண்ணா பல்கலைக் கழகத்தைபோல மற்ற கல்லூரிகளிலும் தேர்வு மதிப்பீட்டு முறையை அமல்படுத்த வேண்டும் என்று பல்வேறு ஆசிரியர் சங்கங்கள் கோரிக்கை வைத்துள்ளன. இது குறித்து பரிசீலனை செய்து உரிய முடிவுகள் எடுக்கப்படும்.

இதுதவிர பொறியியல் சேர்க்கைக்காக நேற்று முன்தினம் வரை (ஜூலை 27) 41,363 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. வரும் நாட்களில் விண்ணப்பங்கள் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். அதேபோல் கலை, அறிவியல் கல்லூரிகளின் சேர்க்கைக்கு 1.28 லட்சத்துக்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்துள்ளனர்.

அண்ணா பல்கலைக்கழகத்தில் அரியர் தேர்வுகளை குறிப்பிட்ட காலத்துக்குள் எழுதி தேர்ச்சி பெற்றால் மட்டுமே அடுத்த ஆண்டு படிக்க முடியும் என்ற நடைமுறை உள்ளது. இதனால் மாணவர்கள் இடைநிற்றல் ஏற்படக்கூடும் என்பதால், இந்த முறையை நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கரோனா பரவல் காலக்கட்டம் என்பதால் தனியார் கல்லூரிகள் 75 சதவீதம் மட்டுமே கல்விக் கட்டணம் வசூலிக்க வேண்டும். கூடுதல் கட்டணம் வசூலித்தால் நடவடிக்கை எடுக்கப்படும். கலை, அறிவியல் கல்லூரிகளில் முதலாமாண்டு தவிர மற்ற மாணவர்களுக்கு ஆகஸ்ட் 9-ம் தேதி முதல் ஆன்லைன் வகுப்புகள் தொடங்கப்படும். கல்லூரிகளை திறப்பது தொடர்பாக முதல்வருடன் ஆலோசித்து இறுதி முடிவு எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**பொறியியல் வகுப்பு ஆக.18-ல் தொடக்கம்**

பொறியியல் படிப்புகளுக்கு ஆகஸ்ட் 18 முதல் நவ.30-ம் தேதி வரை வகுப்புகள் நடைபெறும். டிச.2-ம் தேதி செய்முறைத் தேர்வும், டிச.13-ம் தேதி பருவத் தேர்வும் நடைபெறும். எம்சிஏ, எம்எஸ்சி, எம்பிஏ ஆகிய படிப்புகளுக்கும் ஆக.18-ம் தேதி ஆன்லைன் வகுப்புகள் தொடங்கும். பொறியியலில் 3, 5 மற்றும் 7-வது பருவத்துக்கும், முதுகலையில் 3, 5-வது பருவத்துக்கும் இந்தக் கால அட்டவணை பொருந்தும். அரசின் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, ஆன்லைனில் வகுப்புகள் நடத்தப்படும். அதேபோல அடுத்த பருவத்துக்கான வகுப்புகள் 2022 ஜன.19-ம் தேதி தொடங்கும். அதேபோல, 4 வளாக கல்லூரிகளில் உள்ள அனைத்து பாடப் பிரிவுகளுக்கும் செப்.15-ம் தேதி ஆன்லைன் வகுப்புகள் தொடங்கும் என்று அண்ணா பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

TAMILTH ALL 1 TNadu_02 K RAJENDIRA PRABU Time



**மீட்டர் பேசுது**

| சென்னை | வேலூர் | திருச்சி | மதுரை | கோவை |
|---|---|---|---|---|
| 34.6°c | 34.1°c | 35.6°c | 36.3°c | 31.2°c |

| சேலம் | நெல்லை | உதகை | கொடைக்கானல் |
|---|---|---|---|
| 33.1°c | 35.0°c | 17.5°c | 18.1°c |

தமிழகம், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் மழை பெய்யக்கூடம். சென்னையில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்பநிலை அதிக பட்சம் 36 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்சம் 27 டிகிரி செல்சியஸ் ஆகவும் இருக்கும்.



▲ திருவாரூர் மாவட்டம், பழவனக்குடி கிராமத்தைச் சேர்ந்த எஸ்.எஸ்.மாதவ் சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து தான் உருவாக்கிய கையடக்க கணினி மையச் செயலாக்க (சிபியு) கருவியை காண்பித்து வாழ்த்து பெற்றார். உடன், மாணவனின் பெற்றோர்.

கையடக்க கணினி 'சிபியு' வை உருவாக்கிய

# திருவாரூர் மாணவனுக்கு முதல்வர் பாராட்டு

■ சென்னை

கையடக்க கணினி மைய செயலாக்க கருவியை (சிபியு) உருவாக்கிய, திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த 9-ம் வகுப்பு மாணவன் எஸ்.எஸ்.மாதவ்வை நேரில் அழைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டினார்.

இதுகுறித்து தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:

திருவாரூர் மாவட்டம் பழவனக்குடி கிராமம், கலைஞர் நகரைச் சேர்ந்த சேதுராசனின் மகன் எஸ்.எஸ்.மாதவ். 9-ம் வகுப்பு படிக்கும் இவர் கணினியில் மிகுந்த ஆர்வம் கொண்டு, ஜாவா, பைதான், சி, சி++, கோட்லின் ஆகிய கணினி மொழிகளை படித்துள்ளார். இவர் கரோனா ஊரடங்கு காலத்தில் பள்ளிகள் திறக்கப்படாத நிலையில், கையடக்க கணினி மைய செயலாக்க கருவி (மினி சிபியு) கண்டுபிடித்துள்ளதாகவும், இதற்காக 2 ஆண்டுகள் கடுமையாக முயற்சித்து வெற்றி பெற்றுள்ளார் என்பதும் முதல்வர் மு.க.ஸ்டாலின் கவனத்துக்கு சென்றது.

இதையடுத்து நேற்று தலைமைச் செயலகத்துக்கு மாதவ்வை நேரடியாக வரவழைத்து முதல்வர் பாராட்டினார். இக்கருவி அனைவரிடத்திலும் சென்றடைய ஏதுவாக 'டெரா பைட் இந்தியா சிபியு மேனுபாக்சரிங் கம்பனி' என்ற நிறுவனத்தை தொடங்கி, இணையதளம் வாயிலாக குறைந்த விலைக்கு விற்பனை செய்து வரும் தகவலை கேட்டறிந்த முதல்வர் மாணவன் மாதவ்வை வாழ்த்தினார்.

மாதவ்வின் கண்டுபிடிப்பை பாராட்டிய முதல்வர், கணினி தொடர்பான மாணவனின் உயர் படிப்பு, ஆராய்ச்சிக்கும் தமிழக அரசு அனைத்து விதமான உதவிகளையும் செய்யும் என்று உறுதி அளித்தார். நிகழ்ச்சியில் மாதவ்வின் பெற்றோர் உடன் இருந்தனர்.

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி

# திமுக அரசுக்கு எதிராக அதிமுக ஆர்ப்பாட்டம்

● தேனியில் ஓபிஎஸ், சேலத்தில் பழனிசாமி பங்கேற்பு

■ சென்னை/தேனி/சேலம்

தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவது உள்ளிட்டவற்றை வலியுறுத்தி திமுக அரசுக்கு எதிராக தமிழகம் முழுவதும் அதிமுக நேற்று நடத்திய முதல் கவன ஈர்ப்பு முழக்க ஆர்ப்பாட்டத்தில் அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர்கள் ஓ.பன்னீர்செல்வம், பழனிசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தியும், திமுக அரசின் மெத்தனப்போக்கை களையவும், அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மீதான லஞ்ச ஒழிப்பு சோதனைக்கு கண்டனம் தெரிவித்தும், ஜூலை 28-ம் தேதி காலை 10 மணிக்கு மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஒன்றியம், ஊராட்சி ஆகிய பகுதிகளில் தங்கள் வீடுகளின் முன் அதிமுக தொண்டர்கள் பதாகைகளை ஏந்தி கவன ஈர்ப்பு முழக்கங்களை எழுப்ப வேண்டும் என்று அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் பழனிசாமி ஆகியோர் அறிவித்திருந்தனர். இதை ஏற்று, நேற்று தமிழகம் முழுவதும் அதிமுகவினர் தங்கள் வீடுகளின் முன் கண்டன முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

**ஓ.பன்னீர்செல்வம் திட்டவட்டம்**

போடியில் எம்எல்ஏ அலுவலகம் முன்பு நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை வகித்த அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

திமுக பொய்யான வாக்குறுதிகளை முன்வைத்து தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டது. திமுக முன்னணி தலைவர்கள், பேச்சாளர்கள் ஒவ்வொரு தொகுதியிலும் இதைக் கூறி மக்களை நம்ப வைத்தனர். இதையடுத்து அதிமுகவை விட 3 சதவீத வாக்குகள் கூடுதலாக பெற்று திமுக வெற்றி பெற்றது.

ஆனால் ஆட்சி பொறுப்பேற்ற பின்பு கடந்த 3 மாதங்களில் மக்களின் முக்கிய பிரச்சினைகளில் இருந்து திமுக பின் வாங்குகிறது. நீட் தேர்வு ரத்து, பெட்ரோல், டீசல் விலை குறைப்பு, குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் நிதி உதவி என எந்த வாக்குறுதிகளையும் திமுக நிறைவேற்றவில்லை.

கரோனாவைக் கட்டுப்படுத்துவதில் அதிமுக தலைமையிலான அரசு சிறப்பாக செயல்பட்டது என பிரதமரே முன்பு பாராட்டியிருந்தார். ஆனால் தற்போது திமுக தலைமையிலான அரசில் கரோனாவால் நிகழும் மரணங்கள் மறைக்கப்படுகின்றன. முல்லை பெரியாறு பாசன விவசாயிகளுக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டு வருகிறது. இது தொடர்ந்தால் அதிமுக சார்பில் போராட்டம் நடத்தப்படும்.

ஜனநாயக முறைப்படி அதிமுக வழிநடத்தப்பட்டு வருகிறது. அதிமுகவில் தனிப்பட்ட குடும்பமோ, தனிநபரோ ஆதிக்கம் செலுத்த முடியாது. யாராலும் அதிமுகவை கைப்பற்றவும் முடியாது. தொண்டர்கள் பலம் தன்னிடம் உள்ளது என்று சசிகலா கூறுவது கற்பனையானது. இவ்வாறு அவர் கூறினார்.



▲ திமுகவின் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றக் கோரி போடியில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பேசிய அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம்.



▲ சேலத்தில் அதிமுக இணை ஒருங்கிணைப்பாளர் பழனிசாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்திய அதிமுகவினர். படம்: எஸ்.குரு பிரசாத்

**மக்களை திசை திருப்ப முயற்சி**

சேலத்தில் நெடுஞ்சாலை நகரில் உள்ள அதிமுக இணை ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதல்வருமான பழனிசாமியின் வீட்டின் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை வகித்த பழனிசாமி, பிறகு செய்தியாளர்களிடம் கூறியதாவது:

முதல்வராக ஸ்டாலின் பொறுப்பேற்றவுடன் முதல் வேலையாக நீட் தேர்வு ரத்து செய்யப்படும், என்றார். ரத்து செய்யவில்லை. கல்விக் கடன் ரத்து, குடும்பத் தலைவிக்கு மாதந்தோறும் ரூ.1,000, பெட்ரோல், டீசல் விலைக் குறைப்பு உள்ளிட்ட எந்த வாக்குறுதியையும் திமுக அரசு நிறைவேற்றவில்லை.

'நீட் தேர்வை ரத்து செய்வோம்' என இதுவரை குரல் கொடுத்து வந்த திமுக அமைச்சர்கள் தற்போது, 'மாணவர்களை நீட் தேர்வுக்குத் தயாராகுங்கள்' என்கிறார்கள். குறைந்த நேரத்தில் எவ்வாறு மாணவர்கள் நீட் தேர்வுக்குத் தயாராக முடியும்? வேண்டுமென்றே திட்டமிட்டு நீட் தேர்வு ரத்து செய்யப்படும் என அறிவித்து பெற்றோர்களை ஏமாற்றி திமுக தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது.

எந்த அடிப்படையில் மின்கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்றே தெரியவில்லை. மின் கணக்கீடு பெரும் குளறுபடியாக உள்ளது. அடிக்கடி மின் நிறுத்தம் ஏற்படுகிறது. தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் மக்களை திசை திருப்ப அதிமுக நிர்வாகிகள் மீது பொய் வழக்குகள் போட்டு வருகின்றனர்.

திமுக அமைச்சர்கள் மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டு வழக்குகள் நிலுவையில் உள்ளதை மறந்து திமுகவினர் பேசுகின்றனர். வன்னியர்களுக்கான 10.5 சதவீத இடஒதுக்கீட்டை அதிமுக அரசு சட்ட பேரவையில் அறிவித்தது. ஏற்கெனவே சாதி வாரியாக கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று அதை நாங்கள் கொண்டு வந்தோம். திமுக அரசு இதை செயல்படுத்தினால் விடிவு காலம் பிறக்கும் என்றார்.

இதேபோன்று, முன்னாள் அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள் மற்றும் நிர்வாகிகள் என பலரும் தங்கள் பகுதிகளில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



▲ தூத்துக்குடி அருகே உள்ள சாமிநத்தம் கிராமத்தில் ஆர்ப்பாட்டம் நடத்திய பொதுமக்கள்.

ஆக்சிஜன் உற்பத்திக்கான அனுமதியை நீட்டிக்க வலியுறுத்தி

# ஸ்டெர்லைட் சுற்றுவட்டார கிராமங்களில் மக்கள் கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

■ தூத்துக்குடி

கரோனா தொற்றின் 2-வது அலை பாதிப்பு அதிகம் இருந்த நேரத்தில், நாடு முழுவதும் மருத்துவ ஆக்சிஜன் தேவை பல மடங்கு அதிகரித்தது. இதையடுத்து, தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை வளாகத்தில் உள்ள ஆக்சிஜன் உற்பத்தி நிலையத்தில் மருத்துவ ஆக்சிஜன் உற்பத்திக்கு உச்ச நீதிமன்ற உத்தரவின்பேரில் தமிழக அரசு அனுமதி அளித்தது. அங்கு, இதுவரை 2,100 மெட்ரிக் டன் திரவ ஆக்சிஜனும், 11 மெட்ரிக் டன் வாயு நிலை ஆக்சிஜனும் உற்பத்தி செய்யப்பட்டு, தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில், ஸ்டெர்லைட் ஆலையில் ஆக்சிஜன் உற்பத்திக்கு உச்ச நீதிமன்றம் அளித்த 3 மாத அனுமதி இம்மாதம் 31-ம் தேதியோடு முடிவடைகிறது. கரோனா தொற்று இன்னும் முழுமையாக குறையவில்லை. மேலும் 3-வது அலை தாக்கக்கூடும் என்ற எச்சரிக்கையும் உள்ளது. எனவே, ஸ்டெர்லைட் ஆலையில் ஆக்சிஜன் உற்பத்திக்கு அளிக்கப்பட்ட அனுமதியை மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்க வேண்டும் எனக் கோரி, ஸ்டெர்லைட் நிறுவனம், உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளது. இந்த மனு ஓரிரு நாட்களில் விசாரணைக்கு வரவுள்ளது.

இதையடுத்து, ஸ்டெர்லைட் ஆலையில் ஆக்சிஜன் உற்பத்திக்கான அனுமதியை நீட்டிக்கக்கூடாது என எதிர்ப்பாளர்களும், மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்க வேண்டும் என ஆதரவாளர்களும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொடர்ந்து மனு அளித்து வருகின்றனர்.

ஸ்டெர்லைட் ஆலையைச் சுற்றி உள்ள மீளவிட்டான், சாமிநத்தம், ராஜாவின் கோவில், மடத்தூர், தெற்கு சங்கரபேரி, வடக்கு சங்கரபேரி, அய்யனடைப்பு, தெற்கு வீரபாண்டியபுரம் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் அந்தந்த பகுதியில் நேற்று காலையில் திரண்டு, 'ஸ்டெர்லைட் ஆலையில் ஆக்சிஜன் உற்பத்திக்கான அனுமதியை மேலும் 6 மாதங்கள் நீட்டிக்க வேண்டும்' என வலியுறுத்தி கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டங்களில் கிராம மக்கள் திரளாக கலந்து கொண்டனர். 'முன்னெச்சரிக்கை முக்கியமானது, உயிர்கள் விலை மதிப்பற்றது, எனவே ஆக்சிஜன் உற்பத்திக்கு மேலும் 6 மாதம் அனுமதி அளிக்க வேண்டும்' என அவர்கள் கோஷமிட்டனர். இதுகுறித்து தகவல் அறிந்த போலீஸார் சம்பவ இடங்களுக்கு விரைந்து சென்று ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி கிடையாது என தெரிவித்ததால் மக்கள் கலைந்து சென்றனர்.

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் 79 அடியானது

■ சேலம்

மேட்டூர் அணை நீர்மட்டம் 79.14 அடியானது. நீர்வரத்து விநாடிக்கு 29 ஆயிரத்து 666 கனஅடியாக உள்ளது.

கர்நாடக மாநில அணைகளில் இருந்து காவிரியில் உபரிநீர் திறக்கப்பட்டு உள்ளதைத் தொடர்ந்து மேட்டூர் அணைக்கு கடந்த ஒரு வாரமாக நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து வருகிறது. அணைக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 34 ஆயிரத்து 141 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று 29 ஆயிரத்து 666 கனஅடியானது.

டெல்டா பாசனத்துக்கு அணையில் இருந்து விநாடிக்கு 10 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. நீர் திறப்பைவிட நீர்வரத்து அதிகரித்து இருப்பதால், அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் 77.43 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று காலை 79.16 அடியானது. நீர்இருப்பு 41.12 டிஎம்சி-யாக உள்ளது.

நலிவுற்ற குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களை மீட்க

# முன்னாள் அரசுச் செயலர் தலைமையில் குழு அமைப்பு

■ சென்னை

தமிழக குறு, சிறு, நடுத்தரத் தொழில்துறைச் செயலர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பதுடன் வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க பங்கை வழங்கி வருகின்றன. கரோனா தொற்று மற்றும் பல்வேறு பொருளாதாரக் காரணங்களால் பாதிக்கப்பட்ட இந்நிறுவனங்கள், மிகவும் கடினமான சூழலை சந்தித்து வருகின்றன. பேரவையில் ஆளுநர் ஆற்றிய உரையில், 'நலிவுற்ற குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை மீட்டெடுப்பதற்கான திட்டங்களை வகுப்பதற்காக தொழிலதிபர்கள், வங்கியாளர்கள், நிதித்துறை வல்லுநர்கள், அரசு அலுவலர்கள் அடங்கிய நிபுணர் குழு அமைக்கப்படும்' என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை மீட்பதற்கான திட்டங்களை வகுப்பதற்கான குழுவை ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரியும் தொழில்துறை முன்னாள் செயலருமான ந.சுந்தரதேவன் தலைமையில் அமைத்து அரசு உத்தரவிட்டுள்ளது.

இக்குழுவில், சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியரும், மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவின் பகுதிநேர உறுப்பினருமான எம்.விஜயபாஸ்கர், இந்திய ரிசர்வ் வங்கியின் சிறு, நடுத்தர நிறுவன நிதி உள்ளிட்ட குழுக்களின் முன்னாள் உறுப்பினர் பிந்து ஆனந்த், இந்திய சிறுதொழில்கள் மேம்பாட்டு வங்கி (சிட்பி) முன்னாள் தலைவர் பாலசுப்பிரமணியம், ஆம்பியர் மின்சார வாகன நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி ஹேமலதா அண்ணாமலை, இந்திய ஏற்றுமதி கழகங்கள் கூட்டமைப்பின் மண்டல தலைவர் இஸ்ரார் அகமது, தமிழ்நாடு சிறு மற்றும் சிறிய தொழில்கள் சங்கம் (டான்ஸ்டியா) தலைவர் அன்புராஜன், பட்டயக் கணக்காளர் ஆனந்த் ஆகிய 7 பேரும் உறுப்பினர்களாக இருப்பார்கள்.


அலுவல்சாரா உறுப்பினர்களாக நிதித்துறை, தொழில்துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைகளின் செயலர்கள், மாநில அளவிலான வங்கியாளர்கள் குழுவின் தலைவர் ஆகியோர் இருப்பர். தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் குழுவின் உறுப்பினர் - செயலராக பணியாற்றுவார்.

இந்தக் குழு தமிழகத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவற்றில் இருந்து நிறுவனங்களை மீட்டு எடுப்பதற்கு தேவையான உடனடி, குறுகிய மற்றும் நீண்டகால நடவடிக்கைகளை பரிந்துரைக்கும்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தேவையான கடன் வசதி பெறவும், ஏற்றுமதியை மேம்படுத்த தேவையான ஆலோசனைகளையும் இக்குழு வழங்கும். தேவையான உள்கட்டமைப்பு, வணிகம் புரிவதை எளிமையாக்குதல், மனித ஆற்றல் தொடர்பாகவும் இக்குழு ஆய்வு செய்யும். மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சியை உயர்த்த ஆலோசனை வழங்கவும் இக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இக்குழு 3 மாதங்களுக்குள் அரசுக்கு அறிக்கை அளிக்கும்.

'பஞ்ச்'சோந்தி பராக்!

எங்கள் முயற்சியும், சசிகலாவின் முயற்சியும் அதிமுகவை மீட்க வேண்டும் என்பதுதான்! – டிடிவி.தினகரன்




– எ.எம்.எம்.ரிஸ்வான், சென்னை.

- **செய்தி** : அதிமுகவின் உட்கட்சி விவகாரத்தில் பாஜக தலையீடு செய்கிறது என்ற குற்றச்சாட்டில் உண்மை இல்லை! – தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை

**பஞ்ச்** : பொய்யும் இல்லைதானே? – க.கீராசந்த், விருதுநகர்.

**செய்தி** : இறைவன் அருளால் தபால் ஓட்டுகள் மூலம் ஜெயித்தேன்! – அமைச்சர் துரைமுருகன்

- **பஞ்ச்** : இப்ப பெரியார் சிலபஸ்ல கடவுள் வாழ்த்து, கடவுள் அருள் எல்லாம் சேர்ந்துடுச்சா? – சி.பி.செந்தில் குமார், சென்னிமலை.

▲ வாசகர்களே...
கருத்துச் சித்திரம் போலவே, இதுவும் உங்கள் களம்தான். cartoon@hindutamil.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கே 'நறுக்' செய்தி வரிகளோடு சேர்த்து அனுப்புங்கள். பிரசுரமாகும் உங்கள் 'பஞ்ச்'களுக்குப் பரிசு ரூ.100.

புதுச்சேரி இ.எஸ்.ஐ. அலுவலகத்தில் சிபிஐ சோதனை

# லஞ்சம் வாங்கிய இரு அதிகாரிகள் சிக்கினர்

■ புதுச்சேரி

புதுச்சேரி முதலியார்பேட்டை புவன்கரே வீதியில் தொழிலாளர்களின் அரசு காப்பீட்டுக் கழகத்தின் (இ.எஸ்.ஐ.) மண்டல அலுவலகம் இயங்கி வருகிறது. புதுச்சேரி மாநிலத்தில் உள்ள தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தொழிலாளர் துறை அறிவுறுத்தலின்படி, மருத்துவக் காப்பீடு திட்டங்கள் இந்த அலுவலகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மருத்துவக் காப்பீடு எடுக்காத நிறுவனம் மற்றும் தொழிற்சாலைகளை மிரட்டி இ.எஸ்.ஐ. அதிகாரிகள் லஞ்சம் வாங்கி முறைகேட்டில் ஈடுபட்டதாக சென்னை சிபிஐ அலுவலகத்துக்கு புகார்கள் சென்றன.

இந்நிலையில் 4 பேர் கொண்ட சிபிஐ அதிகாரிகள் குழு நேற்று பிற்பகலில் இ.எஸ்.ஐ. மண்டல அலுவலகத்துக்கு வந்து திடீர் சோதனையில் ஈடுபட்டனர். அந்த சமயத்தில் ஒரு தொழிற்சாலை நிறுவனத்திடம் இருந்து ரூ.25 ஆயிரம் லஞ்சம் வாங்கி முறைகேட்டில் ஈடுபட்டதாக இருவரிடம் தீவிர விசாரணை நடத்திய சிபிஐ அதிகாரிகள் அவர்களிடம் இருந்த பல்வேறு கோப்புகள், கணினி உள்ளிட்டவற்றை சோதனையிட்டனர்.

மாலை வரை நீடித்த இந்த சோதனையின் முடிவில், லஞ்ச மோசடி தொடர்பாக இ.எஸ்.ஐ மண்டல துணை இயக்குநர் பெட்ராஸ், சமூக பாதுகாப்பு அலுவலர் மோகித் ஆகிய இருவரை சிபிஐ அதிகாரிகள் கைது செய்து, சென்னைக்கு அழைத்துச் சென்றனர்.

மேலும், ஆவணங்கள், தகவல்கள் அடங்கிய கணினி, ஹார்டு டிஸ்க் ஆகியவற்றையும் பறிமுதல் செய்து எடுத்துச் சென்றனர்.



▲ தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழக புதுச்சேரி மண்டல அலுவலகத்தில் முறைகேட்டில் ஈடுபட்ட அதிகாரிகள் பெட்ராஸ், மோகித் ஆகிய இருவரை கைது செய்து அழைத்து செல்லும் சிபிஐ அதிகாரிகள். படம்: எம்.சாம்ராஜ்

கும்பகோணம் நிதி நிறுவன மோசடி வழக்கில்

# தொழிலதிபர் மனைவி உட்பட மேலும் 2 பேர் கைது

■ கும்பகோணம்

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஸ்ரீநகர் காலனியைச் சேர்ந்த தொழிலதிபர்கள் எம்.ஆர்.கணேஷ், எம்.ஆர்.சுவாமிநாதன். 'ஹெலிகாப்டர் சகோதரர்கள்' என அழைக்கப்பட்ட இவர்கள், நிதி நிறுவனம் நடத்தி, கோடிக்கணக்கான ரூபாய் மோசடி செய்ததாகக் கூறப்படுகிறது.

இதில், அந்த நிதி நிறுவனத்தில் தாங்கள் முதலீடு செய்த ரூ.15 கோடியை தராமல் ஏமாற்றி விட்டதாக கும்பகோணத்தைச் சேர்ந்த ஜபருல்லா- பைரோஜ்பானு தம்பதியர் அளித்த புகாரின்பேரில், தஞ்சாவூர் மாவட்ட குற்றப்பிரிவு போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

இந்த வழக்கில், நிதி நிறுவன பொது மேலாளர் ஸ்ரீகாந்த்(56), நிதி நிறுவன கணக்காளர்களான கும்பகோணம் டபீர் கீழக் தெருவைச் சேர்ந்த மீரா(30), அவரது தம்பி ஸ்ரீதர்(29) ஆகியோரை தனிப்படை போலீஸார் கைது செய்தனர். இதைத் தொடர்ந்து தலைமறைவான நிதி நிறுவன அதிபர்களான எம்.ஆர்.கணேஷ் சகோதரர்கள், ஊழியர்கள், ஏஜென்ட்களைத் தேடி வருகின்றனர்.

இந்நிலையில், நிதி நிறுவனத்தை நடத்தி வந்த எம்.ஆர்.கணேஷின் மனைவி அகிலா(33) மற்றும் நிதி நிறுவனத்தில் ஏஜென்டாக செயல்பட்ட கும்பகோணத்தைச் சேர்ந்த புரோகிதர் வெங்கடேசன்(58) ஆகிய இருவரையும் தஞ்சாவூரில் நேற்று முன்தினம் இரவு தனிப்படை போலீஸார் கைது செய்தனர். பின்னர், அவர்கள் இருவரையும் கும்பகோணம் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தினர். அவர்களை ஆக.11-ம் தேதி வரை நீதிமன்ற காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

TAMILTH ALL 1 National_01 A.M.PRABHAKARAN Time






பணியிலிருந்து ஓய்வு பெற 4 நாட்கள் இருந்த நிலையில் எல்லை பாதுகாப்புப் படை இயக்குநர் ஜெனரலாக இருக்கும் ராகேஷ் அஸ்தானாவை டெல்லி போலீஸ் கமிஷனராக நியமித்துள்ளது மத்திய அரசு. இது சட்டவிரோதமாகும்

• **பவன் கேரா,** காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் •





பிரிட்டிஷாருக்கு எதிராக போராடிய நாம் சுதந்திரம் பெற்றோம். அந்த சுதந்திரத்தை 70 ஆண்டுகளுக்குப் பின்னர் பாஜக தலைமையிலான அரசு பறித்துக் கொண்டது. நமது உரிமைகளுக்காக ஏன் தொடர்ந்து போராடக்கூடாது.

• **மெஹபூபா முப்தி,** மக்கள் ஜனநாயக் கட்சித் தலைவர் •

| ஒரே நாளில் | இதுவரை |
|---|---|
| 41 ஆயிரம் பேர் குணமடைந்தனர் | 3.06 கோடி பேர் குணமடைந்தனர் |
| 40.02 லட்சம் பேருக்கு தடுப்பூசி | 44.61 கோடி பேருக்கு தடுப்பூசி |
| 17.36 லட்சம் பரிசோதனை | 46.08 கோடி பரிசோதனை |

## சின்னச் சின்னதாய்...

### 43,654 பேருக்கு கரோனா பாதிப்பு

**புதுடெல்லி:** நாடு முழுவதும் ஒரே நாளில் புதிதாக 43,654 பேருக்கு கரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. 24 மணி நேரத்தில் 640 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று காலை 7 மணி வரையிலான நிலவரப்படி கடந்த 24 மணி நேரத்தில் நாடு முழுவதும் புதிதாக 43,654 பேர் கரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். கேரளாவில் அதிக அளவாக 22,129 பேருக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஒரே நாளில் நாடு முழுவதும் 640 பேர் கரோனாவால் உயிரிழந்துள்ளனர். இந்தியா முழுவதும் கரோனாவுக்கு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை சற்று அதிகரித்து 3,99,436 ஆக உள்ளது.

இதனிடையே, டெல்லியில் நேற்று பேட்டியளித்த மத்திய சுகாதாரத்துறை இணை செயலாளர் லாவ் அகர்வால், "கேரளா, மகாராஷ்டிரா உள்ளிட்ட 7 மாநிலங்களில் உள்ள 22 மாவட்டங்களில் கரோனா தொற்று கடந்த 4 வாரங்களில் அதிகரித்துள்ளது. இது கவலையளிக்கிறது. இது தொடர்பாக அந்த மாநில அரசுகளுடன் பேசி வருகிறோம்" என்றார்.



▲ டெல்லியில் காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவர் சோனியா காந்தியை, மேற்கு வங்க முதல்வரும், திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான மம்தா பானர்ஜி நேற்று சந்தித்துப் பேசினார். படம்: பிடிஐ

### பெகாசஸ் விவகாரத்தில் எதிர்க்கட்சிகளுக்கு முதல்வர் மம்தா பானர்ஜி அழைப்பு

**புதுடெல்லி:** மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, 5 நாள் பயணமாக டெல்லி வந்துள்ளார். இந்நிலையில் நேற்று முன்தினம் பிரதமர் மோடியை அவர் சந்தித்துப் பேசினார்.

காங்கிரஸ் இடைக்காலத் தலைவர் சோனியா காந்தியை மம்தா பானர்ஜி நேற்று சந்தித்துப் பேசினார். அப்போது காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தியும் உடனிருந்தார். சோனியாவுடனான சந்திப்புக்குப் பிறகு செய்தியாளர்களிடம் மம்தா பானர்ஜி பேசியதாவது: கரோனா விவகாரம், பெகாசஸ் பிரச்சினைகளில் சிறந்த எதிர்க்கட்சிகளாக ஒன்றிணைந்து செயல்படுவோம் என்று சோனியாவிடம் தெரிவித்தேன். பாஜகவை வீழ்த்த எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றாக இருக்கவேண்டும் என்பது என்னுடைய தனிப்பட்ட நம்பிக்கை.

அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்தால் யார் தலைமையேற்கப் போகிறார்கள் என்று கேட்கிறீர்கள். நான் வருங்கால அரசியல் குறித்து ஜோதிடம் கூறுபவளும் அல்ல. எதிர்க்கட்சிகளுக்கு யார் தலைமையேற்றாலும் சரி. எனக்குப் பிரச்சினை இல்லை. இந்த பிரச்சினை எழும்போது அதுகுறித்து அப்போது விவாதிப்பேன்.

இவ்வாறு மம்தா பானர்ஜி கூறினார். - பிடிஐ

### காஷ்மீரில் இயல்பு நிலை திரும்பியதும் மாநில அந்தஸ்து வழங்க மத்திய அரசு உறுதி

**புதுடெல்லி:** ஜம்மு – காஷ்மீரில் இயல்பு நிலை திரும்பியதும் மீண்டும் அதற்கு மாநில அந்தஸ்து வழங்கப்படும் என நாடாளுமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ஜம்மு – காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கி வந்த 370–வது சட்டப்பிரிவை மத்திய அரசு கடந்த 2019–ம் ஆண்டு நீக்கியது. மேலும், ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தை காஷ்மீர் மற்றும் லடாக் என இரண்டு யூனியன் பிரதேசங்களாகவும் பிரித்தது. மத்திய அரசின் இந்த நடவடிக்கைக்கு அங்கு கடும் எதிர்ப்பு எழுந்ததை அடுத்து, காஷ்மீரில் ஊரடங்கு உள்ளிட்ட கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டன. பிறகு, நிலைமை ஓரளவு சீரானதை அடுத்து படிப்படியாக கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டன.

இதனிடையே, காஷ்மீருக்கு மீண்டும் மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என அங்குள்ள கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக மாநிலங்களவையில் சிவசேனா எம்.பி. பிரியங்கா சதுர்வேதி நேற்று கேள்வியெழுப்பினார். இதற்கு பதிலளித்த மத்திய உள்துறை இணையமைச்சர் நித்யானந்த் ராய், "ஜம்மு – காஷ்மீரில் இயல்பு நிலை முழுமையாக திரும்பிய பிறகு அதற்கு மாநில அந்தஸ்து வழங்கப்படும்" என்றார்.

### திருமலையில் பாதுகாப்பு ஆய்வு

**திருமலை:** திருமலைக்கு தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் இருப்பதால், ஆக்டோபஸ் படையினர், ஆயுதப்படையினர், உள்ளூர் போலீஸார், தேவஸ்தான கண்காணிப்பு படையினர், ஊர்க்காவல் படையினர், மகளிர் போலீஸ் என பாதுகாப்பு பலமாக இருக்கிறது. எனினும் தீவிரவாதிகள் ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தி வருவதால், திருமலையிலும் பாதுகாப்பை பலப்படுத்த தேவஸ்தானம் தீர்மானித்துள்ளது.

இதற்கான கர்நாடக மாநிலம், கோலாரில் நடைபெற்ற ட்ரோன் தாக்குதல்களை எதிர்க்கொள்ள தயாரிக்கப்பட்ட கருவிகளின் கருத்தரங்கில் தேவஸ்தானத்தின் தலைமை பாதுகாப்பு அதிகாரி கோபிநாத் ஜெட்டி நேரில் சென்று பார்வையிட்டார். இதில் வைக்கப்பட்டிருந்த ஒரு கருவியின் விலை ரூ. 25 கோடியாகும். இதனை அதிகமாக வாங்கும்பட்சத்தில் விலையை குறைப்பதாக 'பெல்' நிறுவனம் கூறியதை தொடர்ந்து 100 கருவிகளை முதல்கட்டமாக வாங்க தேவஸ்தானம் முடிவெடுத்துள்ளது. இக்கருவிகளை பொருத்தும் இடங்களை ஆய்வு செய்யும் பணிகளும் தற்போது திருமலையில் நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக நேற்று திருமலையில் உள்ள வனப்பகுதிகளில் பாதுகாப்பு அதிகாரி கோபிநாத் ஜெட்டி தலைமையில் 2–ம் கட்ட ஆய்வுப்பணிகள் நடைபெற்றன. இதில் பல பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ரகசிய ஆலோசனையும் நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## வரதட்சணை வழக்குகளில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

• கேரள முதல்வர் பினராயி அறிவிப்பு

■ திருவனந்தபுரம்

கேரள சட்டப் பேரவைக் கூட்டத் தொடர் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நேற்று பேரவையில் முதல்வர் பினராயி விஜயன் பேசியதாவது:

காந்திய வழியில் விழிப்புணர்வு மேற்கொள்ளும் வகையில் கேரள ஆளுநர் ஆரிப் முகமது சமீபத்தில் உண்ணாவிரத போராட்டம் மேற்கொண்டார்.

கேரள மாநிலத்தில் பல இடங்களில் வரதட்சணைக் கொடுமை வழக்குகள் அதிக அளவில் பதிவாகி வருவதை நான் அறிந்தேன். 2011 முதல் 2016-ம் ஆண்டு வரை வரட்சணைக் கொடுமை காரணமாக 100 பேர் வரை உயிரிழந்துள்ளனர். ஆனால் 2016-ம் ஆண்டு முதல் 2021 வரையிலான காலத்தில் இந்த உயிரிழப்பின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இந்த காலகட்டத்தில் 54 பேர் வரட்சணைக் கொடுமையால் உயிரிழந்துள்ளனர். 2021, 2021-ம் ஆண்டுகளில் மட்டும் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

வரதட்சணை கேட்டு பெண்களை துன்புறுத்தினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். வரதட்சணைக் கொடுமை வழக்குகளில் சிக்கியவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது. வரதட்சணைக் கொடுமை வழக்குகள் தொடுக்கப்படும் நபர்கள் மீது தயவு தாட்சண்யம் பார்க்கமாட்டோம். இதுபோன்ற சமூக அச்சுறுத்தலுக்கு எதிராக விழிப்புணர்வு மேற்கொண்டால் இதை தடுக்க முடியும். இவ்வாறு பினராயி கூறினார். - பிடிஐ

**கருத்துச் சித்திரம்** கருத்து: **அ.சுகுமார்,** காட்டபாடி.




▲ வாசகர்களே... இந்த இடம் உங்களுக்கு. கருத்துச் சித்திரத்துக்கான உங்கள் எண்ணத்தை முடிந்தவரையில் வரைந்தோ, எழுத்தில் விவரித்தோ அனுப்பிவையுங்கள். சிறந்த கருத்துகளைச் சித்திரமாக்க எங்கள் ஓவியர் காத்திருக்கிறார். cartoon@hindutamil.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ, 044-28552215 என்ற தொலைநகல் எண்ணுக்கோ உங்கள் எண்ணங்களை அனுப்பலாம். பிரசுரிக்கப்படும் கருத்துச் சித்திரங்களுக்குத் தக்க சன்மானம் காத்திருக்கிறது.

**உங்கள் அலைபேசி / தொலைபேசி எண் மற்றும் பின்கோடு ஆகியவற்றைத் தவறாமல் குறிப்பிட்டு அனுப்பவும்.**

### அவைத் தலைவர் இருக்கை மீது காகிதங்களை கிழித்து எறிந்து

# மக்களவையில் காங்கிரஸ் எம்.பி.க்கள் கடும் அமளி

■ புதுடெல்லி

மக்களவை தலைவர் இருக்கை மீது காகிதங்களை காங்கிரஸ் எம்.பி.க்கள் கிழித்து எறிந்து அமளியில் ஈடுபட்டனர். இதனால் அவையில் கூச்சல்-குழப்பம் ஏற்பட்டு மக்களவை ஒத்திவைக்கப்பட்டது.

நாட்டையே உலுக்கியுள்ள பெகாசஸ் ஒட்டுகேட்பு விவகாரம் தொடர்பாக நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணை நடத்தக்கோரி நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு வருகின்றன. நாடாளுமன்ற கூட்டத் தொடர் தொடங்கியது முதல் இந்த விவகாரத்தை எழுப்பி மக்களவை மற்றும் மாநிலங்களவையில் அமளியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் அவை நடவடிக்கை பாதிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்த விவகாரத்தில் தவறேதும் நடைபெறவில்லை என்று மத்திய அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது.

இதனிடையே, பெகாசஸ் மற்றும் வேளாண் சட்டங்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதிக்க மத்திய அரசுக்கு உத்தரவிடக் கோரி குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்துக்கு கூட்டாக எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கடிதம் எழுதியுள்ளனர்.

இதனிடையே, பெகாசஸ் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர்கள் நேற்று கூடி விவாதித்தனர். காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ், திமுக, இரு கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளிட்ட பல்வேறு கட்சித் தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

**விசாரணை வேண்டும்**

இக்கூட்டத்தில் பெகாசஸ் விவகாரத்தில் மத்திய அரசு நாடாளுமன்ற சிறப்புக்குழு விசாரணைக்கு சம்மதிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. மேலும் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்து செயல்படுவது பற்றியும் விவாதிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தின் இரு அவைகள் நேற்று காலை கூடியபோது பெகாசஸ் உட்பட பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன.

மக்களவை நேற்று காலை கூடியபோது முதலில் கேள்வி நேரம் எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது மக்களவை தலைவர் (அப்போது அவையை மூத்த உறுப்பினர் ராஜேந்திர அகர்வால் நடத்திக் கொண்டிருந்தார்) மீது காங்கிரஸ் எம்.பி.க்கள் காகிதங்களை கிழித்தெறிந்து அமளியில் ஈடுபட்டனர். அவைத் தலைவர் மீது மட்டுமல்லாமல், நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி மீதும் காகிதங்களை கிழித்து காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ் எம்.பி.க்கள் எறிந்தனர்.

மேலும் மத்திய அரசுக்கு எதிராக தொடர்ந்து அவர்கள் கோஷங்களை எழுப்பினர். இதனால் ஆளுங்கட்சி எம்.பி.க்கள் அதிர்ச்சியில் உறைந்தனர்.

அப்போது அவையை நடத்திக் கொண்டிருந்த மூத்த உறுப்பினர் ராஜேந்திர அகர்வால், உறுப்பினர்களை தங்களது இருக்கைக்குத் திரும்புமாறு கேட்டுக்கொண்டார். அவர் பலமுறை கேட்டுக் கொண்டும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் இருக்கைக்குத் திரும்பவில்லை. அவர் மீது காங்கிரஸ் உறுப்பினர்கள் காகிதங்களை கிழித்து எறிந்தனர். காங்கிரஸ் எம்.பி.க்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபடவே அவையை அவர் ஒத்திவைத்தார்.

பின்னர் அவை கூடியபோது எதிர்க்கட்சி எம்.பி.க்களின் அமளி தொடர்ந்தது. அப்போது மத்திய அமைச்சர் தர்ஷன ஜர்தோஷ் பேசும்போது, "எதிர்க்கட்சி எம்.பி.க்களின் இந்த நடவடிக்கை சரியில்லை. இதை சகித்துக் கொள்ள முடியாது. இதை மக்கள் முன்பு எடுத்துச் சொல்வோம்" என்றார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் இந்த நடவடிக்கையை மத்திய அமைச்சர் அனுராக் தாக்குரும் கண்டித்தார். ஆனால் தொடர்ந்து காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ் எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்டதால் அவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

**மாநிலங்களவை**

இதேபோல் மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அவையின் மையப்பகுதிக்கு வந்து கோஷங்களை எழுப்பினர். பெகாசஸ் விவகாரம், வேளாண் சட்டங்கள் போன்ற விவகாரங்கள் குறித்து அவர்கள் கோஷம் எழுப்பினர். இதனால் அவை பலமுறை ஒத்திவைக்கப்பட்டது.

## பெகாசஸ் உளவு மென்பொருளை அரசு வாங்கியதா, இல்லையா?

• ராகுல் காந்தி கேள்வி

■ புதுடெல்லி

நாடாளுமன்றத்துக்கு வெளியே இஸ்ரேலின் பெகாசஸ் உளவு பார்க்கும் மென்பொருள் விவகாரம் குறித்து செய்தியாளர்களிடம் காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி கூறியதாவது:

நம் நாட்டு இளைஞர்களிடம் ஒன்றை கேட்க விரும்புகிறேன். நமது பிரதமர் நரேந்திர மோடி உங்கள் செல்போன்களுக்கு ஓர் ஆயுதத்தை அனுப்பியிருக்கிறார்.

அதே ஆயுதம் எனக்கு எதிராகவும், நீதித்துறை, ஊடகத் துறைக்கு எதிராகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அப்படி இருக்கும் போது, இந்த விவகாரத்தை ஏன் நாடாளுமன்றத்தில் விவாதிக்க கூடாது?

பெகாசஸ் விவகாரம் என்பது தனிநபர் ரகசியம் சார்ந்த விஷயம் மட்டும் கிடையாது. எங்களை பொறுத்தவரை, இது தேசம் சார்ந்த பிரச்சினை. இது ஒரு தேசவிரோத செயல். இதுகுறித்து மத்திய அரசு விளக்கம் அளித்தே தீர வேண்டும். இந்த விஷயத்தில் சமரசம் செய்துகொள்ளும் பேச்சுக்கே இடமில்லை.

மத்திய அரசிடம் இரண்டே கேள்விகளை தான் கேட்கிறோம். பெகாசஸ் உளவு மென்பொருளை அரசு வாங்கியதா இல்லையா? சொந்த நாட்டு மக்களுக்கு எதிராக இது பயன்படுத்தப்பட்டதா? இந்த கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டியது அரசின் கடமை. இவ்வாறு ராகுல் காந்தி கூறினார்.



▲ பெகாசஸ் ஒட்டுகேட்பு விவகாரம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர்கள் நேற்று ஆலோசனை நடத்தினர். மத்திய அரசுக்கு தங்கள் எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் நாடாளுமன்ற வளாகத்தில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி தலைமையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் அணிவகுத்து வந்து, பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தனர். படம்: பிடிஐ

## காஷ்மீரில் அதிகாலை திடீர் மேக வெடிப்பால் மழை வெள்ளத்தில் சிக்கி 7 பேர் உயிரிழப்பு

• 40–க்கும் மேற்பட்டோர் மாயம்

■ ஸ்ரீநகர்

காஷ்மீரில் மேக வெடிப்பு ஏற்பட்டு பெருமழை மற்றும் வெள்ளம் ஏற்பட்டதில் உறங்கி கொண்டிருந்த 7 பேர் உயிரிழந்தனர். மேலும், 40-க்கும் மேற்பட்டோர் காணவில்லை.

காஷ்மீரின் பூஞ்ச், ரஜவுரி, ரீஸி மற்றும் அவற்றை சுற்றியுள்ள பகுதிகளில் இடி, மின்னலுடன் மழை பெய்து வருகிறது. இந்நிலையில், கிஸ்துவார் மாவட்டம் டச்சன் மலைப் பகுதிகளில் உள்ள ஹான்சார் கிராமத்தில் நேற்று அதிகாலை 4.30 மணிக்கு திடீரென பெரு மழை கொட்டியது.

இதுபோல் திடீரென பெரு மழை பெய்வதை மேக வெடிப்பு (கிளவுட் பர்ஸ்ட்) என்கின்றனர். இதனால் வெள்ளம் ஏற்பட்டு கிராமப் பகுதிகளை சூழ்ந்தது. அப்போது உறக்கத்தில் இருந்த கிராம மக்கள் பீதியில் எழுந்து பாதுகாப்பான இடங்களுக்கு ஓடினர்.

இதற்கிடையில் மழை வெள்ளத்தில் சிக்கி 7 பேர் உயிரிழந்தனர். மேலும், 40-க்கும் மேற்பட்டோர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர். பலர் காணவில்லை என்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. படுகாயம் அடைந்த 12 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என்று போலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும், காஷ்மீரில் மழை தொடரும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளதால் மக்கள் பயத்தில் உள்ளனர்.

இதுகுறித்து போலீஸ் அதிகாரிகள் கூறும்போது, "ஜம்மு காஷ்மீர் போலீஸ் படை, மாநில பேரிடர் மீட்புப் படை, ராணுவம் உட்பட பல மீட்புக் குழுவினர் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், அந்த கிராமப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், மீட்புப் பணியில் சிக்கல் ஏற்பட்டுள்ளது" என்றனர்.

மேக வெடிப்பால் பாதிக்கப்பட்ட கிராமப் பகுதிகளில் சாலை வசதி, மொபைல் போன் வசதிகள் இல்லை. அதனால், மீட்புப் படையினர் அந்தப் பகுதியை சென்றடைவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக கூறுகின்றனர்.

லடாக் யூனியன் பிரதேசத்தில் கார்கில் மலைப் பகுதிகளிலும் மேகவெடிப்பு ஏற்பட்டுள்ளது. கார்கில் - லே நெடுஞ்சாலை பகுதியில் உள்ள கங்கிரால் என்ற கிராமத்தில் முதல் மேகவெடிப்பு ஏற்பட்டு பெரு மழை கொட்டியது. இந்தப் பகுதி கார்கிலில் இருந்து 60 கி.மீ. தூரத்தில் உள்ளது. அதன்பின், சங்க்ரா என்ற பகுதியில் 2-வது மேக வெடிப்பு ஏற்பட்டது.

இதனால் அங்குள்ள நீர்மின் திட்ட கட்டுமானங்கள், வீடுகள் சேதம் அடைந்துள்ளன. எனினும், அதிர்ஷ்டவசமாக அங்கு உயிரிழப்புகள் ஏதும் ஏற்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், காஷ்மீர் துணை நிலை ஆளுநர் மற்றும் டிஜிபி ஆகியோருடன் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தொலைபேசியில் தொடர்பு கொண்டு நேற்று ஆலோசனை நடத்தினார்.

மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றவும், அவர்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை வழங்கவும் அமித் ஷா அப்போது கேட்டுக் கொண்டுள்ளார்.

### வங்கி திவால் அல்லது தடைக்கு உள்ளானால்

## வாடிக்கையாளர்களுக்கு ரூ.5 லட்சம் காப்பீடு

• நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவிப்பு


■ புதுடெல்லி

மத்திய அரசு நேற்று வங்கிகளின் வைப்புத்தொகை காப்பீடு மற்றும் கடன் உத்தரவாதக் கழக (டிஐசிஜிசி) சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவந்துள்ளது. இந்தத் திருத்தத்தின்படி வங்கி வைப்பு நிதி வாடிக்கையாளர்கள் வங்கி திவால் ஆனாலோ தடைக்கு உள்ளானாலோ 90 நாட்களுக்குள் ரூ.5 லட்சம் வரை காப்பீடு பெறுவார்கள் என மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறினார்.

ரிசர்வ் வங்கியின் வங்கி சீர்திருத்த நடவடிக்கைகள்படி வங்கிகளின் செயல்பாடுகளுக்குத் தடை விதிக்கப்படும்போது வாடிக்கையாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டார்கள். இந்தப் பிரச்சினையை சரி செய்யும் விதமாகவும், மக்களின் வைப்பு நிதிக்கு உத்தரவாதம் அளிக்கும் விதமாகவும் வைப்புத்தொகை காப்பீடு மற்றும் கடன் உத்தரவாதக் கழகம் உருவாக்கப்பட்டது. மேலும் பட்ஜெட்டில் வைப்பு நிதிக்கான காப்பீடு ரூ.1 லட்சத்திலிருந்து 5 லட்சமாக உயர்த்தப்பட்டது. காப்பீடு தொகையை வாடிக்கையாளர்களுக்கு 90 நாட்களுக்குள் கிடைக்க வழி செய்துள்ளார்கள்.

98.3% வங்கிக் கணக்குகள் சட்டத்திற்குள் முழுமையாகப் பாதுகாக்கப்படும் என்று நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

ஒவ்வொரு வைப்பு நிதி கணக்குக்கும் ரூ.5 லட்சம் காப்பீடு வழங்கப்படுகிறது. மேலும் காப்பீடு தொகை ரூ.1 லட்சத்திலிருந்து ரூ.5 லட்சமாக உயர்த்தப்பட்டதால் நாட்டின் 93.5 சதவீத வைப்பு நிதி கணக்குகள் மற்றும் 50.9 சதவீத வைப்பு நிதி மதிப்பு இதற்குள் அடங்கிவிடும். மேலும் இந்த டிஐசிஜிசி சட்டத்தின் கீழ் இந்தியாவில் உள்ள அனைத்து அரசு, தனியார், கூட்டுறவு மற்றும் வெளிநாட்டு வங்கி வைப்பு நிதிகளும் காப்பீடு செய்யப்பட்டுள் என என்றும் அவர் கூறினார்.



ரேலா மருத்துவமனை

rela Hospital

[ A Unit of JR Super Speciality Hospital ]

**தழும்பில்லா ரோபோடிக்** கல்லீரல்
தான அறுவை சிகிச்சை மையத்தை
**மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்கள் துவக்கி வைக்கிறார்.

(C) KSL Media Ltd.



# மாண்புமிகு திரு. **மு.க.ஸ்டாலின்**

விழாவின் முன்னிலை

**பேராசிரியர் திரு.முகமது ரேலா**
தலைவர், ரேலா மருத்துவமனை

**பேராசிரியர் டாக்டர் திருமதி ஜெ.ஸ்ரீ நிஷா**
தலைவர், ஜே.ஆர். சூப்பர் ஸ்பெஷாலிடி மருத்துவமனை

29 ஜூலை 2021 | மாலை: 6.30 மணி முதல் | இடம்: ரேலா மருத்துவமனை, குரோம்பேட்டை, சென்னை

Tel 044-6666 7777 / 7788 | www.relainstitute.com




இங்கனம். ரேலா மருத்துவமனை மேலாண்மை மற்றும் ஆசிரியர்கள்
அரசாங்க வழிகாட்டுதல்களின்படி கோவிட்19 தடுப்பூசி சான்றிதழ் கட்டாயமாகும்

- உலகின் மிகப்பெரிய குழந்தைகள் கல்லீரல் மாற்று மையம்
- தெற்காசியாவின் மிகப்பெரிய கல்லீரல் புற்றுநோய் மையம்
- இந்தியாவின் மிகப்பெரிய கல்லீரல் மாற்று மையம்
- உலகின் மிகப்பெரிய கல்லீரல் திவிர சிகிச்சை பிரிவு

https://bit.ly/Relalaunch

zoom WATCH LIVE ON LIVE

BEST COMPLIMENTS FROM : **ANUSUYA FOUNDATION**

TRUSTEES : **J. L. SRI RAKSHIKA | E. SRI RITTHVIKA**